
April 1934

# செங்குந்த மித்திரன்

கலங்காது கண்டவினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்.



OFFICE OF THE REGISTRAR OF
27 JUL 1934

Y5Y2ந211,N27,ந
N34. ৬.4
208444

...மாணிக்கவாசக முதலியார்.
...ா. சபாபதி முதலியார்.

A. JAGANNATHACH...

# செங்குந்த மித்திரன்

(ஓர் உயரிய மாதாந்த வெளியீடு)

அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், அரசியல் அநுபவக் குறிப்புகள், உலக விநோதங்கள், விகடத் துணுக்குகள், சிறு கதைகள் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள்நாடு ரூ. **1—8—0** வெளிநாடு ரூ. **2—0—0**

## சந்தாதாரர்களுக்கு

1. செங்குந்த மித்திரனுக்கு ஜனவரி மாதமே (தைமீ) வருட ஆரம்பமாதலால் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி முதலாகவே பத்திரிகைகள் அனுப்பப்படும்.

2. புதிதாகச் சந்தாதாரராய்ச் சேர்வோர் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிட வேண்டும்.

3. சந்தாதாரர் விலாசம் மாறினால் சந்தா நெம்பரைக் குறித்து இங்லிஷ் மாதம் 10-ந் தேதிக்குள் தெரிவித்து விட வேண்டும்.

4. கடிதம் எழுதும்போதும், சந்தாத் தொகை அனுப்பும்போதும் தவறாமல் சந்தா நெம்பரைக் குறிப்பிடவேண்டும். பத்திரிகையின்மீது சுற்றப்பட்டுள்ள விலாசத்திற்கு முன் குறிக்கப்பெற்றிருப்பதே சந்தா நெம்பராகும்.

## விளம்பர விகிதம்

5000-க்கு மேற்பட்ட சந்தாதாரர்களை யுடையதும், இந்தியா முழுவதும் மட்டுமன்றி இலங்கை, இரங்கூன், பினாங்கு, தென்னாபிரிகா முதலிய வெளி நாடுகளிலும் சென்றுலவுவது மாகிய உயர்ந்த தமிழ் மாதப் பத்திரிகை 'செங்குந்த மித்திர'னில் உடனே உங்கள் வியாபாரத்தைப்பற்றி விளம்பரஞ் செய்யுங்கள்.

ஒரு தடவைக்கு முழுப்பக்கம் ரூ. 8

அரைப்பக்கம் ரூ. 4 கால்பக்கம் ரூ. 3



# சேங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின்
மாத வெளியீடு

ஆசிரியர் : பி. சே. மாணிக்கவாசக முதலியார்.

தொகுதி—அ | பவஹு சித்திரைமீ | பகுதி ச


## உள்ளடக்கம்


OFFICE OF THE
27 JUL 1934



பத்திரிகாசிரியர் முன்னுரை ... 174
நினைவுக் குறிப்புகள் .... 182
பக்கிரியின் ஜோஸ்யம் பலித்தது ... 189
அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம் ... 193
பூகம்பத்தால் விளைந்த புதுமைகள் ... 196
கதம்ப விநியோகம் ... 197
அன்னையர் ஆண்மை ... 198
விகடத் துணுக்குகள் ... 201
வைத்தியப் பகுதி ... 204
புதிய பீதாம்பர மாளிகைத் திறப்பு விழா ... 207
கமலசேகரன் .... 208
செங்குந்த யாத்திரைவாசி .... 211
மங்கையர்க் கரசியா ரன்பின் மாண்பு ... 215
நமது தபால் பெட்டி ... 216
வர்த்தமானம் ... 219
நெசவுத் தொழிலாளர் கஷ்டம் .... 227
மதிப்புரை ... 228
கிளர்ச்சி ... 230
நன்கொடை ... 234

208444
சென்னை-600 013

உ

ஓம்

# பத்திரிகாசிரியர் முன்னுரை

நாளு மிகுத்த கசிவாகி, ஞான நிருத்த மதைநாடும்
ஏழை தனக்கு மனுபூதி, ராசி தழைக்க அருள்வாயே
பூளை யெருக்கு மதிநாக, பூண ரளித்த சிறியோனே
வேளை தனக்கு சிதமாக, வேழ மழைத்த பெருமாளே

அருணகிரிநாதர்

## எல்லாம் விதியின் பயன்

சர்க்காருக்குப் பணம் இல்லையாயின் தேர்தலில் நிற்கும் அங்கத்தினர்களைக் கேட்டால் தருவதற்குத் தயாராக இருக்கிறார்கள். பணமில்லை என்ற காரணத்திற்காக சென்னை மாகாணம் தேர்தலை நிறுத்தியது ஒரு பெரிய அநியாயமென்றே கூறுவோம். இப்படி ஒத்திவைத்துக்கொண்டே போவதால் எத்தனை பேர்கள் மனமுடைந்து போகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியாதென்றே கருதுகிறோம்.

தேர்தல் வரப்போகிற தென்று ஓராண்டாகவே சிலர் ஊர் ஊராகச் சுற்றி அலைந்து தேர்தல் பிரசாரம் நடத்தினார்கள். அடகுவைத்தோ, அன்பர்களைக் கெஞ்சி இரந்தோ கடன்வாங்கி, பணத்தை மூட்டைகட்டிச் சிலர் வைத்துவிட்டார்கள். கார்களை இரவல் கேட்பவர்களும், வாடகைக்கு அமர்த்துபவர்களும் அவ்வேலையில் முனைந்திருந்தார்கள். இவ்வளவு பேர்களையும் திடீரென சென்னை அரசாங்கம் ஏமாற்றிவிட்டது பெருங் கொடுமையே யாகும்.

இதுவுமன்றி, தேசீய காங்கிரஸ் அனுமதித்தாலும் அனுமதிக்காவிட்டாலும் தேர்தலுக்கு நின்று ஒருகை பார்த்து விடுவ தென்றும், மந்திரி பதவிகளையும் ருசிபார்த்தே தீருவ தென்றும் சென்னை காங்கிரஸ்வாதிகள் பல மாதங்களாக முயன்று வந்தனர். அவர்களுக்கு இப்போது டில்லியில் கூடிய தலைவர்கள் செய்த முடிவு நல்ல துணையாகவும் முடிந்தது. டில்லி மகாநாட்டில் சுயராஜ்யக் கட்சியைப் புதுப்பித்துத் தேர்தலில் போட்டியிடுவதென்று முடிவு செய்தார்கள். சட்டசபைப் பிரவேசத்தில் நம்பிக்கை யுடையோரைத் தாம் தடுக்க விரும்பவில்லை



யென மகாத்மா காந்தியாரும் அறிவித்து விட்டனர். இவ்வளவு நல்ல சமயத்தில் சென்னை சட்டசபைத் தேர்தல் ஒத்திவைக்கப் பட்டது உண்மையில் சென்னை தேசீய வாதிகளுக்கு ஒரு பெரிய ஏமாற்றமேயாகும்.

என் செய்யலாம்? எல்லாம் விதியின் பயன். கைக்கெட்டினும் வாய்க்கெட்டாது போவதைக்குறித்து, ஓராண்டாகத் தேர்தல் முயற்சியில் ஈடு பட்டிருந்தோ ரனைவரும் வருத்தப்



படுவதை நாம் பார்க்கிறோம். இவர்களெல்லாம் 'பொறுத்தவர் பூமியாள்வார்' என்ற பழமொழியை எண்ணித் தேறுதல் அடைவார்களாக.

## ஷ–வ்ஸ்டரின் தயாள சிந்தை

அன்பே உருவாயும், அறிவே உருவாயும் கடவுள் இருப்பதாகக் கூறுகின்றனர். இவர்கட்கு நமது இந்திய அரசாங்கம் இருப்பதாக ஞாபகம் இல்லை என்றே தெரிகிறது. உலகத்தில் தயாள குணமோ, முற்றறிவோ இருக்கின்றனவாயின் அவற்றை அந்தக்கடவுளைக்காட்டிலும் அதிகமாக இந்திய சர்க்காரிடந்

தான் காண முடியும். தீக்குச்சிக்கும் சர்க்கரைக்கும் இந்திய சர்க்கார் விதித்த எதிர்வரி விவாதத்தின்போது சர்க்கார் கூறிய பதில் இதனை மெய்ப்பிக்கின்றது.

சர்க்கரைத் தொழில் இந்தியாவில் இப்பொழுதுதான் ஆரம்பதிசையி லிருக்கிறது. சர்க்கார் பாதுகாப்பு அளித்ததின் காரணமாக 15-வருடங்களில் ஏற்படுமென எதிர்பார்த்த அபிவிருத்தி இரண்டே வருடங்களில் ஏற்பட்டுவிட்டது. இன்னும் சிறிது உற்சாக மூட்டினால் இத்தொழில் மிக உன்னத நிலை அடையக்கூடும். 1931ல் சர்க்கார் 7 வருடங்கட்கு பாதுகாப்பளிப்பதாக வாக்களித்தமையினாலேயே சர்க்கரை மில்கள் கணக்கின்றிப் பெருகத்தொடங்கின. திடீரென்று சர்க்கார் இதற்கு எதிர்வரி விதிக்கத் துவங்கியது நம்பிக்கைமோசம் செய்வதேயாகும். இவைகளை யெல்லாம் தெளிவாக இந்திய சட்டசபை அங்கத்தினர்கள் எதிர்வரி விவாதத்தின்போது விளக்கிக் கூறியும் சர்க்கார் செவியில் அவை செவிடன் காதில் ஊதிய சங்கென பயனற்றுப் போயின. இந்த வாதங்களுக் கெல்லாம் முடிவாக சர்க்கார் நிதிமந்திரி சர் ஜார்ஜ் ஷுஸ்டர் பதிலளித்துள்ளதைப் பார்த்தால் அன்பும் அறிவும் தாங்கியவராய் நாம் காணத்தக்கவர் சர். ஷுஸ்டர் ஒருவரே எனப்புலனாகும். அவர் கூறியதாவது:-

'அபரிமிதமான பாதுகாப்பினால் ஆபத்தே ஏற்படும். ஜாவா சர்க்கரைக்கும் உள்நாட்டு சர்க்கரைக்கும் சம்பந்த மில்லையென்றும், உள்நாட்டிலேயே சர்க்கரைத் தொழிலில் போட்டியிருக்கிற தென்றும் அநேக அங்கத்தினர் கூறினர். அப்படியாயின் உள்நாட்டுச் சர்க்கரைக்கு எதிர்வரி விதிப்பதை இவர்கள் வரவேற்கவேண்டும். திறமையற்ற தொழிற்சாலைகளை இந்த வரியால் ஒழியவிடவேண்டும். எந்தத் தொழிற்சாலையும் முதலில் நாலைந்து யாண்டுகட்கு எவ்வித லாபமும் எதிர்பார்த்தல் கூடாது.

1932-ம் யாண்டில் 1,29,643 டன் இந்திய அரிசி ஜாவாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. 33-ல் இவ்வேற்றுமதி பாதிக்குமேல் குறைந்துவிட்டது. இதற்குக் காரணம், ஜாவா சர்க்கரைக்குப் பதில் இந்தியா முழுதும் இந்திய சர்க்கரை உபயோகப்படுவதேயாம். ஜாவாவில் சர்க்கரைத் தொழிலுக்குப் பதில் நெல் முதலிய சாகுபடி செய்யத்தொடங்கிவிட்டனர். இவ்விஷயங்களை பொதுமக்களுக்கு இனியும் உணர்த்தாமலிருந்தால் அதுவே நாங்கள் செய்யக்கூடிய பெருந்தவறாகும்.'



இந்த ஷுஸ்டரின் வாதத்தைப் பார்த்தபின் அன்பும் அருளும் வேறு யாண்டோ உள்ள ஒரு கடவுளிடம் இருப்பதாக நினைப்பது தவறல்லவா? ஷுஸ்டர் காட்டும் கருணையின் மிகுதி அந்தக் கடவுளிடத்திலும் இருக்குமா?

அவர் கூறுவதைச் சற்று கவனித்து ஆராய்வோம்.

முதலாவதாக அபரிமிதமான பாதுகாப்பினால் ஆபத்தேற்படுமாம். இவர்கள் செய்த அதிகப் பாதுகாப்பு யாதெனத் தெரியவில்லை. வெளிநாட்டுச் சர்க்கரைக்கு அதிகவரி விதித்ததைக் குறிப்பிட்டிருக்கலாம். அது, உள்நாட்டு சர்க்கரைத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்துடன் உயர்த்தப்பட்டதன்றென்பதும், இந்திய சர்க்கார் வருமானத்தை அதிகப்படுத்தவே உயர்த்தப்பட்டதென்பதும் அச்சமயம் நடந்த வாதத்தால் நன்கு விளங்கும்.

இரண்டாவதாக உள்நாட்டில் சர்க்கரைத் தொழிலில் போட்டி அதிகம் ஏற்படுவதையும், திறமையுடன் நடத்தப்படாத சர்க்கரை மில்களையும் எதிர்வரிபோட்டு ஒழிக்க வேண்டுமாம். போட்டி அதிகமாவதால் யாருக்கு நஷ்டம். போட்டியினால் பொதுமக்களுக்கு நன்மையே ஏற்படும். முதலாளிகள் ஒருவேளை லாபத்தில் சிறிது நஷ்டமடையலாம். அதனால் அரசாங்கத்திற்கு வந்ததென்ன? அதிகப்போட்டி அத்தொழிலின் வளர்ச்சியையன்றோ காட்டுகின்றது. திறமையுடன் நடத்தப்படாத மில்களுக்கு உதவி புரிந்து நன்னிலைப் படுத்தவேண்டியது சர்க்கார் கடமையாயிருக்க அதனைக் கொலை செய்வது நியாயமாகுமா? ஒருவனுக்குப் பலம்ற்ற குழந்தை தோன்றுமாயின் அதனைக் கொலை செய்துவிடுகின்ற தந்தையும், அவ்வாறு கொலை செய்யும் தந்தைக்குத் தண்டனை விதிக்காத அரசாங்கமும் இருக்குமாயின் ஷுஸ்டர் வாதத்தை நாம் ஏற்றுக்கொள்ளக்கூடும் அதே கொலைக்குற்றத்தையன்றோ இன்று ஷுஸ்டர் செய்கிறார்.

மூன்றாவதாக சர்க்கரைத் தொழில் இந்தியாவில் அதிகமாய்ப் பரவுவதால் ஜாவாவில் அத்தொழிலைக் கைவிடுத்து நெல் சாகுபடியில் கவனம் செலுத்துகிறார்களாம். எனவே இந்திய அரிசி ஏற்றுமதி குறைகிறதாம். இதில்தான் ஷுஸ்டரின் முற்றறிவு நன்கு வெளிப்படுகின்றது. சிலோனில் நெல் சாகுபடி விருத்தியடைவதையும் இந்திய அரிசி சிலோனுக்கு ஏற்றுமதியாவது வரவரக் குறைந்து வருவதையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இதற்கு ஷுஸ்டர் யாதுபதில் கூறுகின்றார்.

நான்காவதாக எந்தத் தொழிலிலும் முதலில் லாபம் அதிகமாக எதிர்பார்க்கக்கூடாதாம். அப்படியாயின் சர்க்கரைத் தொழிலில் லாபம் அதிகமாய்க் கிடைக்கிறதென்றும், அது இந்திய சர்க்கார் கண்களுக்குப் பொறுக்கவில்லை என்றும் தெரிகிறது. ஆரம்ப திசையிலுள்ள எத்தனையோ மில்களுக்கு 9% லாபமும் கிடைக்கவில்லை என்பதை பல அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டி இருக்கின்றனர். அப்படியே லாபம் கிடைப்பதாயினும் சர்க்கார் ஏன் அதைப் பார்த்து பொறாமைப்படுதல் வேண்டுமென்பது விளங்கவில்லை. எவ்வளவோ வாதங்களுக்கிடையே அம்மசோதா அரசாங்க அங்கத்தினர்களி னாதரவால் நிறைவேறிவிட்டது. அது மட்டுமா?

தீக்குச்சிக்கும் எதிர்வரி விதித்து விட்டனர். இது ஏழை இந்தியர்க்கு எவ்வளவு கஷ்டம் விளைவிக்குமென்பதைக் காட்டவேண்டியதில்லை. சர்க்கரை வரியினால் பாதகம் அடைகின்றவர்கள் மில் முதலாளிகள். ஆனால், தீக்குச்சி வரியினால் துன்பப்படுவோர் ஏழைகளேயாவர்.

இந்தியாவில் உற்பத்தியாகும் ஒவ்வொரு தீப்பெட்டிக்கும் காலணா தீர்வை விதிக்கப்படுகிறது. சாதாரணமாய் ஒரு தம்படி விற்கப்பட்ட தீப்பெட்டி இனி நான்கு தம்படி விற்கப்பட வேண்டும். இதனால் ஏழைகள் எவ்வளவு தூரம் கஷ்டப்படநேருமென்பதைக் கூறவேண்டியதில்லை. மின்சார விளக்குகளினிடையே வசிப்போர்க்கு அதிகமாய் தீப்பெட்டிச் செலவு இல்லையாயினும் ஏழைகட்கு நிமிடத்திற்கு நிமிடம் தீக்குச்சியின் அவசியம் ஏற்படுவதுண்டு. சர்க்கரை இல்லாமலே ஏழைகள் காலந்தள்ளுவர். தீக்குச்சி இல்லாமல் ஒரு சிலமணி நேரமாவது காலந்தள்ள முடியாதென்பது நிச்சயம். இத்தகைய தீப்பெட்டிக்கு வரிவிதித்தது மிக அநியாயமேயாகும்.

யார் எவ்வளவு சொன்னாலென்ன? இப்போதுள்ள இந்திய சட்ட சபையில் சர்க்கார் மசோதாக்களை ஆதரிக்க அனேக அங்கத்தினர்கள் தயாராக இருக்கின்றனர். எலக்ட்ரிக் ஸ்விச் தட்டியவுடன் ஒரு வீட்டிலுள்ள விளக்குகளெல்லாம் ஒரே மொத்தமாகத் திடீரெனப்பற்றி எரியத் தொடங்குவதுபோன்று, அரசாங்க நிருவாக அங்கத்தினர் கைதூக்கியதும் இந்த அங்கத்தினர்களின் கைகளும் தாமே உயரக் கிளம்பிவிடுகின்றன.

இந்த அங்கத்தினர்களின் கைகள் உண்மையிலேயே எலக்ட்ரிக் கைகள்தானோ என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. அர





சாங்க நிருவாக அங்கத்தினர் ஒருகையை உயர்த்தி ஓட்டு கொடுத்தபடியே மற்றொரு கையால் எலக்ட்ரிக் ஸ்விச்சை அழுத்தி எல்லாக் கைகளையும் உயர்த்துவதை மேலே படத்தில் காணலாம். அடிக்கடி கைகளை உயர்த்தி அலுத்துப்போகும் நியமன அங்கத்தினர்களின் இருப்பிடங்களில் எலக்ட்ரிக் கைகளை அமைத்துவிட்டால் வேண்டும்போது உயர்த்திக்கொள்ள மிகவும் சௌகரியமாயிருக்குமென்னும் அட்வான்ஸ் பத்திரிகையின் யோசனையை நாமும் முழுமனதுடன் ஆதரிக்கிறோம். இப்படி நிருவாக அங்கத்தினரின் சைகைப்படியே தோப்புக்கரணம் போடுகின்ற நல்ல பிள்ளைகள் இந்தியா சட்டசபையில் மெஜாரிடியாக இருக்கிற வரையில் அங்கு பொது மக்கள் எந்த ஒரு சிறிய நன்மையையும் எதிர்பார்க்க முடியாதென்பது தெளிவாய் விளங்குகின்ற விஷயமாகும். தீக்குச்சிக்கும் சர்க்கரைக்கு மட்டு மன்று. இந்த சட்டசபை இருக்கிற வரையில் இன்னும் எத்தனையோ வரிகள் புதிது புதிதாய் வந்துகொண்டே இருக்கலாம். எனவே, இந்தச் சட்டசபை கூடிய விரைவில் கலைக்கப்பட்டு புதுத்தேர்தல் நடக்க வேண்டுமென்பதும், இத்தேர்தலில் ஏழைகளின் துன்பத்தைப் போக்கக்கூடிய எண்ணம் இரத்தத்திலேயே ஊறப்பெற்ற அங்கத்தினர்கள் பெருவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்பதும் எமது ஆழ்ந்த பிரார்த்தனையாகும். ஆண்டவன் இப்பிரார்த்தனைக்குச் செவி சாய்ப்பானாக.

## நண்டுகளுக்கு நரியைக் காவல் வைப்பதா?

கைத்தறி நெசவுத் தொழிலின் உயிர்நாடி சிறிது சிறிதாய் ஒடுங்கி வருகின்றதென்றும், அரசாங்கத்தார் சற்றும் தாமதமின்றி காப்பளிக்க வேண்டுவது மிக அவசியமென்றும், இல்லையேல் அத்தொழில் தேச மக்களால் அடியோடு புறக்கணிக்கப்பட்டு விரைவில் அழிந்துபடுவது நிச்சயமென்றும், நெசவாளிகள் வர்த்தகர்களைக் குறை கூறுவதில் பயனில்லையென்றும், அகில இந்திய நெசவுத் தொழிலாளர் சங்கமமைத்துப் பெருங்கிளர்ச்சி செய்யவேண்டுமென்றும் சென்ற மாத மித்திரனில் எழுதியிருந்தோம். அதே கருத்துடன் சேலம், குகை ஸ்ரீ ஆர். வெங்கடேசன் அவர்கள் 'தமிழ் நாடு' தினசரியில் எழுதியிருந்த ஒரு குறிப்பை மற்றோரிடத்தில் வெளியிட்டிருப்பதை வாசகர்கள் படித்துப் பார்க்குமாறு விரும்புகிறோம்.

கைத்தறி நெசவு இந்தியர்களின் பண்டைய தொழில். பல ஆயிரம் யாண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்குப் பெருமையும், மற்ற தேசத்தவர்களின் கண் முன் இந்தியாவுக்கு ஒரு தனிச் சிறப்பும் நல்கியதெல்லாம் நெசவுத் தொழிலே என்பதில் யாதும் ஐயமின்று. சங்க நூல்களனைத்தும் இத்தொழிலின் மேம்பாட்டினை மிகச் சிறப்பித்துள்ளதிலிருந்து இது நன்கு தெளியப்படும்.

இத்தகைய உயரிய தொழிலை அழிய விடுதல் தேசத்திற்கே பெரிய கேடு விளைப்பதாக முடியும். ஒருநாட்டின் நலனுக்கும் நாகரிகத்துக்கும் அந்நாட்டுத் தொழிலின் வளர்ச்சியே சான்று பகர்வதாகும். இந்திய நாட்டின் ஜீவாதாரத் தொழிலான நெசவுத்தொழில் நாளுக்கு நாள் ஒடுங்கிவருதலை எந்த இந்தியரும் பொறுத்துக்கொண்டிருப்பது தகுதியுடையதல்ல. நெசவாளிகள், தங்கள் உயிர் போகிறதெனக் கூறுகின்றனராயினும் அதுபற்றி யாதொரு கிளர்ச்சியும் செய்கின்றாரில்லை. சங்கங்களமைத்துத் தமது குறைகளை சர்க்காருக்குத் தெரிவிக்கின்றார்களில்லை. சைதாப்பேட்டை, மதுரை, சேலம் ஆகிய இடங்களில் நெசவுத் தொழிலாளர் சங்கங்கள் உருக்கொண்டு எழுந்தனவாயினும், அவை உள்ளூர் வர்த்தகருடன் போரிடத் தோன்றினவேயல்லது நெசவுத் தொழிலழிவிற்கு மூலகாரணமாயுள்ளதைக் கண்டு அதனை விலக்குதற்கு அல்ல. இப்படி மௌனமாயிருப்பதால், அரசாங்கம் கைத்தறிக்காரர்களை அடியோடு புறக்கணித்துவிடுகின்றது.

நெசவுத்தொழில் பாதுகாப்புப்பேச்சுகள் எழுகின்ற சமயங்களிலும், அது சம்பந்தமான கமிஷன்கள் நியமிக்கப்படுகின்ற



சமயங்களிலும் இந்திய அரசாங்கம் ஆலை முதலாளிகளையே கலந்து கொள்வதையும் அவர்களையே அங்கத்தினர்களாக நியமித்தலையும் வழக்கமாகக் கொண்டுள்ளது. அவர்கள் தமது ஆலைகட்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ளுகின்றனரேயல்லது கைத்தறித்தொழிலைப்பற்றி கவனிப்பதே இல்லை.

ஜினிவாவில் ஜூன்மாதம் 4-ந்தேதி கூடப்போகும் 18-வது சர்வதேசத்தொழில் மகாநாட்டுக்கு நெசவுத் தொழிலாளர் பிரதிநிதியாக ஆமதாபாத் மில் முதலாளிகள் சங்கத் துணைத் தலைவர் ஸ்ரீ சேத் கஸ்தூரிபாய் லால்பாயையும், இதர தொழிலாளர்களின் பிரதிநிதியாக ஸ்ரீ யமுனாதாஸ் மேத்தா அவர்களையும் இந்திய அரசாங்கம் அனுப்பத் தீர்மானித்துள்ளதாகத் தெரிகின்றது. இருவரும் இருபெரு மில் முதலாளிகள். இவர்கள் தமது நலத்திற்கே வாதாடக்கூடும். ஏழைத் தொழிலாளர்களின் நிலை எவ்வாறிருக்கிறதென்பதை அவர்கள் எடுத்துக்காட்டப் போவதில்லை. அது அவர்களுக்கு உண்மையில் தெரியவும் தெரியாது. இப்படி அரசாங்கம் கைத்தறி நெசவாளிகளைப் புறக்கணித்து மில் முதலாளிகளையே பன்முறையும் நியமித்து வருகின்றது. இந்த மேத்தா போன்றவர்களை நியமித்ததனாலேயே அவர்கள் இங்கிலாந்துக்கும் ஜப்பானுக்கும் அதிக சலுகை காட்டி, அவை ஏராளமாய்த் தம் சரக்குகளை மிகக் குறைந்த விலைக்கு இந்தியாவில் விற்று, கைத்தறி நெசவுத் தொழிலைக் கொலை புரியுமாறு அனுமதித்துவிட்டனர்.

ஜபல்பூரில் 31-3-34-ந் தேதி கூடிய தொழிலாளர் மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீ ஜாப்வாலா அவர்கள் 'முதலாளிகளின் ஆதிக்கத்திலுள்ள நாகரீகமானது சமூகத்தின் ஒரு பாகத்தை நல்ல நிலையிலும் மற்றொரு பாகத்தை மோசமான நிலையிலும் வைத்துள்ளது. முதலாளிகள் தங்கட்கு அதிக லாபத்தைக் கோரி எழுத்துவாசனையற்ற ஏழைகளுக்குத் தவறு செய்துவருகின்றனர். தொழிலாளர்கள் தங்கள் தொழில்களுக்கேற்றபடி சங்கம் அமைத்துக் கொண்டு உழைக்க முன்வர வேண்டும். ஒன்றுபட்டுழைக்குமாறு தொழிலாளிகளுக்கு அறிவுறுத்துகிறேன்' என்று தமது தலைமையுரையில் குறிப்பிட்டிருப்பதை ஒவ்வொரு நெசவுத் தொழிலாளியும் கவனித்துத் தமக்குள் உள்ள சிறு மனத்தாங்கல்கள், வேற்றுமைகள் இவற்றைக் களைத்தெறிந்து, சமூக வேற்றுமைகளையும் ஒதுக்கிவைத்துவிட்டுக் கைத்தறி வளர்ச்சியில் ஒன்றுபட்டு முயற்சி செய்யுமாறு வேண்டுகிறோம். வாய்மூடி மௌனிகளாய் இருப்பதற்கு இது காலமல்ல என்பதைக் கைத்தறியாளர்களனைவரும் உணர்வார்களாக.

# நினைவுக் குறிப்புகள்

## நகர சர்வாதிகாரிகள்

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டந்தான். சென்னை மாகாண நகர சபைகளின் கூத்து, மந்திரிகளுக்குப் பெருதவியாய் முடிந்தது. எத்தனையோ பேர்வழிகள் மந்திரிகளின் தயவை எதிர்பார்த்து அவர்கள் பங்களாக்களை 24 மணி நேரமும் முற்றுகை யிட்டுவந்தனர். அவர்களுக்கெல்லாம் நகர கமிஷனர் உத்தியோக நியமனம் ஒரு நல்ல சந்தர்ப்பம் அளித்தது. கடனில் நடைபெறும் நகர சபைகளும் கமிஷனர்களுக்குக் கொழுத்த சம்பளம் அள்ளி இறைக்கவேண்டியதாய்விட்டது. இந்தச் சம்பளத்தோடாவது கமிஷனர்கள் திருப்தி யடைவதாய்த் தெரியவில்லை.

தங்கள் சர்வாதிகாரத்தனத்தை உபயோகப்படுத்தி நகர வருமானத்தைப் பன்மடங்கு அதிகமாக்கிக் காண்பித்துத் தங்கட்கு நற்பெயர் தேடிக்கொள்ள முனைந்து வேலை செய்வதாகத் தெரிகிறது. இவர்கள் தங்களை ஹிட்லர், முசோலினி, டால்பஸ் போன்ற சர்வாதிகாரிகளாகக் கருதிக்கொண்டன ரென்றே நினைக்கவேண்டி யிருக்கிறது. இம் மூன்று சர்வாதிகாரிகளும் ஜெர்மன், இடாலி, ஆஸ்ட்ரியா ஆகிய தங்கள் நாட்டு ஏழை மக்களின் கஷ்ட நிவாரணத்திற்குத் திட்டங்கள் வகுத்து அவர்களின் ஆசியினைப் பூரணமாய்ப் பெற்று கண்கண்ட தெய்வங்களெனப் போற்றப்படுகிறார்கள். ஆனால், நமது நகர் சர்வாதிகாரிகளின் நிலையோ இதற்கு முற்றும் மாறுபட்டது. ஏழைகளைப் பற்றிய எண்ணம் இவர்களுக்குச் சிறிதாவது இருப்பதாகத் தெரியவில்லை.

தறிகாரர்களின் நிலைமை எப்படிப்பட்டதெனச் சொல்லவேண்டியதில்லை. இந்திய கைத்தறி நெசவுத் தொழில் 104 டிக்கிரிக்கு மேலும் கடுமையான வெப்பநோயில் கிடந்து, கடந்த மூன்றாண்டுகளாக வதைந்துகொண் டிருக்கிறது. இந்த நிலையிலுள்ள கைத்தறிகளுக்கு வரி போடுவதில் ஒரு சர்வாதிகாரியின் மூளை தீவிர உழைப்பு எடுத்துக்கொண்டதாக அறிந்து நாம் சிரிக்காம லிருக்க முடியவில்லை. அவரது மூளையில் ஏதேனும் சிறியதொரு துளை விழுந்து கொஞ்சம் கோளாறு ஏற்பட்டிருக்க வேண்டுமென்றே கருதுகிறோம்.

'வாழ்வதா, வீழ்வதா' என்ற பிரச்சினையில் மூழ்கிக் கிடக்கும் ஏழைத் தொழிலாளரின் தறிகளுக்குக் காஞ்சீபுரம் நகர சபைக் கமிஷனர் புதிதாய் வரி போட்டனராம். இதுவன்றி அவர்கள் வீடுகளுக்கும் வரியை மிக உயர்த்தியதோடு தென்னை மரங்களுக்கும் வரி விதித்தனராம். ஏறக்குறைய 200 ரூபாய் சம்பளம் வாங்குகின்ற அவர் மாதம் 2 ரூபாய் வருமானம் தருகின்ற தறியில் ஒரு மாதம்வரை இடுப்பொடிய உட்கார வைக்கப்படுவாராயின் அப்போதுதான் அவருக்கு அத் தொழிலின் வருமானமும் கஷ்டமும் விளங்கக்கூடும்.



தறி வரியினாலும், தென்னை மர வரியினாலும், வீட்டுவரி உயர்வினாலும் காஞ்சீபுர முழுதும் கடந்த ஒரு மாதமாக அல்லோலப் பட்டுப் போய் விட்டது. அதுவரை நகரசபை அங்கத்தினர்கள் அனைவரும் தலைவர் உட்பட கமிஷனருக்கு ஒத்து ஊதாமல் இவ்வரிகளை எதிர்த்துப் பேசியதற்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தறி வரியும், தென்னை வரியும் நீக்கப்படுமென நிச்சயமாய்த் தெரிகிறது. வீட்டுவரி உயர்வையும் நிராகரித்து இந்தக் கஷ்ட காலத்தில் பொதுமக்களுக்குத் துன்பம் நேராதபடி அங்கத்தினர்கள் பாதுகாக்குமாறு வேண்டுகிறோம்.

புதிய வருமானத்தை உண்டுபண்ணுவதற்காகத் தெருத்தெருவாய்ச் சுற்றி அலைந்த கமிஷனர் கண்களில், பல ஆண்டுகளாக ஒரு கூடை மண்ணாவது வாரிக்கொட்டி புதுப்பிக்கப்படாத சிறிய வீதிகள் பல இருப்பதும், அங்கு விளக்கு குழாய் முதலிய வசதிகள் அடியோடு இல்லாமலிருப்பதும், மக்கள் நடமாட முடியாதபடி மலஜலக் கழிப்பால் துர்நாற்றம் வீசிக்கொண் டிருப்பதும் தென்பட்டிருக்குமென்று நம்புகிறோம். அவைகளைச் சீர்திருத்த அவர் என்ன விதமான முயற்சி மேற்கொள்ளப் போகிறாரென பொதுமக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதை கவனித்து அவர் வேண்டுவன செய்வாரென்றே நம்புகிறோம்.

இது போன்றே, சிதம்பரம் நகரசபைக் கமிஷனராலும் அங்கு சிறிது தொந்தரவு ஏற்பட்டிருக்கிறது. சிதம்பர நகர சபையைச் சேர்ந்த நாவிதர்களனைவரும் லைசென்ஸ் பெற வேண்டுமென அவர் உத்தரவு பிறப்பித்ததால் அவர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனராம். இதுவும் நல்லதொரு முடிவை யடையுமென எதிர்பார்க்கின்றோம். நகர கமிஷனர்கள் சிக்கனத்தை மேற்கொண்டு முனிசிபாலிடிகளுக்கு நல்ல கீர்த்தியைத் தேடித்தர முயலவேண்டுமேயன்றி வாழ்க்கை நடத்துவதற்கே முடியாது மக்கள் திண்டாடும் இக்கஷ்ட காலத்தில் புதிய வரிகளைக் கற்பிப்பது பொருத்தமாகா தென்றே நாம் அபிப்பிராயப்படுகிறோம்.

## மாயவலை வீசாதே

பிரிட்டிஷ் சர்க்கார் ஆண்டுதோறும் ராவ்பகதூர் திவான்பகதூர்களைப் படைத்து, எப்போதும் தம் கைப் பிள்ளைகள் குறையாம லிருக்கும்படி பார்த்துக்கொள்வது வழக்கம். இந்தக் கௌரவப் பட்டங்கள் அரசாங்கத்தின் ஒரு மாயவலை என்பதில் ஐயமில்லை. இவ்வலையில் வலிய சென்று விழும் இந்தியர்கள் பல்லாயிரக் கணக்காக உளர். இதன் பொருட்டுத் தமதுசொத்து முழுதையும் இழக்கத் தயாராயுள்ள அண்ணாவிகளும் உண்டு.

ஆனால், கானடா வாசிகளின் போக்கு வெகு விந்தையா யிருக்கிறது. 1919-ம் ஆண்டில் கானடா பார்லிமெண்டில் கௌரவப் பட்டங்கள் வழங்கக் கூடாதென ஒரு தீர்மானம் அவர்களால் நிறை

வேற்றப்பட்டது. அது முதல் 14 வருடங்களாக பிரிட்டிஷார் அங்கு பட்டங்கள் வழங்குவதே இல்லை. இதற்கு மாறாக இவ்வாண்டுப் பிறப்பின்போது இருவருக்கு 'நைட்' பட்டமும், மூவருக்கு சில்லரைப் பட்டங்களும் பிரிட்டிஷ் அரசர் வழங்கினராம். அவ்வாறு வழங்கப்பட்டதை எதிர்த்துப் பல கட்சியிலுள்ள தலைவர்களும் கிளர்ச்சி செய்து வருகிறார்கள். அதைப்பற்றி ஒரு கட்சித் தலைவர் பேசியபோது; பட்டங்களை வழங்கி பார்லிமெண்டு அங்கத்தினர்களை மயக்குவது பழைய சம்பிரதாயம். இது சர்க்கார் கட்சிக்கு ஆள் பலம் தேடச் செய்யும் சூழ்ச்சியாகும் என்று குறிப்பிட்டுள்ளார். இத்தகைய மனோநிலை இந்தியர்களுக்கு ஏற்படும் காலம் எப்பொழுதோ?

### பிரகஸ்பதிகள் மகாநாடு.

அலகாபாத்தில் சமீபத்தில் ஒரு மகாநாடு கூடியது. அதில் அநேக பிரகஸ்பதிகள் கூடி தங்கள் அறிவின் திறமையையும், தமது ஆட்சியின் பெருமையையும் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். அங்கு கூடிய போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் செய்த தீர்மானங்களில்,

(1) வக்கீல்களை ஜெயில் விசிட்டர்களாக நியமிக்கக் கூடாது;

(2) உத்தியோகஸ்தரல்லாத விசிட்டர்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கக் கூடாது;

(3) 'ஏ,' 'பி' வகுப்புக் கைதிகளுக்கு சிறை உடைகளே தரவேண்டும். சொந்த உடைகளை அவர்கள் உடுப்பதால் தப்பித்துப் போக வழி ஏற்படுகிறது;

(4) சவுக்கடி தண்டனையை மாகாண சர்க்கார் உத்தரவின்றி நிறைவேற்ற அனுமதி இருக்கவேண்டும்;

(5) உண்ணாவிரதம் இருக்கும் கைதிகளைத் தனியே வைத்துக் கசையடி கொடுக்கவேண்டும்;

என்ற ஐந்தும் முக்கியமானவை. இவ்வளவு மோசமான தீர்மானங்களையா அவர்கள் நிறைவேற்றினார்கள் என எண்ணாதீர்கள். அது அவர்கள் தப்பன்று. எந்தக்காலத்திலும் அவர்கள் முடிச்சுமாறிகள், சோம்பேறிகள், அயோக்கியர்கள். கொலைக்காரர்கள் இவர்களோடு நெருங்கிப் பழகும் சந்தர்ப்பம் உடையவர்களாதலின் ராஜீய குற்றவாளிகளையும் அதே கண்கொண்டு பார்ப்பது இயல்பேயாகும். இத்தகையோர்க்கு 'ஏ' 'பி' வகுப்பு சாதாரண மக்களுக்கு வழங்கப்படுவதில்லை யென்பதும், உயர்ந்த அந்தஸ்தும், செல்வாக்கும், கௌரவமும் ஒருங்கே வாய்ந்தவர்களுக்கே அளிக்கப்படுகிறதென்பதும், இத்தகைய மேம்பாடுடையோர் ஏமாற்றிவிட்டு ஓடிவிடமாட்டார்களென்பதும் புலப்படாதது விந்தையன்று.

### சொர்க்க நரகங்கள்

ஆகாயத்தில் சொர்க்கமும், பாதாளத்தில் நரகமும் இரு வேறிடத்தில் இரண்டும் தனித் தனி உள்ளனவென்பது புராண சித்தாந்தம். ஆனால், இந்த மண்ணுலகில் இவை இரண்டும் ஒரே இடத்தில் ஒன்றாக இருப்பதாக ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது.



புது டில்லி தேவேந்திர நகரமென்பதும், அங்கு வாழும் வெள்ளையர்களும் வைசராயும் தேவர்களும் தேவேந்திரனு மாவார்களென்பதும் உண்மையே. ஆனால், தேவலோகத்திலும் கோவணாண்டிகளாகிய சப்தரிஷிகள் முதலியோர் இருப்பதாகப் படிக்கிறோமல்லவா? இந்தப் புதுடில்லியிலும் கோவணத்திற்குத்தானும் வழியற்ற ஏழை இந்தியர்கள் ஆயிரக் கணக்காக இல்லாமற் போகவில்லை. அங்குள்ள இந்தியர்களின் வாழ்க்கையையும் வெள்ளையரின் வாழ்க்கையையும் ஒப்பிட்டால் நரகத்திற்கும் சொர்க்கத்திற்குமே ஒருவாறு பொருத்தமாகும். இந்த மாறுபட்ட இரு நிலைகளைக் கண்ட வெள்ளையர்களுக்கே மனம் சகிக்கவில்லை யென்றால் அந்த நிலை எப்படி யிருக்க வேண்டுமென நீங்களே யூகித்துப் பாருங்கள்.

பேர் பெற்ற ஆங்கில பத்திரிகாசிரியராகிய ஸ்ரீ வால்டர் ஹரிஸ் என்ற வெள்ளையர் புது டில்லியைப் பற்றி ஒரு புஸ்தகம் எழுதி வெளியிட்டுள்ளார். அதில் அவர் குறித்துள்ள உண்மைகளைப் படிக்கும் இந்தியர் உள்ளம் துடிதுடிக்கு மென்பதில் ஐயமில்லை.

"நான் புது டில்லி ரயில்வே ஸ்டேஷனில் இறங்கியதும் தரையில் படுத்துறங்கும் தரித்திர இந்தியர்களைக் கண்டேன். சகிக்க முடியாத குளிரில், குழந்தை குட்டிகளுடன், திறந்த வெளியில் வெறுந்தரையில் படுத்துறங்கினர். நான் இரவில் சென்றதால் வீதியில் உறங்கும் இந்தியர் மீது என் மோட்டார் ஏறிவிடாதபடி மிக மெதுவாய் ஓட்டினேன். அவர்கள் சரியான உடையின்றி கிழிந்த ஆடைகளைப் பாதி நிர்வாணமாகத் தரித்திருந்தனர். குழந்தைகளின் கதி அதிக பரிதாபகரமானது. நோயுற்று வறுமையால் வாடிய முகங்களுடன் காணப்பட்டனர். இக் கொடிய காட்சியைக் கண்ட என் மனம் வருந்தாமலிருக்க முடியுமா? வெள்ளையர் நிலையோ இதற்கு முழுதும் மாறாக இருந்தது. வைசராய் மாளிகை நூற்றுக் கணக்கான பேர் வசிக்கக் கூடிய மிகுந்த விசால முடையது. அவ்வரண்மனை எங்கும் பளிங்குக் கற்கள் பதிக்கப்பெற்றுள்ளன.

சாப்பிடும் இடமோ பெரியதொரு மண்டபம். அங்கு நடக்கும் விருந்துக்கோ அளவில்லை. விருந்துக்காக பல வெள்ளையர் எப்பொழுதும் காத்துக்கொண் டிருக்கின்றனர். தங்க சரிகை வேலைப்பாடுடன் கூடிய சிகப்பு உடைதரித்த காவலர்கள் பலர் காவல் புரிகிறார்கள்.

இந்த, எணிக்கும் எற்றக்கோலுக்கு முள்ள வித்தியாசத்தைக் கண்டு என் உள்ளம் உருகிவிட்டது. இது, உலக புதுமைகளில் ஒன்றென நினைத்துக் கொண்டேன். இதைப்பார்த்தபின் பிரிட்டிஷாருக்கு ஆன்மா இருப்பதாகக் கூறுவதற்கில்லை, அவர்கள் கொள்கையை கண்டிக்காம லிருப்பதற்கில்லை"

ஒரு வெள்ளையர் இப்படிக் கூறுவாராயின் அங்குள்ள நிலைமை எவ்வளவு மோசமானதென்பதை, அம்மம்ம! நினைப்பினும் உள்ளம் குமுறுகின்றது.

### இங்கிலாந்தும் இந்தியாவும்

31-3-34-ந் தேதியோடு முடிவான சென்றவருடத்திய வரவு செலவு திட்டத்தில் பிரிட்டிஷ் சர்க்காருக்கு 3,11,48,000 பொன் மிச்சம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் வருட ஆரம்பத்தில் மிச்சம் ஏற்படக்கூடுமென எதிர்பார்த்த தொகை 13,00,000 பொன்தான். எதிர்பார்த்த மிச்சத்திற்குமேல் 24 மடங்கு அதிகமாய் மிச்சம் ஏற்பட்டிருக்கிறது.

அயர்லாந்திலும் 40 லட்சம் ஸ்டர்லிங் வரவு செலவில் மிச்சம் ஏற்பட்டிருக்கிறது. ஏறக்குறைய எல்லா தேசங்களிலும் இதே நற்செய்தி கிடைத்து வருகிறது.

இந்தியாமட்டும் இதற்குப் புறம்பானது. இந்திய சர்க்காரின் நிதிமந்திரி சர். ஜார்ஜ் ஷுஸ்டர் இதை முழுதும் மறைக்க முயன்றாலும் சென்ற ஆண்டு ஆரம்பத்தில் வகுத்த வரவு செலவு திட்டத்தைக் காட்டிலும் அதிக செலவு ஏற்பட்டிருக்கிற தென்பதும், வரவு செலவில் ஒரு பெரிய துண்டு விழுந்திருக்கிற தென்பதும் தெளிவாக ஏற்பட்டிருக்கிறது.

லண்டன் நிர்வாகிகளும் டில்லி நிர்வாகிகளும் ஒரே வெள்ளையர். ஷுஸ்டரும் வெள்ளையரால் தேர்ந்தெடுத் தனுப்பப்பட்ட அசல் ஆங்கிலேயர். அப்படி யிருந்தும் வரவு செலவில் இங்கிலாந்து மிச்சம் காட்டி இருக்க, இந்தியாவில் அதிக செலவு ஏற்பட்டிருப்பதின் காரணமென்ன?

லண்டனில் ஆளுவோரும் வெள்ளையர், ஆளப்படுவோரும் வெள்ளையர். இந்தியாவிலோ?

---

இனாம்! இனாம்!
ஒரு வருட சந்தா இனாம்.
ஒரு வருட முன் பணத்துடன்
ஐந்து புதிய சந்தாதாரர்களைச் சேர்த்து
அனுப்புவோர்க்கு
ஒரு வருட செங்குந்த மித்திரன்
இனாமாக அனுப்பப்படும்
எங்கே! மித்திரன் வளர்ச்சியில்
உங்களுக்குள்ள அபிமானத்தைக் காட்டுங்கள்

## கங்கை நீரின் தூய்மை

ஒருதடவை காலரா (வாந்திபேதி), வயிற்றுளைச்சல் ஆகிய நோய்கள் அதிகமாக இருந்தபோது பல பிணங்கள் கங்கையில் எறியப்பட்டன. சாதாரணத் தண்ணீரில் அவ்வாறு போடப்பட்டால் எத்தனையோ விஷக்கிருமிகள் உற்பத்தியாகித் தண்ணீர் கெட்டழிந்து போகும். ஆனால் கங்காஜலத்தை யாராய்ந்த பிரஞ்சு டாக்டர் டி. ஹெரில்லியால் என்பவர் பிணங்களின் இரண்டடி தூரத்தில்கூடக் கிருமிகளைக் காணவில்லை. ஆதலால் அவர் ஆச்சரியப்பட்டுக் காலரா, வயிற்றுளைச்சல் ஆகிய நோயுடையவர்களிட மிருந்து விஷக்கிருமிகளை எடுத்து வளர்த்து அவற்றின்மீது கங்காஜலத்தை விட்டுச் சூடேற்றிப் பார்த்தார். ஒரு நிமிஷத்தில் கிருமிகள் முழுதும் அழிந்து போயின. பின் இறந்த கிருமிகளுள்ள ஜலத்தை உயிருள்ள கிருமிகள் வசிக்கும் வேறொரு குழாயில் விட்டுப் பார்த்தார். அப்போதும் எல்லாக் கிருமிகளும் அழிந்து பட்டன. இங்ஙனம் பலமுறை விட்டுப் பார்த்துக் கங்காஜலம் கிருமி நாசகாரி யென்பதைக் கண்டு கொண்டார்.

பின்னர் நோய்வாய்ப்பட்டுக் கங்காஜலத்தை யருந்தி நோய் நீங்கிய மனிதர்களின் கழிவுப் பொருட்களை எடுத்துத் தம் பரீட்சா முறையைச் சீர்திருத்திக்கொண்டார். டாக்டர் டி. ஹெரில்லி மேலும் கங்காஜலத்தைப் பரிசோதித்து ஆராய்ச்சி செய்து அது பல கிருமிகளைக் கொலை செய்து நோயை வாசியாக்கும் என்று கண்டிருக்கிறார். இதுகாறும் சுமார் 2000 விதமான கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சுமார் 100 மாதிரியானவைதான் நோயை உற்பத்தி செய்யும். இவற்றில் பலவற்றைக் கங்காஜலத்தால் குணப்படுத்த முடியும்.

—டாக்டர் நெல்சன்.

---

## பத்திரிகா நிருபர்களுக்கு எச்சரிக்கை

சமீபத்தில் இத்தாலி சர்வாதிகாரி ஸ்ரீ முசோலினியை பத்திரிகைக்காரர் சங்கப் பிரதிநிதி பேட்டி கண்டபோது முசோலினி தெரிவித்ததாவது:—

பத்திரிகைக்காரர்களைக் காண்பதில் எனக்கு அதிக மகிழ்ச்சி ஏற்படுவதில்லை. நான் இவ்வாறு சொல்வதற்கு மன்னிக்கவும். அநேக பத்திரிகைக்காரர்கள் சமயோசிதமாக நடந்து கொள்கின்றனர். இது அறவே கூடாது. நானும் பத்திரிகைத்

தொழிலில் ஈடுபட்டிருக்கிறேன். இந்த விஷயத்தில் என்மீதே எனக்கு வெறுப்பு உண்டு. பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்டவர்கள், எவரையும் எச்சமயத்தும் அதிகமாகப் புகழக் கூடாது. பத்திரிகையில் ஆரம்ப முதல் கடைசிவரை தேச முற்போக்கிற்கான விஷயங்களைத் தவிர வேறு ஒன்றும் இருத்தல் கூடாது. விளம்பரங்கள் பிரசுரிப்பதிலுங்கூட அவை தேச அபிவிருத்திக்கான விளம்பரங்களாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். விஷயங்களை மிகைபடுத்தாமலும், சிறிதும் உண்மைக்கு மாறுபடாமலும் உள்ளவாறே சுருக்கமாய் வெளியிட முயல்வது தேச முற்போக்கிற்குப் பத்திரிகைகள் புரியும் பேருபகாரமாகும்.

## நிருப நேயர்களுக்கு

மித்திரனில் வெளியிடுவதற்குரிய விஷயங்கள் எல்லாவற்றையும் ஆசிரியர் விலாசத்திற்கும்,

பத்திரிகை சம்பந்தமான இதர விஷயங்களோ, மணியார்டர்களோ மானேஜர் விலாசத்திற்கும்,

கல்வி நிதி சம்பந்தமான கடிதங்கள் கல்வி நிதி அமைச்சர் விலாசத்திற்கும் அனுப்பப் பெறுதல் வேண்டும்.

எக்கடிதமும் எவருடைய தனிப்பெயர் குறித்தும் அனுப்புதல் கூடாதெனத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

(பத்திராதிபர்)

## போட்டிப் பரிசு !

அடுத்த மாத இதழைப் பாருங்கள்.

# பக்கிரியின் ஜோஸ்யம் பலித்தது

[புதுவை. ஜே. ரவூல் இலேர்]

சந்தான கிருஷ்ணன் சென்னை பிரெசிடென்சி காலேஜில் வாசித்து 18 வயதிலேயே பி. ஏ. பட்டம் பெற்றவன். கல்லூரியை விட்ட மாத்திரத்தில் கல்வியின் கரையைக் கண்டுவிட்டதாக நினையாமல், மேலும் வீட்டிலேயே வாசித்து, எம். ஏ. பாஸ்பண்ணி விட்டான். பள்ளியில் வாசிக்கையில் எந்தப் பரீக்ஷையிலும் தோல்வி என்பதையே அறியான். சுறுசுறுப்பு, ஊக்கம், குறித்தகாலம் தவறாமை முதலிய உயர் குணங்களுக்கு உறைவிடமானவன். சிறிது வேடிக்கைப் பிரியன். ஒவ்வோர் சமயத்தில் விளையாட்டிற்கென்று ஏதாவது வேஷம் பூண்டால், அவனது பிராண சிநேகிதர்கள்கூட அவனைக் கண்டுபிடிக்க முடியாது. ஹிப்னடிசம், மெஸ்மெரிசம், மாக்னெடிசம் முதலிய விஷயங்களிலும் சிறிது பயிற்சி உடையவன். உயர்தரக் கல்லூரிகளில் வாசிக்கும் ஆடவர் பெண்டிர் ஆகிய இருபாலரிடத்திலும் இவனுக்கு நட்பு உண்டு. ஆனால், ஒழுக்கத்தையே விரதமாகப் பூண்டவன். இவன் முகத்தில் ஒரு வசீகரம் உண்டு.

கல்வியால் அறிவும், அறிவால் ஒழுக்கமும், ஒழுக்கத்தால் உயர்வுமுடைய சந்தான கிருஷ்ணன் எம். ஏ. பாஸ் செய்த சில தினங்களுக்குள் புஷ்ப லீலாவதி என்னும் அதி ரூபவதியான ஒரு இளங்கொடியை மணந்தான். லீலாவதி ஆங்கிலம் ஒரு சிறிதும் அறியாள். தமிழ் நன்றாய் வாசித்தவள். புத்தி கூர்மை யுடையவள். ஈசுரபக்தி நிறைந்தவள். சங்கீதப் பிரியள். நாயகன்பால் உள்ளன்புடையவள். அவள் ஆங்கிலம் படிக்கவில்லை யென்றால் அதற்கு அவளது பெற்றோரே காரணம். அவர்கள் "பெண்களுக்கு ஆங்கிலப் படிப்பா! மோசம், மோசம்" என்று இருதரம் சொல்பவர்கள். எந்தப் படிப்பாய் இருந்தால் என்ன? இருவரும் படித்தவர்களே. ஆகவே, இவர்கள் வாழ்க்கை அநேக விதத்தில் காதலரிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்ட இன்ப வாழ்க்கையாகவே இருந்தது.

ஆனால், சந்தான கிருஷ்ணன் ஸ்திரீகள் பலரிடமும் நட்பு பாராட்டுவது லீலாவதிக்கு சிறிது மனக்குறைதான். இக்களங்கத்திற்கு அவளுடைய சிநேகிதிகளில் சிலரே சமயம் நோக்கி வித்தூன்றினர். "என்னடி! உங்க ஆத்துக்காரு, எல்லாப் பெண்களிடமும் ரொம்ப சல்லாபமா யிருக்கிறாரே! விசேஷமாய் மூக்குக்கண்ணாடி போட்ட பெண்களென்றால் அதிக நட்பு பாராட்டுகிறார்". என்று சொல்லி வந்தனர். உண்மையில் சந்தானமோ தன் மனையாளை தனிமனை நிறுத்தி பிறர் மனைக்கேகும் பேதை அன்று. அவன் இதர பெண்களிடம் பாராட்டும் நட்பு சகோதரத்துவமே.

இப்படியாக ஓர் நாள் காலை சந்தானத்தைத் தேடிக்கொண்டு ஒரு மெல்லியல் வந்தாள். ஆங்கில முறையில் சந்தானம் அவளுக்குக் கைலாகு கொடுத்துத் தன் அறைக்கு அழைத்துக்கொண்டு போய் ஆசனத்தமர்த்தினான். க்ஷேமம் விசாரித்தபின் வந்த காரியம் யாதென வினவினான். தான் ஒரு பத்திரிகை நடத்துவதாயும், அதற்கு நமது சந்தானம் விஷயதானம் புரிந்தும், பல சந்தாதாரர் சேர்த்துத் தந்தும் ஒல்லும் வகையெல்லாம் ஆதரிக்கவேண்டுமெனவும் அந்நங்கை நல்லாள் கேட்டுக்கொண்டாள். சந்தானமும் இம்மகத்தான காரியத்துக்குத் தன்னாலியன்ற உதவி யளிப்பதாய் வாக்களித்தான். மெல்லியலும் மீண்டும் கைலாகு கொடுத்து அகன்றாள். சம்பாஷணை ஆங்கிலத்திலேயே நடந்தது.

இதை லீலாவும் தற்செயலாய் கவனிக்க நேர்ந்தது. ஒரு இளம் பெண் வந்ததும், தன் கணவன் புன்முறுவலோடு அவளுக்குக் கைலாகு கொடுத்துத் தன் அறைக்குள் அழைத்துக் கொண்டுபோய் உபசரித்து வெகுநேரம் தனக்குத் தெரியாத ஒரு பாஷையில் பேசிக் கொண்டிருந்ததும் எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பதுபோலாயிற்று. சிநேகிதிகள் இட்ட விதை இன்று நன்றாய் உரம்பெற்று, முளைத்துச் செழித்தது. பத்திரிகையின் ஆசிரியை வெளியே சென்றது தான் தாமதம். "என்ன மாமா! அந்நிய ஸ்திரீயோடு கைலாகு கொடுத்து உல்லாசமாய்ப் பேசிக்கொண் டிருக்கிறீர்களே. உங்கள் ஏகபத்தினி விரதத்தை இன்றுதான் கண்டேன். திருவாசகத்தைப் படித்துச் சிவன் கோவிலை இடிப்பது போல் சொல்லொன்றும் செயலொன்றுமா யிருக்கிறது. தாங்கள் பல இடங்களிலும் ஏகபத்தினி விரதங் காத்தல் பற்றியும், ஒழுக்கத்தின் உயர்வைப்பற்றியும் அடிக்கடி உபந்யசிப்பதெல்லாம் வெறும் மேடைப் பேச்சுதான்போலிருக்கிறதே. இந்த அம்மாளிடம் நீங்கள் நடந்து கொண்ட செயலுக்குப்பின், நானாயிருந்தால்"...என்று, சரமாரியாய் ஆத்திரத்துடன் மொழிந்தனள் லீலாவதி.

சந்தானம், "பெண்ணே! என்ன, பெரும்பழி சொன்னாய். உன்னிடம் நான் எத்தனை தரம் சொல்லுவது. ஒரு ஸ்திரீயினிடம் கைலாகு கொடுத்ததாலும், பேசிக்கொண்டிருந்ததாலுமே ஒரு ஆடவன், ஒழுக்கம் குன்றியவனாய்விடுவானா. இது விஷயத்தில் உன் மனதைத் தெளிவுபடுத்த இப்பொழுது அவகாசமில்லை. நான் ஒரு லெக்சருக்குப் போகவேண்டும்" என்று அரை மனதாகவே விடைபெற்று வீட்டைவிட்டுப் புறப்பட்டான்.

லீலாவும் சமையல் வேலையில் கவனத்தைச் செலுத்தினாள். திடீரென்று 'நன்மையான காரியங்கள், புதுமையான சேதிகள்' என்று தெருவில் ஒரு குரல் கிளம்பியது. தனக்குத் துணைக்காகத் தன்னோடு இருந்த ஒரு கிழவியை அழைத்துக்கொண்டு லீலா தெருவாசற் படியண்டை வந்தாள். நீண்டு வளர்ந்த தாடி, பெரிய தலைப்பாகை, கையில்ஜோதிடம் சொல்லும் சுவடி, கழுத்திலே ஜெபமாலை இத்தனை அலங்காரங்களோடு பக்கிரி ஒருவன் தோன்றினான். 'நன்மையான காரியங்கள்; புதுமையான சேதிகள்; அம்மணிக்கு யோகம் வருகிறது;



இவ்வீட்டில் ஒரு சிறு கலகம்; சம்பாதனையை நாடி யோசனை; நாகூர் ஆண்டவர் பகவான் அருள்செய்வார். கடவுள் ஒருவரே; எல்லாம் பகவான் கிருபை' என்றான். லீலாவதிக்கோ ஒருவரும் ஆடவரில்லாத நேரத்தில் பக்கிரி உள்ளே நுழைந்தது பயம். வந்த பக்கிரியோ கடவுள் நாமத்தை உச்சரித்தே நடக்கும் காரியங்களையும் திரிகாலமும் உணர்ந்தவன்போல் பேசுகிறான். ஆனால், 'கடவுள் பேரைச் சொல்லி எத்தனை அக்கிரமங்கள் நடக்கவில்லை' என்று சிந்தித்துக் கொண்டிருக்கையிலேயே, 'இந்தச் சுவடியில் நூலைப் போடுங்கள், அம்மணி' என்றான் பக்கிரி. சிறுபெண்ணன்றோ? அப்படியே நூலைப் போட்டாள். விழுந்த இடம் இராமர் வனவாசம். (படித்தான் பக்கிரி, மனனம் செய்துவைத்திருந்த பாடத்தை.) 'உங்களுக்கு இப்பொழுது சில கவலைகள் உண்டு. உன்புருஷன் வெகு சமர்த்தன். மிகுந்த படிப்பாளி. ஆனால் மாயகிருஷ்ணனைப்போல் விளையாட்டு அதிகம். உத்தியோக மில்லாக் குறையு முண்டு' என்றான். இதற்குமேல் என்ன வேண்டும்! லீலாவுக்கு பயம் நீங்கி நம்பிக்கை பலப்பட்டது. பிறகு, பக்கிரி ஜோதிட சுவடியை எட்ட வெகு தூலையில் வைத்துத் தன்கைக்குக் கிட்டும்படி செய்தான். 'இந்தச் சுவடி கிட்டியதுபோல் உத்தியோகம் கிட்டவும், உன்பர்த்தா உன்மட்டிலேயே முழு அன்பை செலுத்தவும் இந்தா அம்மணி தாயத்து. பகவான் நாமத்தை உச்சரித்து இதை அணிந்துகொள். அச்சா, அல்லாரே, அல்லா!'

அதற்குள் கூடவிருந்த கிழவி, 'அவருக்கு நாலு அரிசி போட்டனுப்பம்மா' என்றாள்.

பக்கிரி: 'எனக்கு அரிசி எதற்கம்மணி? உங்கள் பீடைதொலைய, அதோ தொங்கும் வெள்ளை அங்கவஸ்திரம், உங்கள் தலையைச் சுற்றிக் கொடுத்தால் போதும்; இரவில் குளிர் பொறுக்க முடியவில்லை. உங்கள் பெயரைச் சொல்லி சுற்றிக்கொள்ளுவேன். நாகூர் ஆண்டவன் கிருபைசெய்வார் உங்களுக்கு' என்றான். வெளியில் சென்ற கணவர் வருகிறநேரம் ஆயிற்று. சமையலோ ஆகவில்லை. வந்த பக்கிரியோ மாயா வித்தைக்காரனா யிருக்கிறான். லீலாவதிக்கு ஒன்றும் தோன்றவில்லை. பக்கிரி விரும்பியபடியே அங்கவஸ்திரத்தைக் கொடுத்து அகற்றினாள். கிழவியோ, 'பல்லிக்கருவானே' என்று, பக்கிரி சென்ற பிறகு அவனை ஏசினாள்.

இரண்டு நாட்கள் கழிந்தன. ராயல் தியேட்டரில் சகுந்தலா நாடகம். அயன் ராஜபார்ட் பி. எஸ். வேல் நாயர். சந்தானம் அன்று சீக்கிரமாகச் சாப்பிட்டு நாடகத்துக்குப் போகப் புறப்பட்டான். வெள்ளை அங்கவஸ்திரத்தைக் கொண்டுவரும்படி லீலாவைக் கேட்டான்; தானும் தேடினான். லீலாவதிக்கோ குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தது; சிறிது சமாளித்துக்கொண்டு 'அந்தப் பழசு எதற்கு? இந்த சால்வையை அணிந்து செல்லுங்கள்' என்றாள். சால்வையைப் போர்த்தால் வியர்த்துக்கொட்டும்; நான் கேட்பதை சீக்கிரம் கொண்டுவா' என்று கடுகடுத்தான் சந்தானன். லீலாவுக்கு முகம் மாறிற்று. நடந்ததை நடந்தவாறே சொல்லிக் கண்ணீர் உகுத்து நின்றாள்

"பெண்ணே! ஒரு பெண்ணிடம் நான் கைலாகு கொடுத்து பேசியதற்காக 'நானு யிருந்தால் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாவேன்' என்றாயே. இப்பொழுது நீ, அந்நிய ஆடவனிடம் பேசியதுமட்டு மல்லாமல் என் அங்கவஸ்திரத்தையும் கொடுத்திருக்கிறாயே. இதற்கு நீ என்ன செய்துகொள்ளப் போகிறாய்! என் அன்பே! இதோ பார்; நீ பக்கிரிக்குக் கொடுத்த அங்கவஸ்திரம்" என்று, ஷர்ட்டுக்குள் மறைத்து வைத்திருந்ததை எடுத்துக் காட்டினான். "லீலா! பக்கிரிக்கு நீ தானம் செய்த விஷயம் எவ்வளவு களங்க மற்றதோ, அத்தன்மையதே நான் அந்நிய ஸ்திரீகளிடம் கொண்டுள்ள நட்பும். ஆனால், இனி பக்கிரி போன்று வருவோரை நம்பாதே. அன்னாருக்கு கழுத்திலே ஜெபமாலை, கக்கத்திலே கன்னக்கோல். தவிரவும் ஆராயாமல் என் மீது வீண் சந்தேகம் கொள்ளுவதை அறவே ஒழித்துவிடு. ஆய்ந்தோய்ந்து பாராதான் வாழ்க்கை சாந்தனையுந் துன்பந்தரும், என்பது முதுமொழி" என்று சந்தானம் மனங்கனியக் கூறினான். 'மாமா, இதைவிட எனக்குப் பாடம் வேண்டுமோ' எனக்கூறி, லீலாவதி வெட்கத்தினால் தலை குனிந்தாள். பக்கிரியாக வந்தவர் தன் கணவனே எனத் தெரிந்து, 'இந்த இரவில், பக்கிரிக்கு இங்கென்ன வேலை' என்று இயம்பி, கடைக்கண்ணால் அளவு கடந்த அன்பை வீசி இறைத்தாள். உடனே இருவருமாக நாடகத்துக்குப் புறப்பட்டனர். அதன் பின், அவர்களுக்குள் வேற்றுமையோ, கலகமோ தோன்றியதே இல்லை.

---

## சிறுகதைப் பரிசுகள்

தமிழ்நாட்டு மக்களின் வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்டவல்ல சிறுகதைகளுக்கு அவ்வவற்றின் தரத்திற் கேற்றபடி ஐந்து ரூபாய் வரையில் பரிசளிக்கப்படும். கதைகள் சொந்தக் கற்பனையாகவும் இரசனை நிரம்பியதாகவு மிருத்தல் வேண்டும். கதையின் அமைப்பு, தமிழ் நடை, இன்பச் சுவை இவைகளைக் கொண்டே பரிசுத்தொகை தீர்மானிக்கப் பெறும்.

## அதிசயம்! அற்புதம்! ஆச்சரியம்!

### பூனைக்குட்டியை வளர்க்கும் நாய்

அமெரிக்காவில் ஒக்லா ஹோமா என்னுமிடத்திற்குச் சமீபத்திலுள்ள ரோண்ட் என்னுமிடத்தில் ஒரு நாய் ஒரே குட்டி போட்டது. அந்த குட்டி திடீரென இறந்துவிட்டது. மற்றோரிடத்தில் ஒரு பூனை 6 குட்டிகள் போட்டிருந்தது. பூனை இல்லாத நேரம்பார்த்து நாய் அந்தப் பூனைக்குட்டிகளை எடுத்து வந்து வளர்த்து வந்தது. பூனை திரும்பிவந்து வெகு நேரம் அலைந்தபின், நாய் பால் கொடுப்பதைப் பார்த்துத் தானும் சேர்ந்துகொண்டு இரண்டும் ஒன்றாக இருந்தே வளர்க்கத் தொடங்கின.

### ஒரே மரத்தில் 23 வகைப் பழங்கள்

சான் பிரான்ஸிஸ்கோ என்னு மிடத்தில் ஒரு பாடகர் ஒரு மரம் வளர்த்திருக்கிறார். அதில் 23 வகையான பழங்கள் பழுக்கின்றன.

### 20 வருடங்கட்குப் பின் ஆணாகக் காணப்பட்டாள்

மார்தாடோத் என்னும் பெயருடன் 20 வருடகாலமாக ஒரு தொழிற்சாலையில் ஒரு பெண் வேலை செய்துவந்தாள். அவள் தனியாகவே வாழ்ந்து வந்தாள். அவள் சமீபத்தில் மாரடைப்பினால் இறந்து விட்டாள். டாக்டர் வந்து பார்த்தபோது மார்த்தா ஒரு ஆணாக இருக்கக் கண்டு ஆச்சரிய முற்றார்.

### தகப்பனை மணந்த பெண்

ஒரு வருடத்திற்குமுன் மணந்த ஒரு இளம் பெண், தனக்குப் பிறந்த குழந்தையைப் பதிவு செய்யச் சென்றபோது குழந்தையின் தகப்பனார் தனது புருடனாக இல்லை யென்றும்; அவள் தனது தகப்பனையே மணந்திருப்பதாக ரிஜிஸ்டரில் தெரிகிற தென்றும் கூறக் கேட்டு ஆச்சரியமாய்விட்டாள். அவளுடைய கல்யாணத்தைப் பதிவு செய்த குமஸ்தா, அவளது தகப்பன் பெயரை புருடன் கலத்தில் பதிவு செய்துவிட்டதாகத் தெரியவந்தது. இப்போது அவள் தனது குழந்தை, தன் தகப்பனுக்குப் பிறந்ததல்ல வென்பதையும் தனது புருடனுக்குப் பிறந்த தென்பதையும் கோர்ட்டு மூலம் உத்தரவு பெறவேண்டி யிருப்பதோடு, பழைய கல்யாணத்தை ரத்து செய்து தனது புருடனுடன் புதிதாக மறுபடியும் கல்யாணச் சடங்கு நிறைவேற்றவேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது.

### மனிதர்களின் வயதை நீடிப்பது எப்படி?

இது நெடுநாளைய கேள்வி. இக்கேள்விக்கு பதில் கூற அநேகர் முயன்று வருகிறார்கள் என்பது உலகப் பிரசித்தம். கொலம்பியா யூனிவர்சிடியைச் சேர்ந்த டாக்டர் ஷெரிமன் என்பவர் 10 சத விகிதமாவது மனித வயதை உயர்த்த முடியுமெனக் கூறுகிறார்.

ஷெரிமன் ஆராய்ச்சிச்சாலையில் எலிவர்க்கத்திற்கு (மனிதனுக்கு வேண்டிய புஷ்டி தரும் ஆகாரமே இவற்றிற்கும் வேண்டியதாகும்.) பரம்பரையாக நல்ல உணவு அளிக்கப்பட்டு வந்தது. ஆகாரத்தை விஞ்ஞானப் புலமையின்படி மாற்றி அளிக்கப்பட்டதில் வயது மட்டும் உயர்ந்ததோ டமையாது வயதில் சுறுசுறுப்பாயிருக்கும் வாலைப் பருவமும் கடைசிவரை இருந்ததாம்.

## ஆண் பெண்ணாக மாறி, மீண்டும் ஆணாக மாறினாள்

ஹந்தவாடி ஜில்லா தோங்குவாவில், பாத்தே என்னும் யர்மிய மாதினிடம் இளமை முதல் பணிப் பெண்ணாக இருந்த ஒருத்திக்கு இரண்டாண்டுகட்கு முன் திடீரென வயிற்று வலி கண்டது. டாக்டர் சோதனையிட்டதில் பெண்ணுறுப்புக்கள் ஆணுறுப்புக்களாக மாறி வருவதை அறிந்தார். உடனே அப்பெண் தலையை கிராப் செய்து, ‘ஷர்ட்’ அணிந்து, ஒரு பெண்ணுடன் சம்பந்தப்பட்டு ஆணாகவே வாழ்க்கை நடத்தி வந்தாள். சில மாதங்கட்கு முன்பு, மீண்டும் ஆணுறுப்புக்கள் மாறி பெண்ணுறுப்புக்கள் தோன்றின. அதனால் தக்க மருந்துண்டு மீண்டும் அவ்வாறு மாற்றமடையாதபடி செய்துகொண்டு ஒரு ஆணைக் கல்யாணம் செய்து வாழ்ந்து வருகிறாளாம்.

## போலி இருதயம்

மாஸ்கோ நகரில் பாக்டாசாரோவ் என்னும் ரஸாயன ஆராய்ச்சிச் சாலையில் ஒரு போலி இருதயம் செய்யப்பட் டிருக்கிறது. இது மனிதர்களின் இருதயம்போல் துடித்துக்கொண் டிருக்கிறது. யாராவது இருதய சிகிச்சைக்காக வந்தால் டாக்டர்கள் நோயாளியின் இருதயத்தை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக போலி இருதயத்தை வைத்துவிடுகிறார்கள். நோயாளி இறந்துவிடாமல் அந்தப் போலி இருதயம் ரத்த ஓட்டம் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. நோயாளியின் இருதயத்தை வெளியில் எடுத்துப் பழுது பார்த்து அதை மீண்டும் பொருத்திவிட்டுப் போலி இருதயத்தை எடுத்துவிடுகிறார்கள்.

## கலியுக விநோதப் பிறப்பு

வட இந்தியாவில் ஹோரான் என்னுமிடத்தில் ஒரு குழந்தை பிறக்கும்போதே பற்களும் தாடி மீசையும் வளர்ந்திருந்தன. தேகமெங்கும் ரோமம் அடர்ந்திருந்தது. பிறந்ததும் பேசத் தொடங்கியது. கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சரியான விடை கூறுகிறது. பால் மட்டும் சாப்பிடுகிறது. இது ஒரு கலியுக அதிசயம் போலும்.

## தூங்காத மனிதர்

எலிஸபெத் துறைமுகத்திலுள்ள மிஸ்டர். வில்லியம் கோல்ஸன் என்னும் 70 வயது நிறைந்த வியாபாரி ஒருவர், சென்ற 40 வருடங்களாக தூங்குவதே இல்லை. அதனால், வியாதியினாலோ அல்லது அசதியினாலோ அவர் கஷ்டப்படுவதில்லையாம்.

## அதிக குழந்தை பெற்ற மாது

வியன்னா நகரில் 45 வயதுள்ள ஒரு பெண்ணுக்கு 29 குழந்தைகள் பிறந்துள்ளன. அவற்றில் 23 ஆண்குழந்தைகள். மூத்த குழந்தைக்கு இப்போது வயது 19. இவள் உலகிலேயே அதிக குழந்தைகள் பெற்றவளாவள்.



## நாய் வயிற்றில் யானை, புலிக்குட்டிகள்

மோல்மீன் சைமரோவில் வசிக்கும் ரிடையர்டு இன்ஸ்பெக்டர் ஊப்போ என்பவருடைய வீட்டில் நாயொன்று இரண்டு குட்டிகள் போட்டது. அதில் ஒன்றின் முகம் யானையை ஒத்திருந்ததாம். அதற்கு துதிக்கை, முறம் போன்ற காது, தந்தம் இருந்தனவாம். உடல்மட்டும் நாயின் உடலாக இருந்ததாம். மற்றொரு குட்டி புலியைப்போல் முகம், உடல் முழுதும் வரிகள் யாவும் இருந்தனவாம். இரண்டு குட்டிகளுக்கும் கண்கள் இல்லை. இரண்டும் 3 மணி நேரமே உயிருடன் இருந்தன.

## ஒருவனுக்கு 35 கல்யாணங்கள்

வார்ஸா நகரில் ஒருவன் 34 கல்யாணங்கள் செய்து கொண்டான். சமீபத்தில் 35-வது கல்யாணம் செய்யப்போகும் சமயத்தில் போலீசாரால் கைது செய்யப்பட்டான்.

## கிழட்டுத் தம்பதிகள்

டர்ஹாமில் 74 வயதுள்ள ஒரு மாப்பிள்ளை 71 வயதுள்ள பெண்ணை மணந்துகொண்டார்.

## பிரபல கோடீசுரரின் சகோதரர் இன்சால்வென்டானார்

அமெரிக்காவின் பிரபல கோடீஸ்வரரான ஹென்றி போர்டின் சகோதரர் வில்லியம் போர்ட் இன்சால்வென்ஸி கொடுத்திருக்கிறார். இவர் ஹென்றிபோர்டினிடம் எவ்வித பண உதவியும் பெற மறுக்கிறார்.

## பூனைகளை விழுங்கிய பாம்பு.

வடார்க்காடு ஜில்லா, செங்கம் தாலுக்கா சந்தைப் புதுப்பாளையம் அடுத்த உண்ணாமுலைப்பாளையத்தில், ஒரு வீட்டில் ஒரு பாம்பு, வீட்டார் காண இரண்டு பூனைக்குட்டிகளை விழுங்கிவிட்டது. அதையறிந்த மார்ச்சாலஞான சு. முருகேசக் கவுண்டர் கருப்பு கம்பளியை மார்பிடை கட்டி தரையளவும் தொங்க விட்டு, அக்கம்பளி சகாயத்தால் அந்த பாம்பின் வாலைப் பிடித்து கரகரவென்று சுற்றின உடன் இரண்டு பூனைக் குட்டிகளும் அப்பாம்பின் வயிற்றிலிருந்து உயிருடன் விழுந்தனவாம்.

## மூன்று கண் பல்லிகள்

நியூஜிலந்தில் உள்ள ஒருவித பல்லிகளுக்கு மூன்று கண்கள் உள்ளன. இவற்றிற்கு சாதாரணமா யிருப்பதற்குமேல் நெற்றியில் ஒரு கண் அதிகமா யிருக்கிறது. வேறு எந்த நாட்டிலும் இவ்வித மூன்று கண் பல்லிகள் இல்லாமையால் அவற்றை அந்த அரசாங்கம் பாதுகாக்க விசேஷ சிரத்தை எடுத்துவருகிறது.

## பூகம்பத்தால் விளைந்த புதுமைகள்

### வெள்ளையரை பூமி விழுங்கி உமிழச் செய்தது

பூகம்பம் மக்களைத் திண்டாடும்படிச் செய்திருப்பது மல்லாமல் அனேக அற்புதங்களையும் விளைத்திருக்கிறது. இதைப்பற்றி பல விஷயங்கள் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. பீகார் பூகம்பத்தின் போது கல்கத்தாவில் சிறிது அதிர்ச்சி இருந்தது. அச்சமயம் ஒரு வெள்ளையர் வீதியில் போய்க்கொண் டிருந்தபோது பூமி திடீரெனப் பிளந்து அவரை விழுங்கிவிட்டது. சிறிது நேரத்தில் மற்றொரு அதிர்ச்சி அவரை வெகு வேகமாய் வெளியில் கொண்டுவந்து தள்ளியது. கந்தகப் புகையினாலும், விபத்தினாலும் பலத்த காயங்களுடன் வெள்ளையர் உயிர் தப்பினார்.

### களைப்பாற்றும் தேன் தந்தது

டார்ஷா என்னுமிடத்திற்குக் கிழக்கே 3 மைல் தூரத்தில் ஜிர்ஜீரி என்னும் கிராமத்தருகில் பூகம்ப அதிர்ச்சியால் ஒரு பெரிய மரம் முறிந்து விழுந்துவிட்டது. அதன் கீழ் ஒரு முஸ்லீம் இளைப்பாறத் தங்கிய போது மரத்தில் தேன் கசிவதைப் பார்த்தார். அதைக் கையால் தொட்டு நாக்கில் ருசிபார்த்தார். தேன் இனிமையாக இருந்தது மட்டுமின்றி களைப்பையும், அவருக்கிருந்த ஒருவகை நோயையும் நிவர்த்தித்து உற்சாக மூட்டியது. மற்றும் பல துளிகளைச் சாப்பிட அவர் பூரண குணமடைந்தார். இதைப் பலருக்கும் அவர் அறிவிக்கவே நோயுடையா ரனைவரும் சென்று தேனைப் பருகி குணமடைந்து வருகிறார்கள். காலையில் 6 மணி முதல் 12 மணிவரை தேன் வடிகிறதாம்.

### துஷ்ட விலங்குகளை சாந்தமாக்கியது

பூகம்பம் கொடிய காட்டு மிருகங்களை மிக சாந்தப்படுத்திவிட்டது. இதைப்பற்றி லண்டனில் வெளியாகும் 'ஸண்டே டைம்ஸ்' பத்திரிகையில் ஒரு குறிப்பு வெளிவந்திருக்கிறது. பூகம்ப அதிர்ச்சியால் துஷ்டவிலங்குகள் திடுக்கிட்டுப் பயந்து ஓடின. இவை இமயமலை அடிவாரத்தில் பெருவாரியாகத் தங்கியுள்ளன. இவை பயத்தினால் துஷ்டத்தனத்தை விட்டு சாந்தமாக வாழத் தொடங்கியுள்ளன. புலி, கரடி, சிறுத்தை, யானை, பெரிய மலைப்பாம்புகள் இவைகளெல்லாம் சாந்தமானது பெரிய ஆச்சரியமே. இவை இப்போது மனிதர்களைக்காண அஞ்சுகின்றன. இவை கூச்சவிடவும் பயப்படுகின்றன. மனிதரோடு சாதாரணமாய்ப் பழகிவருகின்றன. இது ஒரு பெரிய விந்தையே.

---

**மித்திரன் வளர்ச்சியுற விரும்பினால்**

இன்றே உங்கள் சந்தாவை

அனுப்பி வையுங்கள்.

## கதம்ப விநியோகம்

ஜப்பான் அரச மாளிகையி லிருந்து இறந்துபோன 168 குதிரைகளின் ஆவிகளுக்கும், 19 பசுக்களின் ஆவிகட்கும் டோக்கியோ நகரில் ஒரு பிரார்த்தனை நடைபெற்றது.

---

இத்தாலி, ஸ்பெயின், கிரீஸ், ஜப்பான் உட்பட ஏழு நாடுகளில் உப்பு அரசாங்க மக்களின் ஏகபோகமாய் இருக்கிறது. இந்தியா, பிரான்ஸ், நெதர்லண்ட், பிரேஸில், சீனா முதலிய 6 நாடுகளில் அரசாங்கத்தார் உப்புக்கு வரி விதிக்கிறார்கள். சீனாவில் உப்பு வரிதான் அரசாங்கத்தின் ஆணிவேர்.

---

இத்தாலியின் சர்வாதிகாரியான முஸோலினி அந் நாட்டிலுள்ள பெரிய குடும்பங்களின் தாய்மார்கள் 92 பேரை வரவழைத்து ஒவ்வொருவருக்கும் ஒரு பதக்கம் பரிசளித்தார்.

---

உலகில் மொத்தம் 56,62,01,000 கிருஸ்தவர்களும் 21,90,30,000 முஸ்லிம்களும், 21,04,00,000 இந்துக்களும் இருக்கிறார்கள்.

---

உலகில் 18 கோடி பேர் ஆங்கிலமும், 12 கோடி பேர் ஜெர்மன் பாஷையும், 9 கோடி பேர் ரஷிய பாஷையும், 6 கோடி பேர் பிரஞ்சு பாஷையும் பேசுகிறார்கள்.

---

பூமி தன்னைத் தானே மணிக்கு 1000 மைல் வேகத்தில் சுற்றிக்கொள்ளுவதோடு சூரியனையும் 66,600 மைல் வேகத்தில் சுற்றி வருகிறது.

---

சந்திரன் பூமியிலிருந்து சுமார் 2,40,000 மைல் தூரத்திலிருக்கிறது. அதன் வெளிச்சம் பூமிக்கு வந்து சேர $1\frac{1}{2}$ விநாடி பிடிக்கிறது.

---

நாம் வசிக்கும் இந்தப் பூமியினுடைய தரையின் விஸ்தீரணம் 5,72,55,000 சதுர மைல். ஜலத்தின் விஸ்தீரணம். 13,96,85,000 சதுரமைல்.

---

லண்டனிலுள்ள நீதிபதியான ஸ்ரீ சார்லஸ் என்பவர் சமீபத்தில் ஒரு கைதிக்கு சிறைத் தண்டனை விதித்தார். அடுத்த நாள் அந்த நீதிபதிக்கு கைதியினிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அதில் 'நீதிபதிக ளென்பதெல்லாம் வெறும் பொய். நீதிபதிகள் யாவரும் முட்டாள்கள். உங்களைப்போலொத்த நீதிபதிகள் யாவரும் நரகத்தில் விழுந்து வேகவேண்டும். இங்ஙனம் உங்கள் நன்மை விரும்பி' என்று குறிப்பிட்டிருந்தது.

---

மீன்களில் அதிக புத்தி நுட்பமும், யூகமும் உடையவை உஷ்ணப் பிரதேசங்களாகிய தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, மடகாஸ்கர், இந்தியா முதலிய இடங்களில் வசிக்கின்றனவாம்.

# அன்னையர் ஆண்மை

[S. இராமலிங்கம், திருநெல்வேலி]

பூமகளும் நாமகளும் பொருந்திப் புகழ் பரவிய இப்பரதகண்டத்தில், பண்டை நாட்களில் சீவகன், திவிட்டன், சிவாஜி முதலிய பல வீரர்கள் தோன்றிச் செயற்கரிய தீரச்செயல்களைச் செய்து சிறப்புற்று வாழ்ந்தார்கள். தம் உயிரழிய நேர்ந்தாலும் உள்ளங் கலங்காது, போரிற் சென்று சாதலையே ஆண்மை மிக்க அவ்வீரர்கள் காதலித்து வந்தார்கள். அவ்வீரர் மரபில் வந்த ஆண்மக்களே யன்றிப் பெண்மக்களும் வீரத்தின் வீறு தோன்ற அதிதீரச் செயல்களைச் செய்து சிறந்துவிளங்கினார்கள். அருமைக் கணவனாம் கோவலன், கொல்லன் சூழ்ச்சியால் வெட்டுண்டு இறந்ததைக் கேட்டு, வீர உணர்வொடு வீறுகொண்டெழுந்து வேந்தனிடஞ் சென்று, தன் "கணவர் கள்வர் அல்லர்" என்பதையும், பாண்டியன் செய்த பெரும்பிழையையும், கற்பினுக் கணியாங் கண்ணகி செவ்விதில் விளக்கிக் காட்டுவளாயினள். கானகத்தே தன்னாருயிர்க் காதலனாம் சத்தியவானது உயிரைக் கூற்றுவன் கவர்ந்து செல்ல, கற்புநிலை தவறாத சாவித்திரி எமனோடு எதிர்த்து வாது புரிந்து, கணவனுயிரை மீளவும் பெற்று மகிழ்வாளாயினள். இத்தகைய வீரமங்கையர் இன்னும் பலர் உளர்.

பண்டைநாள் பருவமுதிர்ந்த நரைமயிர்க் கிழவி யொருவள் தன்னருமை மகனை அமருக்கு அனுப்பினாள். அவனும் போய் அமர் செய்து, பகைவர் விடுத்த பகழிகளால் உடல் முழுவதும் துளைபட்டு, இறுதியில் இருபிளவாகி இறந்து வீழ்ந்தான். இதனைச் சிலர் கண்டு விரைந்து வந்து அவன் அன்னையிடம் "அம்மா! உன்மகன் போரில் புறங்காட்டி ஓடிவிட்டான்" என்று, உண்மைக்கு மாறாக உரைத்தார்கள். அதுகேட்ட அக்கிழவி, வீர வெறியோடு கிளர்ந்து எழுந்து "அவ்வாறு அவன் போரில் புறங்காட்டி யோடியது உண்மையானால் அவனுக்குப் பாலூட்டி வளர்த்த என் முலைகளை யறுத்து எறிவேன்" என்று வஞ்சினங் கூறி, வாள் கைக்கொண்டு படுகளம் புகுந்து, அங்கு தன்னருமை மகனுடல் இருபிளவாகிக் கிடக்கக் கண்டாள். அதுகண்ட அம்முதுமகள் துன்ப மெய்தாது, அற்ற துணிகளை யெடுத்து மூத்தங் கொடுத்து அவனைப் பெற்ற காலத்தினும் பெருமகிழ்ச்சி யடைந்தாள். பின்னர், அவ்வீர-தீர மகனது பெயரை ஓர்



கல்லில் எழுதித் தன் மரபுக்கோர் பெரும்பேறு செய்தாள். இதனை,

"நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் "சிறுவன்
படையழிந்து மாறினன்" என்று பலர் கூற
மண்டமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்
முலையறுத் திடுவன் யான்' எனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துளவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே."

என்ற புறநானூற்றுச் செய்யுளால் அறியலாம். இவளது வீர மனநிலையை அக்காலத்துப் புலவர் பலரும் போற்றிப் புகழ்வாராயினர்.

இன்னொரு வீரப் பெண்மணியானவள் தன் குழந்தைக்குப் பால் கொடுத்துக்கொண்டிருக்கும் அச்சமயம், முரசு முழக்கத்தோடு பகைவர் வந்தது கேட்டு வெடுக்கென்று எழுந்து, வேலை யெடுத்து அப்பிள்ளை கையிற் கொடுத்துச் "சமருக்குச் செல்க" என்று சொல்லினளாம். இதனை,

வந்தபடை நோனாள் வாயில் முலைபறித்து
வெந்திறல் எஃகம் இறைக் கொளீஇ—முந்தை
முதல்வர்கல் தான்காட்டி மூதின் மடவாள்
புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு (புறப்பொருள்)

என்பதனால் நன்கு அறியலாம். பால் மணம் மாறாத பச்சிளங் குழந்தையை—அமர் செய்ய ஆற்றலில்லாத அச்சிறுவனைப் பார்த்து முன்னோர் செய்த உன்னத வீரச் செயல்களைக் குறிக்குங் கற்றூண்களைக் காட்டி, இதுபோல் உன்பெயரும் உலகினரேத்தி வழிபடும் வண்ணம் கல்லில் நிற்கவேண்டும் என்பதைக் குறிப்பாலுணர்த்திச் "செருமுகம் நோக்கிச் செல்க" என்று சொல்லிய இத்தீரத்தாயின் வீரத்தை என்னென்று ஏத்திப் புகழ்வது? சின்னஞ் சிறுவனே என்று கொஞ்சமும் நெஞ்சங் கலங்காது—பருவமில்லை யென்றும் பாராது, வாளை யெடுத்துப் புதல்வன் கையில் கொடுத்துப் "போர்க்குப் புறப்படு" எனப் புகன்றது, இம் மாது சிரோமணிக்கு உண்டான வீர உணர்வினாலன்றோ!

மற்றொருவள் தன்னுயர் தந்தையையும், இன்னுயிர்க் கணவனையும் போர்க்களம் புகச்செய்து முதனாள் போரில் இழந்தாள். இரண்டாம் நாளும் பகைவர் செய்த முரசு முழக்கங்

கேட்டுப் பெருமகிழ்வுற்று, தனக்குள்ள ஒரே ஒரு அருமை மகனை அழைத்து, அழகிய ஆடையுடுத்து, தலைமயிர்க்கு யெண்ணெய் தோய்த்து வேலைக்கையினிற் கொடுத்து "என் கண்ணினுஞ் சிறந்த புண்ணியப் புதல்வ! நீ நம் அரசருக்கு அனுகூலமாக அமர்க்களஞ் சென்று அமராடி வென்றுவா" என்று கூறி அமருக்கு அனுப்பினாள். அவ்வொரு மகனும் அகமிக மகிழ்ந்து சென்றனனாம். அருமைத் தந்தையை யிழந்து, ஆருயிர்க்கணவனையும் இழந்து, பின் தனக் கிருந்த ஒருமகனையும் அமருக்கு அனுப்பும் இவ்வன்னையரின் ஆண்மைதான் என்னே ! என்னே !! சந்தியில் சின்னஞ் சிறுவர்களது விளையாட்டுச் சத்தஞ் செவிக்கெட்டினாலும் "அடேயப்பா! அருமை மகனே! வெளியே செல்லாதே. அமலை அதிகமாக விருக்கிறது" என்று கூறித் தம் மக்களை வீட்டுக்குள்ளேயே வைத்துக் கொள்ளுங் கோழைத் தாய்மார்களுக்கும் இவ்வீரத் தாய்மார்களுக்கும் உள்ள வேற்றுமையைச் சிறிது சிந்தியுங்கள். இத்தகைய வீரத்தாய்களின் வயிற்றிலிருந்து உதித்த சிங்கக் குட்டிகள், அக்காலத்தில் செருமுகத்தில் செய்த தீரச் செயல்கள் சிந்தையும் மெய்யும் சிலிர்க்குந் தன்மையனவாம்.

இன்னும், தருமநெறி தவறாது திறம்பட மதுரையை ஆண்டு வந்த அரசியாம் மங்கம்மாளும், இந்திரனுக்கு இடுக்கண் இழைத்த நரகாசுரனோடு கண்ணபிரான் அடலமர் செய்து சிறிது அயர்வுறவும், வில்வளைத்துப் பகழி தொடுத்து அமராடி அவ்வரக்கனது உயிரை அந்தரஞ் சேர்த்த சத்தியபாமா தேவியாரும் அக்காலத்து வீர நாரீமணிகளாவார்கள். இன்னனைய மங்கையர் திலகங்களை எவ்வாறு ஏத்திப் போற்றிப் புகழ்ந்து வருணித்து எழுதுவது? இவ்வழி வந்த பாரத நாட்டுப் பெண்மணிகாள்! செங்குந்த குல சிகாமணிகாள் !! இங்கு இவ்வீர அன்னையரின் ஆண்மையை இதுகாறுங் கூறியதால் நீங்களும் அவர்களைப்போல் ஆயுதங் கொண்டெழுந்து அமராடி, ஆருயிர் துறக்க ஆயத்தமாக அனைவருந் திரண்டு வந்து விடாதீர்கள் ! தற்கால அடிமை வாழ்விலே ஆயுதத்தால் பயன் அடைவது அரிது. ஆகையால், அல்லல் செய்வாருக்கும் நல்லவையே செய்யவேண்டு மென்னும் சீரிய கொள்கையுடைய அஹிம்ஸா தர்மத்தையே அனைவருங் கைக்கொண்டு, அக்காலத்து அன்னையாரது ஆண்மையை நன்கு அறிந்து — அவ்வூக்கத்தை யடைந்து, நந்தமிழ் நாட்டின் முன்னேற்றங்கருதி நற்பணிகளில் கலந்து உழையுங்கள்! 'ஆடுராட்டே சுழன்று ஆடு ராட்டே' என்று கூவி, வீடுகள் தோறும் விதவிதமான நூல்களை நூற்பது நமது முதல்—முக்கிய கடமை என்று யெண்ணி, அதைக் கைக்கொள்ளுங்கள்! நுங்குடும்பத்தை நன்கு

## விகடத் துணுக்குகள்

ஜோசப் : எனது பிறந்த தின விழாவை வருடந்தோறும் கொண்டாட முடியவில்லை யென எங்கப்பா கஷ்டப்படுகிறார்கள். அதை எப்படி சார், கொண்டாடலாம்?

உபாத்தியாயர் : எண்டா, நீ பிறந்த தேதியில் வருடந்தோறும் கொண்டாட வேண்டியதுதானே, இதில் கஷ்டமென்ன?

ஜோசப் : அதுதான் முடியவில்லை சார், நான் 1924-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 29-ந் தேதி பிறந்தவன். அது நான்கு வருடத்திற்கு ஒரு முறைதானே வருகிறது.

உபாத்தியாயர் : அப்படியா, நீ வருடந்தோறும் கொண்டாடக் கூடாதென்பது ஏசு நாதரின் ஆணையா யிருக்கலாம்.

V. T. ஆறுமுகம்

---

எஜமான் : என்னடா, வண்ணான்! ராத்திரி யெல்லாம் உன் கழுதை கத்தினதால் என் தூக்கத்தையே கெடுத்து விட்டது.

வண்ணான் : இல்லைங்கோ, சாமி. இங்கே ஒரு கழுதை கத்துவதாக நினைத்து என் கழுதையும் கத்திக் கொண்டே இருந்தது.

எஜமான் : இங்கே கழுதை ஒன்றும் கத்தவில்லையே.

வண்ணான் : கழுதை இல்லைங்கோ, தாங்கள் குறட்டை விட்டதை அது அவ்வாறு நினைத்துக்கொண் டிருக்கலாம்.

சு. தானப்ப முதலியார்

---

வழிப்போக்கன் : ஐயா! வீட்டின்மேல் என்ன செய்கிறீர்?

மற்றவன் : வீடு மேய்கிறேன்.

வழிப்போக்கன் : என்ன, ஐயா! மாடுதான் புல்லை மேயும்; நீர் வீட்டையே மேய்கிறீர்!

T. M. செங்கோடன்

---

வலைஞன் : என் வலைகளை எல்லாம் கடிப்பதால் இந்த எலிக்கு என்ன கிடைக்குமோ தெரியவில்லையே.

சைவன் : மோட்சம் கிடைக்கும்.

வலை : எப்படி?

சைவன் : என்! அது ஆயிரக்கணக்கான ஜீவன்களின் பிராணனைக் காப்பாற்றுகின்றதல்லவா?

ச. நா. து.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதற் கேதுவாய அறிவினைப் புகட்டவல்ல அறநூல்களை நன்றாய்ப் படியுங்கள்! பெண்ணுலகு திருந்தினால் ஆணுலகு அதன்பின் தன்படியே திருந்தி—நல்வழியில் நடந்து சிறப்படையும் என்பதிற் சந்தேகமில்லை.

கல்யாண வீட்டார்: ஐயா, நாகசுரக்காரரே! ஊஞ்சல் முடிந்து விட்டது. நலங்கு வாசியுங்கள்.

நாகசுரக்காரன்: (நலங்கு வாசிக்கத் தெரியாதவன்) ஐயா, நலங்கு நான் நன்றாக வாசிப்பேன். ஆனால், நலங்கு வாசிக்கும் குழலை இங்கு கொண்டுவர வில்லையே.

K. வாழவந்தா முதலியார்

---

நண்பர்: சார்! தங்கள் சகோதரர்கள் மூவரும், தாங்களும் சௌக்கியமா?

மற்றவர்: ஆஹா, மூன்றுபேர் சௌக்கியந்தான். ஒருவனுக்கு மட்டும் கல்லியாணமாகிவிட்டது.

T. M. செங்கோடன்.

---

ஒருவன் ஒரு வாசகசாலைக்குச் சென்று உட்கார இடமில்லாததைக் கண்டு படபடப்பாக 'என்ன, அநியாயம். நமது நாட்டுக் கோட்டை, வயி. பல. க. மு. அவர்களும், முகையதீன் அவர்களும் ஒருவரை யொருவர் குடுமியைப் பிடித்துக்கொண்டு தெருவில் இப்படி சண்டையிடுகிறார்களே' என்று கத்தினான். உடனே எல்லோரும் எழுந்து ஓடவே அவன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்துகொண்டு 'அடடா, செட்டியாருக்கும் சாயபுக்கும் குடுமி இல்லை என்று இப்போதுதான் ஞாபகம் வருகிறது' என்று சிரித்துக் கொண்டே சொன்னான். அனைவரும் வெட்கத்தால் தலை குனிந்தனர்.

E. R. ஆனந்தராவ்

---

உபாத்தியாயர்: பிள்ளைகளே! ஒருவன் சுருட்டு பிடித்துவிட்டு அடித்துண்டை எறிந்ததனால் வீடு பற்றிக்கொண்டதைப் பார்த்தீர்கள். இதனால் நீங்கள் தெரிந்துகொள்வ தென்ன?

ஒரு மாணவன்: (பரபரப்புடன் எழுந்து) கொஞ்சங்கூட மிச்சம் வைக்காமல் அடியோடு புகைத்து விடவேண்டும் என்பதுதான்.

N. R. கிருஷ்ணன்

---

உபாத்தியாயர்: கண்ணா! நீ ஏன் நேற்று பள்ளிக்கூடம் வரவில்லை.

கண்ணன்: 'உனக்கு வயிற்றுவலியாக இருக்கிறது. நீ இன்றைக்கி பள்ளிக்கூடம் போகாதே' என்று எங்கம்மா சொன்னாங்க, சார்.

உபாத்தி: உனக்கு வயிற்றுவலி வந்தது உண்மைதானா?

கண்ணன்: அது, எங்கம்மாவைக் கேட்டுப் பார்த்தால்தான் தெரியும், சார்.

M. நாகேஸ்வரன்.

---

பிரயாணி: ஐயரே, இன்றைக்கு என்ன, சாதம் வெந்து கருகியிருக்கிறது.

ஐயர்: இன்றைக்கு எங்கள் காலஞ் சென்ற மானேஜரின் சிரார்த்த தினம். அவரது நல்ல குணத்திற்காக சாதமும் அவ்வளவு வருத்தப்படுகிறது.

T. வேலுப்பிள்ளை.



கிழவி: அடி, கமலா! உங்கள் வீட்டில் காற்று கருப்பு ஒன்றுமில்லையே.

கமலம்: அதெல்லாம் ஒன்றுங் கிடையாது. இப்போதுதான் வீடு முழுதும் வெள்ளை வெளேறென்று சுண்ணாம்பு அடித்திருக்கிறோம்.

N. R. கிருஷ்ணன்.

---

பையன்: இரண்டணாவுக்கு ஒரு பந்துகொடு.

கடைக்காரன்: (கொடுத்த பின்பு) தம்பி! இந்த பந்து எதற்காக வாங்குகிறாய்: ஓரணா பந்து வாங்குகிறது தானே?

பையன்: நேற்று, ஒரு அணாவுக்கு ஒரு பந்து வாங்கினேன். அதற்குக் காற்று போய்விட்டது. இப்பந்தின் காற்றை அதற்குள் விடுவதற்குத்தான்.

எஸ். எஸ். கே.

ஜட்ஜ்: நீ, விஸ்கிபாட்டிலைத் திருடினாயா?

கைதி: நான் எதற்காகத் திருடுகிறேன். என் ஆயுளிலும் நான் விஸ்கி குடித்ததே இல்லையே. ஒரு நாளைக்கு விஸ்கி குடித்தால் மறுநாள் எனக்குத் தலைவலி அதிகமாயிருப்பது வழக்க மாயிற்றே.

A. குமாரசாமி.

---

மனைவி: அட, சண்டாளா! கள் குடித்துவிட்டுவந்து எப்போது பார்த்தாலும் அடிக்கிறாயே. கிணற்றிலாவது விழுந்து சாகிறேன்.

புருடன்: அடியே! கிணற்றில் விழுந்து சாகிறேன் என்கிறாயே, சளிபிடித்துக்கொள்ளுமே, என்ன பண்ணுவாய்.

எஸ். கே. ரத்தினகிரி.

---

## 160 வயதுள்ள மனிதன்

### 100 வயதுள்ள இரு புதல்வர்கள் உண்டு

கோஹத்தில் தப்பி என்னும் ஊரில் வசிக்கும் பாஸ்குப்கான் என்ற ஜமீந்தாருக்கு தற்போது வயது 160 நடக்கிறது. இவருக்கு 99 வயதுள்ள ஒரு புதல்வரும் 100 வயதுள்ள மற்றொரு புதல்வரும் உள்ளனர். இவரது தேகசுகம், கண் சூட்சுமம் யாவும் நன்றாக இருக்கிறது. இவரே உலகில் மிக அதிக வயதுடையவர்.

**தென்னிந்திய மகாஜன புத்தகசாலை**

எல்லாப் புத்தகங்களும் விலைக்குக் கிடைக்கும்

வேண்டியவற்றிற்கு எழுதுங்கள்

செங்குந்த மித்திரன் ஆபீஸ்,

பவழக்காரத் தெரு, சென்னை.

# வைத்தியப் பகுதி

## குடும்ப வைத்தியம்

[மிஸஸ். டாக்டர் கண்ணுசாமி, (சுந்தரத்தம்மாள்) திருவாரூர்]

எலி கடி விஷத்தினு லுண்டாகும் நோய்கள் எண்ணிறந்தவை. எலி கடி விஷம் தேகத்தில் ஊறிய பின் அவரவர் தேக நிலைக்கேற்றவாறு பல்வேறு வியாதி ரூபமாய் வெளிப்பட்டுத் தொந்தரவை யுண்டாக்குகிறது. எலிகளிலும் பல்வகை யுண்டு. அரசன், மயிலன், மூலத்திதி, சிவப்புக் கிரியன், குலத்திரியன், பதிபாண்டு, புலந்தரி, புதன், வானன் ஆகிய பத்து வகையான எலி கடி விஷங்களைப் பற்றிய விபரம் அடங்கிய சாஸ்திரம் கிடைக்கவில்லை. தேடிக்கொண்டிருக்கிறோம்.

மற்றைய எலிக் கடிகளின் விஷத்தன்மையும் அதற்குப் பரிகாரமும் கீழே தருகிறோம் :—

1. திருவடி விளக்கன் : இது கடித்தால் கண்கள் சிவந்து தேகம் சொறியாகும். கோரைக் கிழங்கையும் இந்துப்பையும் பொடித்துத் தேனில் கொடுத்து வரவும்.

2. மாரபுத்திரன் : கடித்தால் சரீரத்தில் உள் வீக்கம், வெதுவெதுப்பு, எரிச்சல் உண்டாகும்; தலை சுண்டு விழும்; வாய் நாறும். வாகைப்பட்டையையும் ஷை விதையையும் பொடித்துத் தேனில் கொடுத்து வரவும்.

3. உதிரமண்டலி : சிறுநீர் இரத்தம்போ லிறங்கும். கடிவாய் வட்டம்போ லிருக்கும். மஞ்சளும் பற்படாகமும் பொடித்துப் பசு நெய்யில் கொடுக்கவும்.

4. அருணன் : உடம்பு கறுக்கும். இருமல் இளைப்புடன் தேகம் வற்றிச் சுருங்கும். காச நோயென்று மதித்துச் சிகிச்சை செய்தால் குணமாவதில்லை. நோய் அதிகப்படும். கோரைக் கிழங்கும் பற்படாகமும் பொடித்துத் தேனில் கொடுக்கவும்.

5. துலந்தன் : உடம்பு குளிர்ந்து சில்லிட்டு நடுக்கங் காணும். செஞ்சந்தனத்தைத் தேனில் கொடுக்கவும்.

6. மந்திரி : தேகமுழுதும் சொறியாகி தினவெடுக்கும். பாவட்டம் இலையும் மாடப்புறா எச்சமும் இரண்டையும் அரைத்துத் தேகம் முகம் காதுகளிலும் பூசி, காக்கணம் வேர், கருவேலம்பட்டை, வில்வ வேர் இவைகளை சமனிடை இடித்துத் தேனில் கொடுக்கவும்.

7. முத்திரையன் : தேகம் வெண்குட்டமாகும். வாகைவிதையைப் பொடித்துத் தேனில் கொடுக்கவும்.

8. உத்திரியன் : தேகத்தில் கொப்புள முண்டாகும். தகரை விதையைக் காடிவிட் டரைத்து மேலும் பூசி, உள்ளுக்கும் கொடுக்கவும்.

9. விரிசேங்கன் : காது கேளாது; தேகம் எரியும்; வீங்கும். கடுகுரோகணியும் கற்கண்டும் பொடித்துக் கொடுக்கவும்.



10. விஜயன் : வாயில் நீர் ஊறும்; உடம்பு வீங்கி இளைத்துச் சுழற்றும். உளுந்தும் அரிசியும் மாவுபோ லரைத்து விளாம்பழமும் நெய்யும் சேர்த்துக் குழப்பிக் கொடுக்கவும்.

11. அலியன் : உடம்பு தத்துப்போல் காணும்; வீங்கும்; கண்கள் சுருக்கும். சிறுகீரை வேரை தேன் விட்டு அரைத்துக் கொடுக்கவும்.

12. உத்தமன் : தேகமுழுதும் கொப்புள முண்டாகும். பாவட்ட இலைச்சாறும் புறா எச்சமும் தேனில் கலந்து கொடுத்து தேகத்திலும் பூசவும்.


ஷை மருந்துகளை சுமார் திரிகடியளவு வீதம் 15 நாள் வரையில் கொடுத்து வரவேண்டும். உப்பு நீக்கியும், வறுத்த உப்பு அரைத் திட்டம் சேர்த்தும், அறவே, புளி கடுகு நல்லெண்ணை புகையிலை நீக்கியும் கொடுத்துவரவும். விஷகடி யறியாமல் நோயாகவே மதித்து மருந்து கொடுத்து நோயை அசாத்தியமாக்கிவிட்டு, சித்தர் நூல்களை குறை கூறித் திரிதல் பாபமாம். இதற்காகத்தான் நமது பொய்யாமொழி வள்ளுவனாரும் 'நோய் நாடி, நோய் முதல் நாடி, வாய்ப்பச் செயல்' என அறிவுறுத்தினர் போலும்.

### கேந்தக மெழுகு

பசுவின் கோமயம் (மூத்திரம்) படி 1-ல், பத்து முறை பழுக்கக் காய்ச்சி, களைத்த வல்லத்துக் கிட்டம் பலம் ஒன்று, 3 நாள் எலுமிச்சம் பழச் சாற்றி லூறினபின் கழுவி எடுத்த இரும்பு அரப்பொடி பலம் ஒன்று, கொள்ளு வெந்த கஷாயத்தில் போட்டு ஒரு நாள் முழுதும் ஊறவைத்தெடுத்த காந்தம் பலம் ஒன்று இம் மூன்றையும் இடித்து, முந்திரி முருங்கப்பட்டைச் சாற்றிலும், குப்பைமேனிச் சாற்றிலும், பொன்னாங்காணி சீந்தில் கொடி கையாந்தகரை இவைகளின் சாற்றிலும் வகைக்கொரு நாள் அரைத்துலர்த்தி, அரிசித் திப்பிலி சுக்கு மிளகு கடுக்காய் தான்றிக்காய் நெல்லிவற்றல் சீரகம் இவற்றின் வகை 1-க்கு பலம் ஒன்று உலர்த்தி யிடித்துச் சேர்த்து, புளி மாதுளம் பழச்சாறு விட்டு மூன்று நாள் அரைத்துலர்த்திய மருந்தில் பூராதியிலை கருப்பட்டி சேர்த்து இடித்து மெழுகுபோல் வைத்துக்கொண்டு காலைமாலை சுண்டைக்காயளவு சாப்பிட்டு பால் சோறு முதலிய நல்ல ஆகாரம் செய்து வரவும். தேகத்தி லுண்டாகும் சகல வியாதிகளும், நேத்திர வியாதிகளும், இருதய சம்பந்தமான எல்லா வியாதிகளும் பறந்தோடும். எதிர்பாராத அளவு இரத்த விருத்தியும் தேக பலமும் உண்டாகும். இந்திய வைத்தியங்களின் பெருமையை மெய்ப்பிக்கும் இணையற்ற மருந்து. நூற்றுக் கணக்கான பணத்தைக் கொட்டி உயர்ந்த டானிக்குகள் வாங்கி சாப்பிட்டு மருந்து பாட்டில் காலியானவுடன் தன் குணமும் காலியாவதுபோ லில்லாமல், ஒரு அணு இந்திய மருந்து உயிர் உள்ளவரை ரட்சிக்கும் என்ற உண்மையை உணர்த்தும் பெருமையான ரஸாயன மருந்து.

* * *

நாகக்கொட்டையை வறுத்திடித்துக் காப்பிக்குப் பதில் சாப்பிட்டு வருகிறவர்க[illegible]ருக்கிற வரிலு மில்லை நீர் ரோகம் (அதி மூத்திரம்)



(கொழும்பு, புதிய பீதாம்பர மாளிகைத் திறப்பு விழாவின் போது எடுத்த படம்.)

# கொழும்பில் புதிய பீதாம்பர மாளிகைத் திறப்பு விழா வைபவம்

சென்னை பளையகாட் கம்பெனியாரின் புதிய பீதாம்பர மாளிகை 11-3-34-ந் தேதி மாலை 4 மணிக்குக் கொழும்பு 2-வது குருக்குத் தெரு 143, 145, 147-ம் எண்ணுள்ள கட்டடங்களில் திறந்து வைக்கப்பட்டது. திவான்பகதூர் ஐ. எக்ஸ். பெரோரா அவர்களால் மாளிகைத் திறப்பு விழா ஆற்றப்பட்டது.

இத் திறப்பு விழா வைபவத்துக்குக் கொழும்பு கோட்டையிலுள்ள பிரபல ஐரோப்பிய வியாபாரிகளும், சீமான்களும், சீமாட்டிகளும், புறக்கோட்டையிலுள்ள முக்கியமான வியாபாரிகளும், பொது மக்களும் ஏராளமாக வந்திருந்தனர். மாளிகை மிக்க அழகாகக் கண் கவர் வனப்பில் அலங்கரிக்கப்பட்டிருந்தது. உயர்தர வாத்தியங்கள் ஒலித்தன.

குறித்த நேரத்தில் திறப்பாளர் மோட்டாரில் வந்திறங்கியதும் கம்பெனியின் மானேஜிங் டைரெக்டர் ஸ்ரீ T. N. சபாபதி முதலியார் அவர்களும், கொழும்பு கம்பெனியின் மானேஜர் ஸ்ரீ T. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்களும் வரவேற்று உபசரித்தனர்.

பின்பு, திவான்பகதூர் பெரேரா அவர்கள் பலத்த கரகோஷத்தினிடையே பீதாம்பர மாளிகையைத் திறந்து வைத்தார்.

ஸ்ரீ T. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் பின்பு ஸ்ரீ பெரேரா அவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார். வரவேற்புப் பத்திரத்துக்குப் பதிலளிக்கையில் பெரேரா அவர்கள் இதுகாறும் பளையகாட் கம்பெனியார் கொழும்பில் மொத்த வியாபாரிகளாக விளங்கி வந்தாரென்றும், கொழும்பிலும் வெளியிடங்களிலு முள்ள லேவாதேவிக்காரர்களின் சிரப்பத்தினாலும் வேண்டுகோளினாலும் சில்லரை வியாபாரத்தின் பொருட்டே இந்த பீதாம்பர மாளிகை திறக்கப்படுகிறதென்றும், இது திறக்கப்படுதற்குக் காரணமாயிருந்த கொழும்பு கம்பெனி மானேஜர் ஸ்ரீ T. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்களின் முயற்சி பாராட்டத்தக்கதென்றும், தான் பிறந்து வளர்ந்து வாழ்தல் வியாபாரத் துறையிலே யாகையால் தான் இதுவரை ஈடுபட்டுக்கொண்ட பல விசேடங்களிலும் இதில் கலந்துகொண்டது மிக்க மகிழ்ச்சி தருகின்றதென்றும், தனக்கு வழங்கிய இக்கௌரவத்திற்கு உள்ளூர் மானேஜருக்கு நன்றி தெரிவிப்பதாகவும் கூறினார்.

பின்பு, ஸ்ரீ T. N. சபாபதி முதலியார் அவர்களும், ஸ்ரீ T. முத்துக்குமாரசாமி முதலியா ரவர்களும் ஸ்ரீ பெரேரா அவர்கட்கும், மற்றும் விஜயம் செய்திருந்த கனவான்களுக்கும் வந்தனோபசாரங் கூறினர்.

சிற்றுண்டி பானாதிகளுடன் திறப்பு விழா வைபவம் இனிது முடிவு பெற்றது.

# கமலசேகரன்
## அல்லது
# விதவா விவாகம்

[T. M. செங்கோடன், திருச்செங்கோடு]

“கிணு, கிணு” வென்ற மணிச் சப்தத்தைக் கேட்ட கமலா, திரும்பிப் பார்த்து நகருமுன், சந்திரசேகரன் ஏறிவந்த சைகில் சக்கரங்கள், அவள்மேல் ஏறிவிட்டன. கீழே விழுந்த கமலா, வருத்தமின்றிப் பரபரப்புடன் எழுந்து, சிதறிக் கிடந்த புஸ்தகங்களை ஒழுங்குபடுத்தினாள். அதற்குள் சந்திரசேகரன், வண்டியிலிருந்து கீழிறங்கி, கமலாவை நோக்கினான். “எனக்கொன்றும் ஏற்படவில்லை; நீங்கள் போகலாம்” என்று கமலா கூறினாள். கமலாவின் கையிலிருந்து இரத்தம் வடிவதைக் கண்ட சந்திரசேகரன் மனம் துடித்தது. உடனே தன் பட்டுக்குட்டையை எடுத்து, அருகிலிருந்த குழாய்த் தண்ணீரில் நனைத்துக் காயத்தைக் கட்டினான். கமலாவும் தன் வந்தனத்தை அவனுக்குத் தெரிவித்துவிட்டுப் பள்ளியை நோக்கி நடந்தாள்.

சந்திரசேகரன், அவளுடைய இயற்கைக் குணத்தையும், இன்சொல்லையும் எண்ணி மகிழ்ந்து, சைகிலில் ஏறிக்கொண்டு புறப்பட்டான். அவனுக்கு வயது பதினைந்திருக்கலாம். சிவந்த நிறமும், அழகிய தோற்றமும் உள்ளவன். அவ்வூர், பிரபல வியாபாரியான முருகேசமுதலியாரின் குமாரன். சந்திரசேகரன் வீட்டையடைந்து, நல்லுடை தரித்து, அன்றைய பாடங்களுக்கு வேண்டிய புஸ்தகங்களுடன் கலாசாலைக்குப் புறப்பட்டுச் சென்றான்.

கமலாவிற்கு வயது பன்னிரண்டிருக்கலாம். ஏழாம் வகுப்பிற் பயின்றுகொண்டிருந்தாள். எல்லோரிடமும் இனிமையாகப் பேசுவாள். அதற்கேற்பப் படிப்பிலும் சிறந்து விளங்கினாள்.

பள்ளிக்குச் சென்ற சந்திரசேகரன் மனம், பாடங்களில் செல்லவில்லை. கமலாவின் இனிய சொற்களும், புன்முறுவல் பூத்த தோற்றமும் அவன் அகக்கண்முன் தோன்றி மறைந்துகொண்டிருந்தன. இப்படி அன்றைய பொழுது கழிந்தது. மறுநாள் முதல், தினந்தோறும் கமலாவும், சந்திரசேகரனும் பள்ளிக்குச் செல்லும்போது தொடர்ச்சியாகச் சந்திக்க நேர்ந்தது. அவ்வாறு சந்திக்கும்போதெல்லாம் இருவர் கண்களும், ஒன்றை ஒன்று பேசிக்கொள்ளும். இவ்வாறு பல நாட்கள் கழிந்தன.

* * *

சந்திரசேகரனுக்குக் கமலா, சில மாதங்களாகத் தென்படவில்லை. காரணம் யாதாய் இருக்கலாம் என்று சிந்தித்தான். விஷயம் புலப்படவில்லை. அதனால் சில நாட்களுக்குள் சந்திரசேகரன் கமலாவை மறந்தான்.

* * *



இரண்டாண்டுகள் விரைவாக ஓடி ஒளிந்தன. அன்று பௌர்ணமி. முத்துச்சுடர் போல் நிலவொளி பிரகாசித்துக்கொண்டிருந்தது. மந்தமாருதம் மெதுவாக வீசி எல்லோருடைய உடலையும் உள்ளத்தையும் ஒருங்கே கொள்ளைகொண்ட வண்ணமாய் இருந்தது. அப்போது மாலை மணி சுமார் ஆறரை இருக்கலாம். சந்திரசேகரனும், அவன் நண்பர்களும் அவ்வூரை அடுத்திருந்த ஆற்றங் கரையில் நிலாச்சிற்றுணவு அருந்திக்கொண்டிருந்தனர். இறந்துபோன, தன் தந்தையைப்பற்றி எண்ணி வருந்திய சந்திரசேகரன் கண்களில் நீர்த்துளிகள் அரும்பிக்கொண்டிருந்தன. அவன் மனம் சிற்றுண்டியை நாடவில்லையாயினும், அதை வெளிக்குக் காட்டாமல் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு நீரில் கையலம்பச் சென்றான்.

அதே சமயத்தில் ஒரு பெண், கடவுளைத் தொழும் ஒலி கேட்டது. சுற்று முற்றும் பார்த்தான். சற்று தூரத்தில் ஒரு இளநங்கை தன் ஆடைகளை நன்கு கட்டிக்கொண்டு ஆற்றில் இறங்குவதைக் கண்டான். உடனே அதைத் தன் நண்பர்களுக்குக் காட்டி, அங்கு ஓடினான். மற்றவர்கள் அவனைத் தொடர்ந்தனர். ஆ! அவர்கள் அங்கு செல்லுமுன் அந்நங்கை ஜலத்திற்குள் குதித்துவிட்டாள். அவள் தலை, நீரில் முழுகி எழுவது தெரிந்தது. உடனே சந்திரசேகரன் நீரில் குதித்தான். அவனுடன் அவன் நண்பர்களும் பாய்ந்தனர். எல்லோரும் சேர்ந்து அப்பெண்ணைக் கரைசேர்த்தனர். அவள் முகம் வெளுத்திருந்தது. அவளைக்கண்டதும் சந்திரசேகரன் உடம்பில் மின்சாரம் பாய்ந்ததுபோல ஒரு சக்தி பாய்ந்தது. ஆம்! அவளே முன் சந்திரசேகரன் சைகில் சக்கரங்களால் தாக்கப்பட்ட கமலா.

முன்னிருந்ததற்கும், இப்பொழு திருப்பதற்கும் அவள் உருவமே மாறிவிட்டது. அவளுடைய திரண்ட உடலமைப்பும், அடர்ந்து நீண்ட கரிய சுரிகுழலும், வெடித்த மாதுளங்கனியையொத்த மஞ்ச திகழ் கன்னங்களும், அரிய முத்தைப் பழிக்கும் வெண்பற்களும், அன்னத் துருவக்கழுத்தும், தடந்தோளும் சந்திரசேகரன் மனத்தைப் பறித்து விட்டன.

உடனே, மூர்ச்சை தெளிவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்தனர். சிறிது நேரத்திற்குள் மூர்ச்சை தெளிந்தது. ஸ்மரணை வந்ததும் கண்விழித்துப் பார்த்தாள். தன் முன் நிற்கும் வாலிபர்களைக் கண்ட அவள் முகம் வெட்கக்குறியைக் காட்டிற்று. சந்திரசேகரன் மனம் துடித்தது. ஏன்? துடிப்பது சகஜந்தானே? “கமலா! ஏன் இக்காரியம் செய்யத் துணிந்தாய்?” என்றான் சந்திரசேகரன். கமலா என்ற சொல்லைக் கேட்ட அவளும், மற்றவர்களும் திகைத்தனர். உடனே சந்திரசேகரன், பள்ளியில் படிக்கும்போது நடந்த செயல்களை எல்லோருக்கும் சொன்னான்.

கமலா தன் மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு எழுந்து நின்று, தன் துர்ப்பாக்கிய நிலையை விரிக்கத் தொடங்கினாள். “ஒன்றுமில்லை, எல்லாம் காலக்கொடுமை; என் பெற்றோர்கள், எனக்குப் பிரியமில்லாத நாற்பது வயதுள்ள ஒருவருக்கு என்னை

மணம் செய்துகொடுத்தனர். கலியாணமான இரண்டு மாதத்திற்குள் என் தகப்பனர் இறந்தார். கஷ்டம் வந்தால் ஒரே சமயத்தில் வரும் என்பார்கள். அதே மாதத்தில் என் கணவரும் இறந்தார். அவர் இறந்த சில நாட்களுக்குள் நான் புஷ்பவதியானேன். இனி உயிர்வாழ்வது பழிக் கிடமாகும் என்றெண்ணி, உயிர்விடத் துணிந்தேன். இங்கு எவரும் இல்லாத சமயமென்று கண்டு ஆற்றில் குதித்தேன் ஆனல்—'' என்று, சோகம் நிறைந்த குரலில், மெதுவாகக் கூறி மயங்கி விழ்ந்தாள். அவளைத் தாவிப்பிடித்த சந்திரசேகரனது முகத்தில் அவளது வார்த்தைகளைக் கேட்டதும் ஒரு பிரகாசம் வீசியது. குழப்பத்தை விளைத்த ஓர் விஷயம் ஒரு நல்ல முடிவை யடைந்து விட்டதாக அது காட்டிற்று.

“கமலா! என் வீட்டிற்கு வருகிருயா?'' என்ருன் சந்திரசேகரன். கமலா பதில் கூருமல் குனிந்தவண்ண மிருந்தாள். அவன் முன்னே நடந்தான். அவள் அவன் பின்னே நடந்தாள். எல்லோரும் வீட்டை யடைந்தனர்.

அன்றிரவு சந்திரசேகரனுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. ‘கலியாணமாகாத நான், என் இளம் விதவையான கமலாவை மணம் செய்துகொள்ளக் கூடாது? ஆம்! என் தந்தை யிருப்பினும் இதற்குச் சற்று இடர் ஏற்படும். அவர் முன்பே இறந்து விட்டார். அதுவும் ஒருவாறு நலமே!' என்று எண்ணமிட்டவாறே தூக்கத்தில் ஆழ்ந்தான்.

* * *

ஒரு நாள் சந்திரசேகரன் இல்லத்தில் மேள, வாத்தியங்கள் முழங்கிக்கொண் டிருந்தன. பலர் வருவதும் போவதுமா யிருந்தனர். இன்னும் தெரியவில்லையா? அன்று கமலாவிற்கும், சந்திரசேகரனுக்கும் கலியாணம் என்று நான் சொல்லியா நீங்கள் அறிய வேண்டும்? உறவினர்கள் எல்லோரும் சந்திரசேகரனின் உதார குணத்தை மெச்சினர்.

* * *

ஒரு நாள் மாலை சந்திரசேகரனும் கமலாவும் தங்கள் குழந்தை ஸரோஜாவுடன் விளையாடிக்கொண் டிருந்தனர். “கமலா! இதோ பார்! நம் குழந்தை உன்னைப்போலவே இருக்கிறது! இப்படிக்கொடு'' என்று குழந்தையை வாங்கி ஒரு இன்பமுத்த மளித்தான் சந்திரசேகரன்.

---

## பசுவின் சாணம்

இந்தியாவில் வீடுகளுக்கு: பசுவின் சாணத்தை மெழுகுவதை சில வெள்ளையர்களும, ஆங்கில மேதாவிகளும் எளனமாகக் கூறிவந்தனர். பசுவின் சாணத்தை சமீபத்தில் சில ரசாயன நிபுணர்கள் சோதித்தனர். வியாதியை, விசேடமாகக் காலராவை உண்டாக்கும் பூச்சிகளைக் கொல்லும் சக்தி சாணத்திற்கு அதிகமா யிருக்கிறதென அவர்கள் கூறுகிருர்கள்.

## செங்குந்த யாத்திரைவாசி

மாலை மணி 5 ஆயிற்று. ஊரைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டுத் தெருவே சென்றேன். அத் தெருக் கோடியில் கூடிப் பேசிக்கொண்டிருந்த நால்வரில் ஒருவர் என்னைக் கண்டு ''ஐயா எந்த ஊரோ'' என்ருர். யான், ‘உங்கள் குரு சுவாமிகள் இங்கு விஜயஞ் செய்திருக்கிருராமே! ஏதாவது விசேஷம் உண்டா' என்று கேட்டேன்.

குள்ளப்ப முதலியார்: ‘ஆமாம். விசேஷமுண்டு. எங்கள் சாமியார் அடுத்த அரிதாங்குப்பத்தில் ஒரு மண்டலம் வரையில் பால் சாப்பிட்டுக்கொண்டே சிஷ்யாக்களுக்கு தீக்ஷை செய்தார். இச் செய்தி எங்கும் பரவிற்று. சாமியாரது மாமியார் ஊரில்கூட இதைப் பற்றிப் பேசிக்கொள்ளுகிருர்கள். அதனல்தான் நாங்களும் இங்கு அவரை அழைத்து வந்தோம். அருமையானவர்.

பக்கத்தில் இருந்த பச்சையப்ப முதலியார்: ஆமாயா; ஒங்க சாமியெ நீதா மெச்சிக்கோணும். ஐயா எந்த ஊரோ? இப்படித் திண்ணைமேலே வந்து ஒக்காருங்கோ. சாமியார் சங்கதி சொல்றேன். (திண்ணை மேல் உட்கார்ந்தோம்.) ஐயா, இந்த அநியாயக் கொள்ளையே கேளுங்கோ. ஐயா யாரோ புதுசா இருக்குது. இந்த ஊர்லெ வண்ணு அமட்டன் தவர 800 ஊடும் எங்க ஊடுதா. அடுத்த அரியாங்குப்பத்லெ 250 ஊடு. எல்லா ஒரே பந்துங்க. குடுவ சுக்கிர மணிய மொதலி தவர எல்லா அந்த சாமியார் சீசர்கள்தான். அநியாயத்தெ கொஞ்சங் கேளுங்கொ. நாலு நாலெக்கி மின்னெ எ மாமா ஊட்டெ—அரியாங்குப்பத்லெ தவிச்சூட்டு பூட்டாங்க. நானு இருந்தே அங்கெ. எ மாமி கழுத்லெ காதிலெ இருந்த பொன் மணி, பித்தல மணிகூட உரிச்சி வெச்சாச்சி. என்ன நெனக்ரீங்க. இவ்வள பெரி ஜாப்தா. 15 ரூவா ஆவுதாம். கேட்டா கேளுங்க. உட்டா உடுங்க. எந்த ஊர் கொள்ளெ. எங்கெ போர்து. ஏழைங்க பாவம். பயப்படராங்க, என்ன வருமோண்ணு. நல்ல சாமியார்ரு. போதும் சாமியார் வந்தது. அழுதுட்டாங்க போங்க. (எதிரி லிருப்பவரைப் பார்த்து) ஒனக்குகூட தெரியுமே ஐயா!

ஏகாம்பர முதலியார்: (கோபத்துடன்) என்னடா, உளறுகிருய். தெரியும்படிச் சொல்லலாகாதா?

பச்சைய: அதாய்யா. நெல்லாதா சொல்ரேனே. 15 ரூவா ஆவுதுண்ணு. இம்முட்டு ஜாப்தா. ஏழைங்க என்ன செய்வாங்க. நீதா சொல்லெ, என்னமோ பேசரியே. மாசமெல்லா நெச்சா 5 ரூவா யில்லெ. இன்ன மென்ணு சொல்ரது.

மாடசாமி முதலி: ‘ஓ ஹோ! அவன் சொல்லுவது இன்னும் உங்களுக்குத் தெரியவில்லையா? நமது சாமியார் இப்போது ஒரு ஏற்பாடு செய்திருக்கிருரே, அது உங்களுக்குத் தெரியாதோ? அரிதாங்குப்பத்திலும் அது அமுலுக்கு வந்துவிட்டது. அது நம்மையும் விடாதுபோ லிருக்கிறது. அது என்னமோ அநியாயந்தான். ஏழை

கள் என்னதான் கஷ்டப்படுகிறார்கள். (என்னதான் சொல்லுமே, கேட்போம்) கேட்போமா. யார் கேட்கிறது. எல்லாரும் பயந்து நடுங்குகிறார்கள், என்ன கெடுதி வருமோ என்று. கடைசியாய் தெய்வந்தான் கேட்க வேண்டும். (என்ன அப்படிப்பட்ட சங்கதி) என்னவா சொல்லுகிறேன் கேளுங்கள். சாமியார், பெண்சாதி பிள்ளைகள் பெண்கள் கொழுந்தியார் மாமியார் மைத்துனர் எல்லோரையும் அழைத்துக்கொண்டு இந்தப் பக்கம் வந்து 1½ வருஷமாகிறது. இப்பக்கம் அவருக்கிருப்பது சில கிராமங்களே. ஒவ்வொரு தலைக்கட்டுக்கும் படியும், காணிக்கையும் உட்பட ரூபாய் பதினைந்துக்குக் குறையாமல் வாங்குவதென்று திட்டம் வகுத்திருக்கிறாராம். அதற்காக ஒரு ஜாபிதா தயார் செய்து வைத்திருக்கிறார். அதில் முதல் ஐடம் குருதக்ஷிணை ரூபாய் 7. அடுத்தபடி அரிசி முதல் சர்க்கரை, முந்திரிபருப்பு, நெய், தயிர், வாழை இலை முதலிய சாமக்கிரியைகள் வரையில் ஒவ்வொன்றும் இவ்வளவிவ்வளவென்று குறிக்கப்பட்டிருக்கிறது. (வாழை இலை இந்த ஊரிலேது?) இல்லாவிட்டால் அவருக்கென்ன? சிஷ்யன் கிடைக்குமிடந் தேடி கொண்டுவர வேண்டியது. இந்த சாமான்களெல்லாம் குறைந்தது ரூபாய் எட்டிற்கு எட்டிப் பார்க்கும். ஆக மொத்தம் ரூபாய் 15 முள்ளங்கி பத்தைபோல் எடுத்து வைத்து விடவேண்டும். இவற்றோடு அவர் கொடுத்த ஜாபிதாவையும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அடுத்த முறைக்கார சிஷ்யனை அப்போதே கூப்பிட்டு ஜாபிதாவைக் கொடுத்துவிடுகிறார். இவ்வாறே ஒவ்வொரு தலைக்கட்டும் ஒவ்வொரு நாளைக்குச் சப்ளை செய்தே தீரவேண்டும். இதுதானோ! முறைக்கார சிஷ்யன்; அன்று நாள் முழுதும் சாமியார் இருப்பிடத்திலேயே இருந்து, அவர் குடும்பத்துக்கு வேண்டிய சௌகர்யங்களையெல்லாம் செய்து வைத்து, குருப் பிரசாதமும் உத்தரவும் பெற்றுக்கொண்டு இரவு 10 மணிக்குத்தான் தன் வீட்டிற்குப் போகவேண்டும். எது எப்படியானாலும் சரி; சாமியார் டிமாண்டைத் தள்ளிவைக்க முடியாது. (செய்ய முடியாவிட்டாலோ?) என்னைக் கிராஸ் பண்ணவேண்டாம். இதுவரையில் அப்படிச் சொன்னவர்களே கிடையாது. பச்சையப்பன் மாமா வீட்டுக் கதை சொன்னேனே, கேட்கவில்லையா? என்ன செய்வார்கள் பாவம். தெளிவில்லாதவர்கள். கல்வியே இல்லை. உலகானுபவமும் கிடையாது. அறியாமையாகிய இருள் நிறைந்திருக்கும் மனதில் பயந்தானே குடிகொண்டிருக்கும். குருவைத் திருப்தி செய்யாவிட்டால், என்ன தீங்கு நேரிடுமோ என்ற பயம் உண்டாய்விடுகிறது. பயத்தால் ஏழைகள் உள்ளதை விற்றோ சுட்டோ கொடுத்துவிடுகிறார்கள்.

இந்தக் கலியுகத்தில், இந்த இருபதாம் நூற்றாண்டில், மாதமெல்லாம் நெய்தாலும், பெண்டு பிள்ளைகளெல்லாம் சேர்ந்து இரவு பகலாய் உழைத்தாலும் ஐந்து ரூபாய்கூட கிடைப்பது அரிதாயிருக்கிற இந்தக் கஷ்டகாலத்தில், இப்படிப்பட்ட பகற்கொள்ளை நடக்கிறதே! மக்களென்று சொல்லிக்கொள்வோரும இதற்கு இசைந்திருக்கிறார்களே! 'சுவாமிகளே! ஒரே தடவையில் 15 ரூபாய் எடுத்துக் கொடுப்பதென்றால் ஏழைகளுக்குச் சாத்தியப்படவில்லையே என்று யாராவது கேட்டால், உங்களுக்குத் தீக்ஷை செய்கிற காலத்தில் உடல், பொருள்,



ஆவி மூன்றையும் எனக்குத் தத்தஞ் செய்து கொடுத்திருக்கிறீர்களே அதன் தாத்பரியம் என்ன தெரியுமா? நான் ஆண்டான், நீங்கள் அடிமைகள். உங்கள்வருவாய் முழுதும் என்னுடையதன்றோ? ஆனால் உங்கள் க்ஷேமங் கருதியன்றோ கருணையினால் அவ்வாறு செய்யாது ஒரு வருடத்திற்கு பதினைந்து ரூயாய்தானே கேட்கிறேன். இதுவும் உங்களுக் கசப்பாயிருக்கிறதா! நாங்களிருப்பது உங்கள் க்ஷேமத்திற்காகத்தானே? இந்த பட்டயத்தைப் பார்த்தீர்களா? குரு துரோகிகளுக்கு எத்தனை நரகம் சொல்லப்பட்டிருக்கிறது. இவை யாவும் நாமா செய்துகொண்டதா? உங்களுக்கிஷ்டமில்லை யென்றால் நான் இதோ போய்விடுகிறேன். வியாழ பகவானை அலக்ஷியம் செய்த இந்திரன் கதையை அறியீர்களா? என்று சொல்லி மிரட்டுகிறாராம். இதைக் கேட்ட சீடர்கள் நடுநடுங்கி வீழ்ந்து வணங்கி மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுகிறார்கள்' என்று கூறினார்.

இதனிடையே குடுவ முதலியார் வீட்டில் நிகழ்ந்த குருபூஜைக்கு வெளியூர்களிலிருந்து வந்திருந்த நண்பர்களுள் சிலர் வந்து கலந்துகொண்டார்கள். அவர்களுள் பாரிஜாத முதலியார் 'ஐயா எங்கள் குருக்கள் மிகவும் நல்லவர். கையில் கிடைத்ததைக் கொடுப்போம்; சந்தோஷமாய் வாங்கிக்கொள்வார். ஏழைகளைக் கண்டால் நீங்கள் ஒன்றும் கொடுக்க வேண்டாம். உம்முடைய நிலைமையை நான் அறிவேன். ஏதோ உண்டானவர்கள், தக்ஷிணை கொடுக்க இயல்புடையவர்கள் கொடுக்கட்டும். நீங்கள் க்ஷேமமாயிருந்தால் புத்திசாலிகளாய் நல்லொழுக்கமுடையவர்களா யிருந்தால், கடவுள் பக்தியும் குரு விஸ்வாசமும் உடையவர்களாயிருந்தால் அதுவே எனக்கு நீங்கள் கொடுக்கும் தக்ஷிணையாகும் என்று மனப்பூர்வமாய் ஆசீர்வதிப்பார். நல்லவர்; நன்றாய்ப் படித்தவர். எங்களுக்கு அவரிடத்து வெறுப்பே இல்லை. ஏழைகளுக்குத் தம்மால் கூடிய ஒத்தாசை பலவிதத்திலும் செய்வார். வந்தால் ஊரிலுள்ள அனைவரையும் மாலையில் கூட்டி வைத்துக்கொண்டு கல்வி, ஒழுக்கம், பக்தி, பெரியோரைப் பேணல், சமூகத் தொண்டு, தேசத் தொண்டு முதலிய பல விஷயங்களைப்பற்றி குழந்தைகளுக்குச் சொல்வதைப்போல் அருமையாக உபதேசஞ் செய்வார் எங்களுடைய துர் அதிர்ஷ்டம் இரண்டு வருஷங்களுக்கு முன் அவர் திடீரென காலமாய்விட்டார். அவருக்கு ஆண் வார்சு இல்லை.

ஆறு மாதங்களுக்கு முன் இங்கே வந்திருக்கிறவர் எங்கள் ஊரில் வந்து முகாம் போட்டார். நாங்கள் போய்க் கண்டோம். எங்களை உட்காரவைத்துக்கொண்டு 'காலஞ் சென்ற உங்களுடைய குருக்களாகிய சோமசுந்தர தேவர் என்னுடைய தாய்மாமன். அவருக்கு வார்சு கிடையாது. அவருடைய மனைவியார் எனக்குத் தம்முடைய சிஷ்யர்களையெல்லாம் 500 ரூபாய்க்கு விற்றுவிட்டார்கள். இனி நான்தான் உங்களுடைய குரு. அந்த குருக்கள் அம்மாளை நான்தான் இப்போது சம்ரக்ஷணை செய்துவருகிறேன். கிரய பத்திரம் எழுதி ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறது. அது என் கையிலிருக்கிறது; வேண்டுமானால் காட்டுகிறேன். உங்கள் குருக்கள் இந்த பக்கம் வந்து மூன்று வருஷம் ஆகிறது. ஆகையால் பழைய பாக்கி ஏதாவது இருந்தாலும் இருக்கட்டும். சென்ற மூன்று வருஷத்திய பாக்கியைமாத்திரம் அட்டியில்லாமல் கொடுத்துவிடுங்கள் என்று தக்ஷிணாமூர்த்தியாக (தக்ஷிணை

மூர்த்தியாகவல்ல) எழுந்தருளி உபதேசித்தார். நாங்கள் மறுமொழி கூறாமல் எழுந்து வந்துவிட்டோம். நான்தான் அவ்வூர் நாட்டாண்மைக்காரன். ஒரு நாள் முழுதும் அவராலானவரையில் மிரட்டிப் பார்த்தார். ஒன்றும் பலிக்கவில்லை. ரிஜிஸ்டர் செய்திருப்பதாகச் சொல்லப்படும் பத்திரத்தைப் பாராமலும், குருக்களம்மாள் உத்தரவில்லாமலும் நாம் யாதொன்றும் செய்யக் கூடாதென்று ஊர் கூடி முடிவு செய்துகொண்டோம். ஊரை அனுசரித்தால் பலிக்காதென்று தெரிந்து ஊரில் பிளவுண்டாக்கினால் தமக் கிடந்தருமென்று இரண்டொரு வாய்செத்த ஏமாந்த சோணகிரிகளைத் தனித் தனியே வரவழைத்து நயவஞ்சகமாகப் பேசி இதோ கிரய பத்திரம் பத்திரமாயிருக்கிறது. எங்கு சென்றாலும் அது செல்லும். கடைசியில் நீங்கள் தான் குரு துரோகிகளாய் குருவின் சாபத்துக்குள்ளாவீர்கள். ஊர் அநித்தியம், உலகம் அநித்தியம், இப்போது துணையாயிருந்து கலகஞ் செய்வோரெல்லாம் அநித்தியம். நித்தியமாய் நிற்பது நீங்கள் தேடிக் கொள்ளும் சாபந்தான். எனக்கென்ன நஷ்டம். இதோ நான் அடுத்த ஊருக்குப் போய்விடுகிறேன். குருவை அலக்ஷியம் செய்த தேவேந்திரன் என்ன பாடு பட்டான் தெரியாதா? எனப் பலவாறு கூறி மிரட்டினார். ஏழைகள் பாவம்; பயந்து கையில் கிடைத்ததைக் கொண்டுபோய்க் கொடுத்து, சுவாமிகள் கோபித்துக்கொள்ள வேண்டாமெனக் கூறினர்'. எனச் சொன்னார்.

---

## வாலாஜாபாத் இந்து மத பாடசாலைக்கு ஓர் நன்கொடை

சென்ற மார்ச்சு மீ 31-ம் தேதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தஞ்சை ஜில்லா மஞ்சட்கொல்லை மிராசுதாரரும், பெரும் வியாபாரியும் செங்குந்த குலதிலகருமான திருவாளர் ராம. ச. இராமசுவாமி முதலியார் அவர்களும், அவர்களது நண்பர்களும் மேற்படி பாடசாலையைப் பார்வையிட்டார்கள். பள்ளியின் அங்கமாகவுள்ள வாசகசாலை, நூற்குழுமம், மருத்துவச்சாலை, தொழிற்சாலை, மாணவர் விடுதி முதலியனவற்றைக் கண்டார்கள். பின்னர் மாணவர் கழகம் கூடியது. திரு. முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். திரு. மணி. கோட்டீஸ்வர முதலியார் அவர்கள், B.A., L.T., 'ஆசிரியர் கடமை' என்பதைக் குறித்தும், செங்குந்த மித்திரன் ஆசிரியர் திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் 'மாணவர் அபிவிருத்தியே தேசிய முன்னேற்றத்திற்கு அடிப்படை' என்பதைக் குறித்தும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். தலைவர்கள் மாணவர்களின் உரையாடல், சொல்லாட்டம், உடைமாற்றம் இவைகளைக் கண்டு அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை. அவர்களது முடிவுரையில் தனது வாழ்நாளில் இவ்விதமான நல்லமுறையில் வகுப்பு வித்தியாசம் பாராட்டாமல் ஊக்கத்தோடும், தன்னல மற்றும் நடைபெறும் பாடசாலை இதுவேயென வியந்து கூறி பள்ளியின் அபிவிருத்தியை உன்னி ரூபாய் இருநூறு நன்கொடை வழங்கினார்கள். இதன்றியும் தன்னால் கூடிய வேறு உதவிகளையும் செய்வதாக வாக்களித்துள்ளார்கள். கடைசியாக திரு. வா. இ. மாசிலாமணி முதலியார் அவர்கள் நன்றி கூறக் கூட்டம் கலைந்தது.

உண்மைவிளம்பி.

# மங்கையர்க்கரசியா ரன்பின் மாண்பு

[திருவாளர்-வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள் கண்டாச்சிபுரம்]

"மங்கையர்க் கரசி, வளவர்கோன் பாவை" என்று நந்திருநெறித் தமிழ் வேதம் புகழ்ந்து துதிக்கும் பெருமை வாய்ந்த, பாண்டி நாட்டுக் கோப்பெருந் தேவியாகிய இவ் வம்மையா ரவர்களின் அன்பின் பெருமையையும், அரிய மேம்பாடான குணங்களையும், அறியாதார் எவரே! 'மங்கையர்க் கரசியார்' என்னும் அரிய திருநாமமே இவர்களின் பெருமையை நன்கு வுணர்த்தப் போதிய சான்றா யமையும். இவர்களின் ஈசுவர பக்தியின் பெருமையையும், சிவ சின்னங்களின்பால் இவர்கள் வைத்துள்ள அன்பையும் நன்கு விளக்க நமது ஞானசம்பந்த சுவாமிகள். "சிவன்திரு நீற்றினை வளர்க்கும் பந்தணை விரலாள்" என்று தமது திராவிட வேதத்தில் கூறியிருக்கின்றனர். "நின்ற சீர் நெடுமாற நாயனார்" என்று சிறப்பித்துக் கூறும் கூன்பாண்டியனது இல்லறக் கொழுந்தியா யமைந்த விப்பெருந்தகையார், புறச்சமய விருள் சூழ்ந்து, நிலை குலைந்திருந்த பாண்டி நாட்டைத் தமது சித்தத்தைச் சிவன்பால் வைத்த அன்பின் பெருக்கினால், பூதி சாதன வழி நிறுவி, சைவ சமயப் பயிரானது இன்பமாய்ச் செழுமையுடன் வளர்ந்தோங்குமாறு, பக்தி யெருவிட்டு, அன்பு நீர் பாய்ச்சி, திருவுளமிளிரச் செய்து சிவமணங் கமழும் நன்னிலைமைக்குக் கொண்டுவந்தனர். மாதர் வுலகத்துக்கு மகத்தான பெருமையை வாரி வழங்கிய இவ்வம்மையார், அரனிடத் தன்பு மீக்கூறு முளத்தளாய், விபூதி ருத்திராக்க சிவசின்னங்களைக் கரவி லணிந்துகொண்டு, அஞ்செழுத் தின்னும் நெஞ்சத்துடன் விளங்கி வந்தனர். "மனம்போல மாங்கல்யம்" என்னும் முதுமொழிக்கேற்பத் தாஞ்செய்துவந்த பரம பக்தியின் பயனாய், சிவதரிசனார்த்தம் கூடல் நாயகன் கோயி லெய்திய, பந்தங் கடந்த அந்தணரொருவரை நமது அம்மையார் சந்திக்கவும், அப் பூசுரரால், சிவபெருமான் றிருவடிக்கே பதிந்த நெஞ்சமுடையவராய் விளங்கும் நமது புகலிப் பெருந்தகையாராகிய ஆளுடையபிள்ளையாரின் திருவவதாரம், அவர் திருமுலைப்பா லுண்டது, கவி பாடுமாற்றலும், கனக தாளமும் பெற்றது, முத்துப் பந்தல் முத்துச் சிவிகை முதலிய சின்னங்கள் பெற்றது முதல் யாவும் ஆதியோடந்தமாக மொழியக் கேட்டு, ஆனந்த பரவசமடைந்து, கேட்டவளவிலே கற்றாவின் மனம் போலக் கசிந்துருகும் நெஞ்சமுடையவராய், தலையன்பின்பாற் பட்டு, உடல் புளகாங்கிதங் கொள்ள சேயைக்கண்ட தாய்போல் செவ்விய கொங்கைக ளிரண்டினும் பால் சுரந்து வழிந்தது. என்னே! இவ் வம்மையாரின் தலையன்பு! இவரது கரைகாணாத தலையன்பன்றோ பாண்டி நாட்டைப் பூதி சாதன வழி நிறுவியது! கூன்பாண்டியனது வெப்புநோ யகற்றிச் சௌந்தர பாண்டியனாக்கித் தம்பதிகளிருவரையு மொருங்கே முத்தியங்கரை யுய்த்தது! இத்தகைய அன்பின் களஞ்சியமாகிய வீரத் தாய்மார்கள் பலர் நிறைந்து விளங்கியிருந்த நமது தண்டமிழ் நாட்டில், இப்போது அன்பற்ற கோழை மனக் கொடு

# நமது தபால் பெட்டி

கேள்வி: சென்ற மித்திரனில் இலங்கை கரவெட்டி கிழக்கு திரு. P. K. குழந்தைவேலு முதலியார் ஈரோட்டிற்கு வந்ததை இலங்கைப் பிரதிநிதியாகக் கொள்ளாமல் இந்தியப் பிரதிநிதியாகக் கொண்டதின் நியாயம் விளங்கியது. வடமாகாணப் பிரிவு சம்பந்தமான மற்றொரு கேள்விக்குத் தங்கள் விடை யாது?

வே. த. ஆறுமுகம்

விடை: இலங்கையில், வடமாகாணத்திலுள்ள செங்குந்தர்களுக்குள் மனவேற்றுமைகளும், கட்சிப் பிணக்குகளும் இருக்கலாம். அது, எச் சமூகத்தினரிடத்தும், எம் மதத்தினரிடத்தும், எத் தேசத்தினரிடத்தும் காணப்படுவதேயாகும். அவ்வாறின்றி, அங்கு சமூக உட்பிரிவுகள் இருப்பதாகத் தெரியவில்லை. அதுபற்றி இலங்கை அபிமானி ஒருவர் நமக்கு எழுதியுள்ள கடிதமொன்றே பொருத்தமான விடையாக அமைந்திருப்பதால் அதனை உள்ளவாறே கீழே தருகிறோம்.

(ப - ர்.)

இந்திய-இலங்கை செங்குந்தர் ஒற்றுமை விஷயமாக உங்கள் பதிலை திரு. ஆறுமுகம் அவர்கள் திருத்த முயன்றதை நான் மிகவும் ஆச்சரியத்துடன் கவனித்தேன். அவருடைய முதற்கேள்விக்கு உங்கள் பதில் முழுதும் சரியாகும்.

இரண்டாவது கேள்வியில் 'அவர் வட மாகாணத்தில் இரு பிரிவினர் இருப்பதாக தெரிவிக்கிறார். இலங்கையில் செங்குந்தர் பெரும்பாலும் யாழ்ப்பாணக் குடா (வட மாகாண) வாசிகளே. யாழ்ப்பாணத்தில் கூடிய தொகையினர் நல்லூரிலும் திருநெல்வேலியிலும் வசிக்கின்றார்கள். திரு. ஆறுமுகம் கூறும் பிரிவுகள் டை இடங்களில் இருப்பதாக அறியக் கிடக்கவில்லை. ஒருவேளை கொடிகாமத்திலாவது அல்லது மற்றும் சிறுபான்மையோர் வசிக்கும் இடங்களிலாவது இருப்பதாகத் தெரிவித்தவரோ தெரியவில்லை. அப்படியானால் அவர் வடமாகாணமென்று பொதுவாகக் கூறுவது பொருந்தாது.

---

(முன் பக்கத்தொடர்ச்சி)

கோதையர்களே மிகுந்து காணப்படுகின்றனர். தன்னலங் கருதுஞ் சுயநலத் தோகையர்களே தோன்றப்படுகின்றனர். நமது தாய் நாடும் சமூகமும் முன்னேற்றமடைய வேண்டுமெனில், நம் நாட்டு மாதர்கள் நல்ல கல்வியறிவுடையவர்களாய்த் திகழ்தல் வேண்டும். உயர்தரக் கல்வியிலுங்கூட சிறிது ஞானமுடையவர்களாக விளங்குதல் வேண்டும். கற்பின் பொக்கிஷங்களாகவும் காதல் மணிகளாகவும் திருந்தவேண்டும். அன்பின் களஞ்சியங்களாக விளங்கவேண்டும். தமிழ் நாட்டு அறிஞர்கள் இதற்கேற்ற வழிகளைக் கோலுமாறு வேண்டுகிறோம். ஆண்டவனும் அதற்குத் துணை புரிவானாக.



அல்லாமலும் இவ்விடத்திலுள்ள சிலாது மனவேற்றுமைகளை ஓர் முக்கியமாகக் கருதினாரோ அன்றி, நல்லூர்-திருநெல்வேலியிலுள்ள இரு சங்கங்களை இரு பிரிவினராக எண்ணினாரோ விளங்கவில்லை அப்படி எண்ணினால் அதுவும் பிழையே. மனவேற்றுமைகள் எல்லாச் சமூகத்துள்ளும் காண்பதொன்று.

வடஇலங்கை செங்குந்த மகாஜன சங்கமும், செங்குந்தர் ஐக்கிய சங்கமும் வெவ்வேறு நோக்கங்களையுடையன. முன் கூறியது பெரும்பான்மையாகச் சமூக முன்னேற்றத்தையும் ஒற்றுமையையும் நோக்கமாகக் கொண்டிருக்கப் பின் கூறியது வியாபார விர்த்தியையும் (Co-operative line) பண உதவிச் சங்க (Benefit Association) வழிகளையடுத்த நோக்கங்களையுமுடையதாக அறியப்படுகிறது. ஆதலால் இவ்விரு சங்கங்களை இரு பிரிவினரென எண்ணுவது சரியாகாது.

இலங்கை அபிமானி.

* * *

[ஸ்ரீ ஆறுமுகம் வட மாகாணத்திலுள்ள கட்சிப் பிளவுகளைத்தான் குறித்திருக்கிறார் என்பது அவரே எழுதியுள்ள மற்றொரு கடிதத்தால் விளங்குகிறது. எனவே, அதனையும் கீழே வெளியிடுகிறோம். ப-ர்]

கனம் மிக்க ஐயாவே,

சென்ற மித்திரனில் தாங்கள், நான் கேட்டுக்கொண்ட கேள்விகளுக்குள், 'நமக்குள்ளிருக்கும் உட்பிரிவுகளை நீக்கி ஒற்றுமையாக்குவது எவ்வண்ணம்?' என்ற கேள்விக்கு அளித்த பதில் மிகவும் மெச்சத்தக்கதாயிருக்கிறது. ஆனாலும், அப் பதிலினால் இலங்கையிலிருக்கும் நம்மவருள் ஏறக்குறைய 100-க்கு 90 வீதத்தையும் எங்களுடைய சீவிய காலத்திற்குள்தானும் ஒற்றுமைப்படுத்த முடியாதென்றே தெரிகிறது.

ஏனெனில், நம் செங்குந்தர்களுக்குள்ளிருக்கும் கற்றறிந்து விளங்கும் பெரியார்கள் வெகு சிலராகும். இக் கற்றறிந்தவர்கள் புதிய வழிகளைக் காட்டவேண்டியதிருந்தும், அப்படிச் செய்யாது விடுவதுமல்லாமல், தம் தம் சுற்றத்தாரைத் தழுவித் தன்னயங் கருதி நடப்பதொழிய மற்றைய செங்குந்தர்களைச் சார்ந்து நடப்பதில்லை. நியாயயீனமான காரியத்தை நம்மவருள் ஒருவன் மறு பிரிவிலுள்ள ஒருவனுக்குச் செய்தால், அவனுடைய இனத்தவராயிருக்கும் பெரியாரும் அவன் செய்தது பிழை என்று சொல்லாது மற்றக் கட்சியாரோடு பேச்சு வார்த்தை யில்லாமலும், அவர்களுடைய நன்மை தின்மைகளுக்கு இவரும் இவரினத்தோரும் போய் உறவு கொண்டாடாமலும் விடுகின்றனர்.

"பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல

ராகுதல் மாணார்க்கரிது" என்ற வள்ளுவர் வாக்கின்படி பல நூல்களைக் கற்றவிடத்தும் மன நல்லரா யில்லாதவர்களிடையில் எங்ஙனம் உட்பிரிவுகள் நீங்கும்.

நம் தாய் மார்களுக்குள் 100-க்கு 5 வீதம் தானும் கற்றறிந்த நற்குணமுடைய வித்வசிரோமணிகளில்லை. பெரும்பாலோர் கற்றறியாதவர்களாயிருந்தும், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று எண்ணித்

தம் சுற்றத்துப் பெண்களைத்தனிலும் ஒத்து நடவாதவரா யிருக்கையில் எங்ஙனே ஒற்றுமையை ஓட்டச் செய்வது.

எல்லோரும் படித்து, ஒரே அறிவுள்ளவர்களா யிருந்து வித்தியாசம் காட்டாமலிருக்க எவ்வளவு காலம் செல்லுமோ?, இது விஷயத்தில் இளைஞர்கள் எவ்விதம் முயற்சி எடுத்துக்கொள்ளுவது?

வே. த. ஆறுமுகம்.

பதில். பெரியவர்களிடத்தில் காணப்படுவதாக திரு. ஆறுமுகம் அவர்களால் எடுத்துக் காட்டப்பட்ட குறைபாடுகள் இளைஞர்களைப் பற்றாதிருக்க முயல்வதும், இளைஞரனைவரும் கற்றறிந்தோராய்த் திகழ முயல்வதும், மனவேற்றுமைகளுக்குச் சற்றும் இளைஞர்கள் இடந்தராது ஒன்றுபட்டுழைத்தலுமே இளைஞர்கள் மேற்கொள்ள வேண்டிய கடமையாகும். அவ்வாறிருப்பின் இளைஞர்கள் காலத்தி லாவது எதிர்பார்க்கும் பலன் கிடைக்குமென்பது நிச்சயம்.

---

## இந்திய செங்குந்த இளைஞர்களுக்கு ஓர் வேண்டுகோள்

நமது மித்திரன் ஒவ்வொரு மாதமும் எல்லாக் கூடாக்களிலுள்ள செங்குந்தர்களுடைய சுக, துன்பங்களை அறிவித்து வருகிறான். ஆனல், இவ்விலங்கையிலுள்ள நம் இளைஞர்களும், இந்திய செங்குந்த இளைஞர்களும் தம் தம் விருப்பத்திற்கேற்றவாறு ஒரு ஊர்ச் செய்தியை மறு ஊரிலுள்ளவருக்குக் கடிதமூலமாய் எழுதி அறிவித்தாலென்ன? அக்கடித மூலமே சினேகித்துக் கொண்டாலென்ன? (Pen Friends) அதாவது எழுத்து மூலமாய் இன்றுதொடக்கம் சினேகித்து வந்தால் காலம் செல்லச் செல்ல உண்மையான சினேகிதராவார்களல்லவா? மனமுண்டானல்தானே இடமுண்டு. ஆகையால், இந்திய செங்குந்த இளைஞர்கள் எனது விலாசத்திற்கு இவ் வேண்டுகோளுக்குப் பதில் எழுதிக் கொள்ளலாம்.

'ஶ்ரீதேவி வாசம்'

கொடிகாமம், சிலோன்.

நம்குல அபிமானத்தை விரும்பும்,
வே. த. ஆறுமுக முதலியார்.

---

## அநுதாபம்

சென்னை, சைதாப்பேட்டை சு. அங்கு முதலியார் அவர்கள் 19-3-34-ந் தேதி இவ்வுலகம் நீத்தமை கேட்டு மிக்க வருத்தமடைகிறோம். அங்கு முதலியார் சைதாப்பேட்டை முனிசிபல் சேர்மன் திரு. சு. சடையப்ப முதலியார் அவர்களது தமையனாராவர். அங்கு முதலியாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அவர் பிரிவாற்றாமையால் வருந்தும் அவரது குடும்பத்தினரனைவருக்கும் நமது அநுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். (ப-ர்)

---

# வர்த்தமானம்

## சென்னை மார்க்கட்டு நிலவரம்

13—4—34

### நூல் தினுசுகள்

| செ. | ராத்தல் | நூல் ரகம் | விலை |
|---|---|---|---|
| 40 | 5 | டாக்கிரி | ரூ. 3- 8-0 |
| ,, | 5 | சலவை எனிடிக்கட் | ரூ. 4- 3-6 |
| ,, | 5 | சலவை நாககன்னிகை | ரூ. 4- 6-0 |
| ,, | 10 | ஜப்பான் கலர் பந்து | ரூ. 6-13-6 |
| ,, | 5 | மதுரை மில் | ரூ. 3- 1-0 |
| 30 | 5 | லாயல் மில் | ரூ. 2- 9-0 |
| ,, | 5 | மதுரைமில் | ரூ. 2-10-0 |
| 20 | 10 | மதுரை மில் | ரூ. 4- 0-0 |
| 20 | 10 | ஸ்டேன்ஸ் மில் | ரூ. 8- 4-0 |
| 20 | 10 | லாயல் மில் | ரூ. 3-14-0 |
| 60 | 5 | சீமை எருதுகாரம் | ரூ. 5- 7-0 |
| 60 | 5 | சிகப்பு அசல் மயில் | ரூ. 9-12-0 |

### ஜவுளிகளின் விலை

| | | |
|---|---|---|
| 22 × 22 காரிகன் மல் | கிரிப்பாம்பு (பி.) | ரூ. 6- 3-0 |
| ,, | ஆவரேஜ் ரகம் | ரூ. 5- 9-0 |
| ,, சலவை மல் | கிரிப்பாம்பு | ரூ. 6-15-0 |
| ,, ,, | ஆவரேஜ் ரகம் | ரூ. 5-11-0 |
| 1708-ம் நெம்பர் மல் | | ரூ. 9- 2-0 |
| 9000 கிளாஸ்கோ மல் | | ரூ. 9- 0-0 |

| | |
|---|---|
| சவரன் 1-க்கு | ரூ. 21- 3-6 |
| வெள்ளி ரூபா எடை | ரூ. 0- 9-6 |

### கப்பல் செய்திகள்

| | | | |
|---|---|---|---|
| S. S. எரின்பூரா | ரங்கூனுக்கு | 20-4-34 | காலை 10 மணி |
| S. S. ரஜூலா ஸ்ட்ரெயிட்ஸுக்கு | | 24-4-34 | மாலை 4 மணி |

## தமிழ் நாட்டு நடப்பு

**'ஸ்வராஜ்யா' புதிய கட்டடத் திறப்பு**

சென்னை, காங்கிரஸ் மண்டபத்திற்குப் பின்புறம் அமைக்கப்பட்டுள்ள 'ஸ்வராஜ்யா' புதிய கட்டடத் திறப்பு விழா 16-3-34 காலை 8-30 மணிக்கு திரு. K. நாகேஸ்வர ராவ் பந்துலுகாருவினல் ஆற்றப்பட்டது.

### கடனில் நடைபெறும் முனிசிபாலிடிகள்

சென்னை மாகாணத்தில் ஹிந்துபூர், வாணியம்பாடி, வாலாஜா பேட்டை, பெல்லாரி, சைதாப்பேட்டை, சித்தூர், கோயமுத்தூர் பர்லாகிமிடி, நரசராவ் பேட்டை, நந்தியால், பழநி, கண்ணனூர், தலைச்சேரி, கும்பகோணம், மன்னார்குடி, திருநெல்வேலி, நெல்லூர், ஸ்ரீரங்கம் ஆகிய முனிசிபாலிடிகள் கடனில் நடைபெறுவதாக முதன் மந்திரி சென்னை சட்டசபையில் அறிவித்தார்.

### சென்னை கார்பொரேஷன் தேர்தல்

சிந்தாத்திரிப்பேட்டை டிவிஷனில் நடந்த கார்பொரேஷன் உப தேர்தலில் டாக்டர் வி. கோவிந்தனும், V. M. ராமசாமி முதலியாரும் போட்டி யிட்டதில் டாக்டர் கோவிந்தன் அவர்கள் அதிகப்படி யான ஓட்டுகள் பெற்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### சென்னை கவர்னரிடம் தூது

சென்னை, சட்டசபை அங்கத்தின ரடங்கிய ஒரு தூது கோஷ்டி ராவ்பகதூர் T. A. ராமலிங்கஞ் செட்டியார் தலைமையில் சென்று கவர்னரைப் பேட்டி கண்டு இந்தியாவில் இறக்குமதியாகும் அரிசிக்கும் கொப்பரைக்கும் வரிவிதித்து உள்நாட்டு மார்க்கெட்டுக்கு ஆதரவு காட்டுமாறு வற்புறுத்தினர்.

மற்றொரு கோஷ்டியார் ஸ்ரீ பி. முனிசாமி நாயுடு தலைமையில் சென்று ஜமீன் நிலச் சட்டத்திருத்த மசோதாவை அங்கீகரிக்குமாறு வற்புறுத்தினர்.

### தாலுகா போர்டுகள் ரத்துச் சட்டம்

தாலுகா போர்டுகளை ஒழிக்கவும், ஜில்லா போர்டுகளைப் பிரிக்கவும் வேண்டி சென்னை சட்டசபையில் நிறைவேற்றப்பெற்ற ஸ்தல ஸ்தாபன திருத்த மசோதாவுக்கு கவர்னர் ஜெனரல் அனுமதி அளித்து விட்டார். சென்னை சர்க்கார் கெஜட்டிலும் மசோதா பிரசுரிக்கப் பட்டிருக்கிறது.

### சென்னை சட்டசபையில் 1111 கேள்விகள்

மொத்தம் சென்னை சட்ட சபையில் கிடைத்த 1111 கேள்விகளில் 880 அனுமதிக்கப்பட்டன. இவற்றில் 4 வாபீஸ் வாங்கிக்கொள்ளப்பட்டன. ஒன்றுக்கு பதில் கூறவில்லை. 875 கேள்விகளுக்கு சர்க்கார் பதில் கூறியிருக்கிறார்கள்.

### திருநெல்வேலி ஜில்லா போர்டு பிரிவினை

திருநெல்வேலி ஜில்லா போர்டை இரண்டாகப் பிரிக்கக் கூடாதென சர்க்காரை வேண்டுவதாக 24-3-34-ல் ஒரு தீர்மானம் மேற்படி ஜில்லா போர்டு நிறைவேற்றி சர்க்காருக்கு அனுப்பியிருக்கிறது.

### நாவிதர்கள் வேலை நிறுத்தம்

26-3-34 முதல் சிதம்பரத்திலுள்ள மருத்துவ குலத்தவர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் முனிசிபல்



ஸ்பெஷல் ஆபீசர், அவர்க ளனைவரும் லைசென்ஸ் வாங்கி தொழில் நடத்தவேண்டும் என்று உத்தரவு போட்டதேயாகும்.

### சுயமரியாதை தினசரிப் பத்திரிகை

இம் மாதம் 15-ந் தேதி முதல் ஈரோட்டிலிருந்து 'பகுத்தறிவு' என்ற சுயமரியாதை தினசரிப் பத்திரிகை வெளி வரும். இதன் விலை காலணா.

### காமக்கூர் பிரம்மோற்சவம்

ஆரணிக்கு சமீபத்திலுள்ள காமக்கூர் என்ற காமாபுரியில் 20-3-34 முதல் 30-3-34 வரை ஸ்ரீ அமிர்தாம்பிகை சமேத ஸ்ரீ சந்திர சேகரப்பெருமானுக்கு பிரம்மோற்சவம் சகல வைபவங்களுடன் மிக்க சிறப்பாக நடைபெற்றது. இவ்வளவு சிறப்பாக நடைபெறுதற்குக் காரண கர்த்தர்களா யிருந்த ஸ்ரீமான்கள் ப. ராமசாமி முதலியார் அ. மாணிக்க கவுண்டர் இவர்களுக்குப் பொது மக்கள் வாழ்த்து உரியதாகுமென ஒரு அன்பர் அறிவிக்கிறார்.

### கடலாடியில் அஜமேத யாகம்

திருவண்ணாமலையை அடுத்த காஞ்சி கடலாடியில் பிராம்மணர்கள் அஜமேதயாகம் (ஆடு வதை யாகம்) செய்யப்போவதாகவும், அதற்குஇரண்டாயிரம்ரூபாய்க்குமேல்செலவாகுமென்றும், ஒவ்வொரு வேளையும் ஆயிரக் கணக்கான பிராம்மணர்கள் பந்தி போஜனம் செய்வார்களெனத் தெரிவதாகவும், அந்த யாகத்தால் புண்ணியமோ அல்லது ஏழைகளுக்கு பசிப் பிணி நீக்கமோ, வரிக் குறைவோ, கல்வி வளர்ச்சியோ ஏற்படாதென்றும், துன்பமே விளையுமென்றும் கூறி, பொது மக்கள் யாகத்துக்குக் காசைக் கொடுத்து ஆட்டுக் கொலையினால் வரும் பாபத்தைத் தேடிக்கொள்ளா திருக்குமாறு கேட்டுக் கொள்வதாகவும் அவ்வூர் சமதர்ம வாசகசாலையார் அறிவிக்கிறார்கள்.

## இந்தியச் செய்திகள்

### பீகார் சர்க்காரின் கடனுதவி

பூகம்பத்தால் வீடு வாசல் இழந்துள்ளவர்களுக்கு கீழ்க் கண்ட நிபந்தனைகளின்படி கடன் கொடுக்க பீகார் சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

(1) வேறிடத்தில் கடன் வாங்க முடியாத நிலையிலுள்ளவர்களுக்கு 4½% வீதம் வட்டிக்குக் கடன் கொடுக்கப்படும். முதல் வருஷத்திற்கு மட்டும் வட்டியே கிடையாது. 6 மாதத்திற்கு ஒரு தவணையாக 16 தவணைகளில் கடனைத் திருப்பிச் செலுத்தலாம்.

(2) நடுத்தர சொத்துள்ளவர்களுக்கு 6¼% வட்டி வீதம் கடன் கொடுக்கப்படும். இதனை 15 வருஷத்தில் திருப்பிச் செலுத்தவேண்டும்.

### பருத்திக் கட்டணம் குறைக்கப்பட்டது

ஏப்ரல் 1-ந் தேதி முதல் பருத்தி மீது விதிக்கப்பட்டிருந்த நகரத் தீர்வையை ரத்து செய்வதென பம்பாய் சர்க்காரும் துறைமுகக் கட்ட

ணத்தைக் குறைப்பதென துறைமுக அதிகாரிகளும் தீர்மானித்துள்ளனர்.

## பால் அருந்துமாறு பிரசாரம்

தயிர், பால் பண்ணைகளை விருத்தி செய்வதற்காகவும், பால் அருந்தும்படி பிரசாரம் செய்வதற்காகவும் உபகமிட்டிகள் நியமித்து இந்தியாவின் முக்கிய நகரங்களில் சுற்றுப் பிரயாணஞ் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம்.

## பிரஞ்சு இந்திய நில அடமான பாங்கி

பிரெஞ்சு இந்திய விவசாயிகளுக்கு உதவி செய்யும் பொருட்டு பிரெஞ்சு குடிஅரசு சர்க்கார் நில அடமான பாங்கி ஒன்றை ஸ்தாபிக்க முடிவு செய்துள்ளனர்.

## போஜன மேஜையில் ரயில்வண்டி

குவாலியர் மகாராஜாவின் புதல்விக்கு விவாகம் நடக்கப்போகிறது. விவாக விருந்து விசித்திரமாயிருக்கும். ஒரு பெரிய மேஜையின் மீது தண்டவாளம் அமைக்கப்பட்டு அதன்மீது வெள்ளி ரயில் வண்டி ஓடிக்கொண்டிருக்கும். ரயில்வண்டிகள் ஒவ்வொன்றிலும் தட்டுகளில் காய்கறிகள் வைக்கப்பட்டிருக்கும். அது மெதுவாகச் சுற்றிக்கொண்டு வரும்போது விருந்தினர் தமக்கு வேண்டிய காய்கறியுள்ள தட்டுகளை எடுத்துக்கொள்ளவேண்டும்.

## சமஸ்தான பிரஜைகளின் பத்திரிகை

சமஸ்தானப் பிரஜைகளுக்கெனத் தனியே 'ஸன்' என்ற பெயருடன் ஓர் ஆங்கிலப் பத்திரிகை தொடங்கப்பட்டுள்ளது. இதன் முதல் இதழில் 'சோதனை காலத்தில் தேசம் தளர்வுறுது' என்ற தலையங்கத்தில் 'தேசத்தின் முன்பு போலித் திருத்தம் தொங்கவிடப்பட்டிருக்கிறது. இந்திய தேசீயம் அதை ஏற்றுக்கொள்ள உறுதி கூறுமாறு அழைக்கப்பட்டிருக்கிறது. ஏற்குமா? ஒருக்காலும் ஏற்காது.' என்று குறிப்பிட்டுள்ளது.

## நேபாள மகாராஜாவின் உதவி

பூகம்பத்தால் அதிக சேதமடைந்த இடங்களில் நேபாளமும் ஒன்று. பூகம்ப கஷ்ட நிவாரணத்திற்காக மகாராஜா ஒரு நிதி ஏற்படுத்தி அதில் தன் பேரால் 3 லட்சமும் மகாராணி பேரால் ஒரு லட்சமும் போட்டிருக்கிறார். பூகம்ப சேதத்தால் வருந்துவோர்க்குக் கடன் உதவி செய்ய ஒரு தனி நிதி ஏற்படுத்தி அதற்கு 50 லட்சம் கொடுத்திருக்கிறார்.

வெளி வேஷம், டாம்பீகம் ஆகியவைகளை நீக்கி, தேச மக்களனைவரும் ஒன்று சேர்ந்து இடிந்த கட்டடங்களைக் கட்டுவது மட்டுமன்றி கஷ்டப்படும் ஜனங்களுக்கும் உதவி யளிக்கவேண்டுமென்றும், கட்டடமமைக்க இடம், கல், சுண்ணாம்பு, தேக்கமரம் ஆகிய எல்லா உதவிகளையும் செய்ய சமஸ்தானம் தயாராக இருக்கிறதென்றும் மகாராஜா அறிவித்துள்ளார்.



## கார்போரேஷனில் அமளி

பம்பாய் கார்பொரேஷன் கூட்டம் 19-3-34-ந் தேதியில் நடந்துகொண்டிருந்தபோது வேலையற்ற ஜனங்கள் ஒரே கூட்டமாக சபைக்குள் நுழைந்து 'நாங்கள் பசியால் கஷ்டப்படுகிறோம். எங்களுக்கு உணவு கொடுங்கள்' என்று கூக்குரலிட்டனர். அவர்களை எவ்வளவோ கேட்டுக்கொண்டும் வெளியேற மறுத்துவிட்டதால் போலீசார் வந்து அவர்களை வெளியேற்றுமாறு ஏற்பட்டது.

## அக்ல்கோட் ராணி மரணம்

குவாலியர் இளவரசியும், சமீபத்தில் அகல்கோட் மகாராஜாவை மணந்துகொண்டவருமான கமலராஜாவிற்கு 19-3-34-ல் ஒரு மோட்டார் விபத்து ஏற்பட்டதால் இறந்துவிட்டார்.

## ஹரிஜன நிதி

மகாத்மா காந்தி கடந்த நான்கு மாதங்களில் யாத்திரை செய்து ஹரிஜன முன்னேற்ற நிதிக்கு 3 லட்சத்து 75 ஆயிரம் ரூபா வசூலித்துள்ளார். ஜில்லா கமிட்டிகள் முன்னேற்ற சம்பந்தமான திட்டங்களைத் தயாரித்து வருகின்றன.

## வங்க போலீசை மிஞ்சுவோர் இல்லை

தற்பொழுதுள்ள நெருக்கடியான நிலையில் போலீஸ் அதிகாரிகளும் கான்ஸ்டேபில்களும் புரட்சிக்காரர்களை அடக்கச் செய்து வரும் வேலை அபாரமானதென்றும், இவ்விஷயத்தில் வங்க போலீஸ் அதிகாரிகளை மிஞ்சுவோர் எவருமில்லை என்றும் வங்க சட்டசபை விவாதத்தின் போது ஹோம் மெம்பர் கூறினார். வங்க போலீசுக்காக 2 கோடியே எட்டு லட்சத்து முப்பதாயிரம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

சுமார் 60 தினங்களாக மூல்டான் சிறையில் உண்ணாவிரதமிருந்துவரும் உபயதுல்லாகானை விடுதலை செய்யுமாறு மாளவியாஜீ கோரியதற்கு அது எல்லைப்புற சர்க்காரைப் பொறுத்த விஷயமென்றும், தான் தலையிட முடியாதென்றும் வைசராய் பதிலளித்துள்ளார். இப்போது உபயதுல்லாகான் ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## பழங் குற்றவாளி

ஷேக் இஸ்மெயில் என்பவன் 51 தடவை தண்டனையடைந்தான் மீண்டும் 52-வது தடவையாக அவனுக்கு கல்கத்தா மாஜிஸ்டிரேட் 22-3-34-ல் 3 மாத கடுங்காவல் தண்டனை விதித்துள்ளார்.

## நேபாள ராஜவம்சத்தினர் வெளியேற்றம்

நேபாள ராஜ்யத்தில், பின் அரசுரிமையில் சில தகராறுகள் இருந்தன. அரசரின் மூன்றாவது கிளையினரில் ஒருவர் வருங்கால மகாராஜாவாக வரவேண்டியிருந்தது. அவர் அரசராக வருவதில் நேபாள மக்கள் மிகுந்த அருவருப்பு கொண்டிருந்தனர். எனவே மகாராஜா 18-3-34-ந் தேதி மூன்றாவது கிளை வம்சத்தினரை தர்பா

ருக்கு வரவழைத்து அவர்கள் பட்டத்துக்கு வரும் உரிமையைப் பறிமுதல் செய்து விட்டதாகவும், தற்போதுள்ள 18 ராணுவங்களில் இவர்களுக்குள்ள ஆதிக்கம் இனி இல்லை என்றும் தெரிவித்துவிட்டார்.

அரசருக்கோ அல்லது அவரது சகோதரர்கள் 16 பேர்கட்கோ அதேவம்ச பெண்களிடமே பிறந்தவர்கள் முதற்கிளை. இவர்களுக்கு வேறு குல ஸ்திரீகளிடம் பிறந்தவர்கள் இரண்டாவது கிளை. இழிந்த குல ஸ்திரீகளிடம் பிறந்தவர்கள் மூன்றாவது கிளை. இந்த மூன்றாவது கிளையிலேயே ஒருவருக்குக் கிடைக்க வேண்டியிருந்த பட்டத்தை அரசர் பறிமுதல் செய்துவிட்டார்.

## ரிசர்வ் பாங்கி கவர்னர்கள்

இம்பீரியல் பாங்கியின் மானேஜிங் கவர்னரான சர். ஆஸ்பர்ன் ஸ்மித் ரிசர்வ் பாங்கியின் கவர்னராகவும், நிதி இலாகா உதவி காரியதரிசி ஜ. பி. டெய்லரும் இந்தியா சட்ட சபைத்தலைவர் சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியாரும் உதவி கவர்னர்களாகவும் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

## கட்டுண்ட கைகளுடன் நீந்தினார்

நீந்துவதில் மிகவும் நிபுணரான ஸ்ரீ. பி. கே. கோஷ் சென்ற வருஷம் நாள் கணக்காக தண்ணீரில் நீந்தி இருந்து வெகுமதிகள் பெற்றார். 31-3-34-ல் ஏராளமான ஜனக்கூட்டத்தின் மத்தியில் கல்கத்தா மேயர் அவர் கைகளைக் கட்டிவிட்டார். கட்டினபடியே ஸ்ரீ கோஷ் நீந்தினார். 24 மணிநேரம் அப்படியே நீந்திக் கொண்டிருந்தனராம்.

## பழைய சுவராஜ்யக் கட்சிக்குப் புத்துயிர்

புதுடில்லியில் டாக்டர் அன்சாரி மாளிகையில் 31-3-34, 1-4-34 தேதிகளில் கூடிய காங்கிரஸ் தலைவர்கள் மகாநாட்டில் (1) சுயராஜ்யக் கட்சியை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமென்றும் (2) அடுத்த இந்தியா சட்டசபைத் தேர்தலில் அபேட்சகர்களை நிறுத்தி அடக்குமுறைச் சட்டங்களை ரத்துசெய்ய வேண்டுமென்றும், (3) வெள்ளை அறிக்கையை நிராகரித்து லண்டன் மகாநாட்டில் மகாத்மா குறிப்பிட்ட முறைகளில் தேசிய கோரிக்கைகளைப் பெற முயல வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின. இவற்றிற்கு மகாத்மாவின் அங்கீகாரமும் கிடைத்துள்ளது.

## பெருங் கொடை

கல்கத்தா பிரபல வர்த்தகரான ஸ்ரீ டேவிட் எக்ஸிஸ் என்பவர் பூகம்பத்தால் கஷ்டப்படுவோருக்கு 1500 பேர்கள் வரை தங்கக்கூடிய 250 வீடுகள் கட்டிக்கொடுக்க முன் வந்துள்ளார். ஆனால் ஏழை ஜனங்கள் வீடுகளைப் புதுப்பித்துக் கொண்ட பின் இந்த வீடுகள் காலி செல்யப்பட வேண்டும். அதன்பின் இவை ஆஸ்பத்திரிகள், பாடசாலைகள் முதலியன நடப்பதற்காக சர்க்காரிடம் ஒப்படைக்கப்படும்.



## ஹிந்தி பரீட்சை

தக்ஷிண பாரத ஹிந்தி பிரசார சபையின் ஆதரவில் நடந்த பரீட்சையில் மொத்தம் 4238 பேர்கள் ஆஜரானார்கள். அவர்களில் 2771 பேர்கள் தேறினர்.

## ராஜாங்க சபைத் தேர்தலில் சாப்ரூ புதல்வர்

காலஞ்சென்ற சர். மோதிசந்திரர் ஸ்தானத்திற்கு நடக்கும் ராஜாங்கசபைத் தேர்தலில் சர். தேஜ்பகதூர் சாப்ரூவின் புதல்வரான ஸ்ரீ பி. என் சாப்ரூ நின்றிருக்கிறார்.

# வெளியுலகப் போக்கு

## மாஜி கெய்சர் ஜெர்மனிக்குத் திரும்புவார்

ஜெர்மன் மாஜி கெய்சருக்குப் பண நெருக்கடி ஏற்பட்டிருப்பதால் அவர் ஜெர்மனிக்குத் திரும்பும்படி ஏற்பட்டிருக்கிறதாம்.

## சிலோன் தேயிலை ரப்பர் ஏற்றுமதி

இலங்கை வர்த்தகமானது படிப்படியாக அபிவிருத்தி யடைந்து வருகிறது. 1933 ஜனவரி மாதத்தில் இலங்கையில் ஏற்றுமதியான தேயிலை, ரப்பர் இவற்றின் மதிப்பு ரூ. 10107776 ஆகும். ஆனால் 1934 ஜனவரியில் 18798384 ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. பிப்ரவரி மாதத்தில் ஏற்றுமதி சற்று உயர்ந்திருக்கிறது. பிப்ரவரியில் 20297364 ரூபாய்க்கு ஏற்றுமதியாகி இருக்கிறது.

## முசோலினியைக் கொல்ல சதி

இத்தாலி சர்வாதிகாரியான ஸினர் முசோலினியைக் கொல்ல முயன்று, குண்டு வீசியதாக பாஸிஸ்ட் இயக்கத்திற்கு விரோதிகளான நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## மூன்று நாடுகளுக்குள் ஒப்பந்தம்

இத்தாலி, ஆஸ்டிரியா, ஹங்கேரி ஆகிய மூன்று நாடுகளுக்குள் ஒன்றுக் கொன்று உற்பத்திச் சரக்குகளை வாங்கிக் கொள்வதென்று ஒப்பந்தம் செய்துகொண்டன. இத்தாலியின் சார்பில் முசோலினியும், ஆஸ்டிரியாவின் சார்பில் டால்பஸும், ஹங்கேரியின் சார்பில் கோயம்பசும் கைச்சாத்திடுவர்.

## சென்னையின் அடுத்த கவர்னர்

லார்டு பீல் இந்தியா மந்திரியாக இருந்தபோது இந்தியா உதவி மந்திரி பதவியை வகித்தவராகிய லார்டு வின்டர்டனுக்கு சென்னை கவர்னர் பதவியை அளித்திருப்பதாகவும் அதை அவர் ஒப்புக் கொள்ளுவாரென்றும் தெரிகிறது.

## டாக்டர் அசரப்பா வழக்குத் தீர்ப்பு

கொழும்பு சுகாதார உத்தியோகஸ்தராகிய டாக்டர் அசரப்பா தமது மனைவியாகிய ஸ்ரீமதி அசரப்பாவின் மீது விவாக விடுதலைக்காகவும், அரசாங்க சபைத்தலைவர் ஸ்ரீ மொலமுரே தமது மனைவி

யைக் கற்பழித்ததாக அவர்மீது 25000 ரூபாய் நஷ்டஈட்டுக்காகவும் 19-2-34-ல் தொடர்ந்த வழக்கு 19 தினங்கள் தொடர்ச்சியாக விசாரணையிலிருந்து 21-3-34-ந் தேதி தீர்ப்புக் கூறப்பட்டது.

வாதி கோரியபடியே விவாகரத்தை ஜட்ஜ் அனுமதித்ததோடு ஸ்ரீ மொலமூரே 25000 ரூபாய் நஷ்ட ஈடு தரவேண்டுமென்றும் தீர்ப்பு கூறினார். இத்தீர்ப்பு ஜூன் 19-ந் தேதி அமுலுக்கு வரும்.

### ஜப்பானில் பெருந் தீவிபத்து

ஜப்பானில், ஹாக்கோடேட் நகரில் ஏற்பட்ட தீவிபதில் 1000 பேர் மரணமடைந்தனர். 27 வீதிகளில் 24 வீதிகள் வெந்து சாம்பலாயின. $1\frac{1}{2}$ லட்சம்பேர் வீடில்லாமல் தவிக்கிறார்கள்.

### ஒரு வருடத்தில் 3-லட்சம் விவாகம்

ஜெர்மன் சான்சலர் ஹெர் ஹிட்லர் மூனிச் நகரில் பேசும் போது இவ்வருஷத்தில் 3 லட்சம் சிறுமிகளுக்கு விவாகம் செய்து கொடுக்கப்படு மென்றும், வேலை இல்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க 10000 லட்சம் மார்க் செலவு செய்யப்படுமென்றும் கூறினார்.

### பிரிட்டிஷ் சர்க்கார் வரவு செலவு

மார்ச் 31-ந் தேதியோடு முடிவாகும் சென்ற வருஷத்திய பிரிட்டிஷ் சர்க்கார் வருமானம் 72,45,67,000 பொன் செலவு 69,34,19,000 பொன். எனவே 3,11,48,000 பொன் மிச்சம் ஏற்பட்டுள்ளது.

## எப்ரல் 1-ந் தேதி முதல் கீழ்க்கண்ட விகிதப்படி தபால் கட்டணங்கள் மாற்றப் பட்டுள்ளன

(1) $\frac{1}{2}$ தோலா எடையுள்ள கடிதங்கட்கு முக்காலணா.
(2) $2\frac{1}{2}$ தோலா எடையுள்ள கடிதங்கட்கு $1\frac{1}{4}$ அணா.
(3) 5 தோலா எடையுள்ள புக் போஸ்டுகளுக்கு முக்காலணா.
(4) தந்திக் கட்டணம் : எட்டு வார்த்தைகள் உள்ள ஆர்டினரி தந்திகட்கு ஒன்பதணா. அதற்கு மேல் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒரு அணா.

எட்டு வார்த்தையுள்ள எக்ஸ்பிரஸ் தந்திக்கு 1 ரூபா 2 அணா. அதிகப்படியான ஒவ்வொரு வார்த்தைக்கும் இரண்டணா.

உள் நாட்டு வாழ்த்துத் தந்திகளுக்கு ஆர்டினரியாயின் 6 வார்த்தைகட்கு ஆறணா. எக்ஸ்பிரஸ் தந்தியாயின் பன்னிரண்டணா. அதிகப்படியான வார்த்தைகளுக்கு முறையே ஒரு அணாவும், இரண்டணாவும் வசூலிக்கப்படும்.

### ஆகாயத் தபால் விகிதம்

இந்திய உள் நாட்டு ஆகாயத் தபால் அல்லது சர்வ தேச ஏகாதிபத்திய ஆகாயப் போக்குவரத்துக்கு சாதாரண தபால் கட்டணத்துக்கு மேல் ஒரு கார்டுக்கு முக்காலணாவும், $\frac{1}{2}$ தோலாவுள்ள கவருக்கு ஒரு அணாவும், 1 தோலாவுள்ள கவருக்கு இரண்டணாவும் அதிகமாகச் செலுத்த வேண்டும். மணியார்டர்கட்கு சாதாரண மணியார்டர் கட்டணத்துக்கு மேல் ஆகாயத் தபால் கட்டணம் எல்லா மணியார்டர்களுக்கும் ஒரு அணா செலுத்த வேண்டும்.

---

# நெசவுத் தொழிலாளர் கஷ்டம்

## சர்க்கார் கவனிப்பார்களா?

குகை, மார்ச், 18—

குகை ஸ்ரீ. ஆர். வெங்கடேசன் எழுதுவதாவது:—தற்சமயம் ஏற்பட்டிருக்கும் உலக பொருளாதார மந்தத்தால், பொதுவாக எல்லா வியாபாரங்களும் கைத்தொழில்களும் பாதிக்கப்பட்டு இருக்கின்றன என்பது அனைவரும் அறிந்த விஷயம். ஆனால் எல்லாவற்றைக்காட்டிலும் நெசவுக் கைத்தொழிலும், அதன் வியாபாரமும் மிக மிக சீர்கேடடைந்திருக்கின்றன.

கைத்தறிகாரர்களுக்கு முன் வருஷத்தைவிட கூலி கொஞ்சம் கொஞ்சமாக பாதிக்குமேல் குறைக்கப்பட்டு விட்டது. இன்னும் குறைக்கும் நோக்கம் இருக்கிறது. எவ்வளவு குறைந்த கூலிக்கு சம்மதப்பட்டாலும் நெய்ய பாவு கிடைப்பது கஷ்டமாகிறது. குடும்ப சம்ரக்ஷணை செலவோ நிற்பதில்லை.

நெசவு நெய்விக்கும் முதலாளிகளின் நிலைமையோ அதற்கு மேல் இருக்கிறது. தாங்கள் இதுவரை தயார் செய்து வைத்திருக்கும் சரக்குகளே அநேகமாக செலவாகாமல் இருப்பு வைத் திருக்கிறார்கள். அசலுக்குக் கம்மியாகவாவது விற்றுவிடலாம் என்று நினைத்தாலும் கேட்பாரில்லை. மேலும் நெய்விப்பதை நிறுத்தி விடுவதைக் காட்டிலும் குறைந்த கூலியாவது கொடுத்து தறிகளை நடத்தி வரலாம் என்று நினைக்கிறார்கள். இன்னும் இதேமாதிரி நிலைமை கொஞ்ச நாளைக்கு நீடித்திருந்தால் கதி என்னவாகுமோ தெரியவில்லை.

சென்னை மாகாணத்தில் நெசவுத் தொழிலுக்குப் பேர்போன இடங்களில் சேலம் ஜில்லாவும் ஒன்று. அங்கு குகையில்தான் ஏராளமான நெசவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கூலி முன் கொடுத்ததைவிட பாதிக்குமேல் குறைத்து விட்டார்கள். சென்ற வாரம் அனைவரும் வேலை நிறுத்தம் செய்ததன் பயனாய் குறைத்த கூலியில் கொஞ்சம் சேர்த்துக் கொடுப்பதாய் முதலாளிகள் கஷ்டத்துடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

அந்நியநாட்டு ஜவுளி இறக்குமதியும், இந்திய மில் ஜவுளி உற்பத்தியும் இந்தியாவில் அதிகம் ஆக ஆக நெசவுக் கைத்தொழில் மிக மிகக் குறைந்து விட்டது.

# மதிப்புரை

## ஞாயிறு

யாழ்ப்பாணத்துக் கலாநிலையத்தினரால் இரு திங்கட்கொரு முறை வெளியிடப் பெறுவதோர் தனித் தமிழ் வெளியீடாகிய ஞாயிற்றின் கதிர்கள் மூன்று கிடைக்கப் பெற்றனம்.

இவற்றுள் இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம், சரித்திரம், நாகரிகம் ஆகிய பொருள்பற்றி ஆய்ந்த அறிவுடையார் பலரால் எழுதப் பெற்ற கட்டுரைகள் பல மிளிர்கின்றன. இது இக் காலத்துத் தமிழகத்தே உலவும் பல வேடிக்கைப் பத்திரிகைகள் போன்றிராது அறிவு வளர்ச்சிக்கும் தமிழ்க் கலை யாக்கத்திற்கும் உரியனவாய ஆராய்ச்சிக் கட்டுரைகள் நிறைந்து, புத்துயிர் பெற்று வீறுகொண்டெழும் தமிழன்னைக்கோர் அணிகலனாய்த் திகழ்கின்றது. இத்தகைய உயரிய செந்தமிழ் வெளியீடு ஒன்றினைப் பெற தமிழுலகம் நெடு நாட்களாய் அவாவிய துண்டு. அவ்வவா கலாநிலையத்தினரால் இன்று நீக்கப்பட்டது.

ஞாயிற்றின் வளர்ச்சியில் பேரூக்கங் காட்டி உழைக்கும் அறிஞர்கள் பலருள் நமது அருமை நண்பரும், சென்னையினைச் சார்ந்தவருமான உயர்திரு. சுவாமி உருத்திர கோடீசுவரர் அவர்களும் ஒருவராயிருப்பது கண்டு பெருமகிழ் வெய்துகிறோம். இவர்கள் அங்கிருப்பது ஈழ நாட்டினும், இந்தியத் தமிழகத்தினுமுள்ள புலவர்களுக்குள் ஒருமை உள்ளமும் நட்புரிமையும் தோன்றத் துணையாயிருக்குமெனக் கருதுகிறோம்.

விலை யுயர்ந்த தடித்த பளபளப்பான தாளில் கண்கவர் வனப்பில் அச்சிடப் பெற்று 100 பக்கங்கள் கொண்டதாய் இது விளங்குகின்றது. இதன் ஆண்டுக் கட்டணம் நான்கு ரூபாய்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

மில்களில் குறைந்த செலவில் அதிக உற்பத்தியாவதால் கைத்தறி ஜவுளிகளின் விலையில் பாதிக்கு இந்திய மில் ஜவுளிகளின் விலை வந்து விட்டதுடன், கைத் தறி ரகங்களை விட மேலானதாகவும் ஏற்பட்டு விட்டன. ஆகையால் நெசவுக் கைத்தொழில் வர வர அறவே நின்றுவிடும் என்பதற்கு எவ்வித ஐயமுமில்லை. ஆகையால் அரசாங்கத்தாரும், சட்டசபை அங்கத்தினர்களும் உடனே நெசவுக் கைத்தொழிலுக்கு இந்திய மில் ஜவுளி அந்நிய ஜவுளிகளின் போட்டியினின்றும் பாதுகாப்பளித்து ஆதரவு ஏற்படச் செய்யவேண்டியது மிக முக்கியமும், அவசரமுமாம்.



தமிழராவார் ஒவ்வொருவரும் இதனை ஆதரித்துக் கலாநிலையத்தினரின் தமிழ்த் தொண்டு நிறைவேறத் துணை புரியுமாறு விரும்புகிறோம்.

கிடைக்குமிடம்: கலாநிலையம்,
வண்ணார் பொன்னை, யாழ்ப்பாணம்.

---

## திருவருட்பா

சென்னை, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்தினரால் வெளியிடப் பெறும் திருவருட்பாவின் முதற் பகுதியாகிய கீர்த்தனைப் பகுதி வரப் பெற்றோம்.

இது திரு. ஆ. பாலகிருஷ்ண பிள்ளை, பி.எ., எம்.எல்., (அட்வொகேட்) அவர்களது இரண்டாம் பதிப்பு.

திருவருட் பிரகாச வள்ளலாரெனும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவருட்பா இதுவரை பல அறிஞர்களாலும் அவ்வப்போது பதிப்பிக்கப்பெற் றிருக்கிறதாயினும் அப்பதிப்புகளனைத்தினும் திரு. பிள்ளையவர்கள் பதிப்பு பல தனிச் சிறப்பியல்களுடன் திகழ்வதை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இப்பதிப்பு, சுவாமிகள் திருக்கரத்தால் எழுதிய மூல ஏடுகள், சுவாமிகளிடம் தொண்டு பூண்டு அவர்களை அடுத்திருந்த அன்பர்களின் கையெழுத்துப் பிரதிகள் முதலியவற்றினின்றும் எடுத்துத் தொகுக்கப்பெற்றது. நன்கு ஆய்ந்து அனைவர்க்கும் தெளிவாய் விளங்கும்படி பாகுபாடு செய்யப்பெற்றது. உயர்ந்த காகிதத்தில் திருத்தமான வகையில் பிழை யொன்று மின்றி அடக்க விலைப்பதிப்பாக வெளியிடப்பெற்றது. அருட்பா முழுவதும் ஒரே புத்தகமாக அச்சிடப்பெறாது கீர்த்தனைப் பகுதி, வசனப் பகுதி, உரைப்பகுதி, உபதேசப் பகுதி, திருமுகப் பகுதி, தனிப்பாசுரப் பகுதி என ஆறு பகுதிகளாகப் பிரிக்கப் பெற்று அனைவரும் உடன்கொண்டு போவதற்கேற்ற அளவில் தனித்தனி பகுதியாகப் பதிப்பிக்கப் பெற்றது. ஒவ்வொரு பாடலுக்கும் ஸ்வர ரூபம் காட்டப்பட் டிருத்தலின் படிப்போர்க்குப் பெரிதும் உபகாரமா யிருக்குமெனக் கருதுகிறோம். ஆங்காங்கு சிற்சில குறிப்புரைகளும் காணப்படுகின்றன.

வள்ளலாரிடம் அன்பும், தமிழ்மொழிப் பற்று முடையார் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருக்கவேண்டியது மிக அவசியமாகும். பூல்ஸ்காப் (Fools cap) $\frac{1}{8}$ அளவில் 240 பக்கங்கள் கொண்ட இக் கீர்த்தனைப் பகுதியின் விலை அணா பன்னிரண்டே.

புத்தகம் வேண்டுவோர் நமது செங்குந்த மித்திரன் புத்தகசாலையிலாவது, சென்னை பவழக்காரத் தெருவிலுள்ள ஆசிரியர் நூற்பதிப்புக் கழகத்திலாவது பெற்றுக்கொள்ளலாம்.

---

# கிளர்ச்சி

## வடாற்காடு ஜில்லா

### கடலாடியில் பொதுக்கூட்டம்

23-3-34 மாலை 6-மணிக்கு இவ்வூர் ஆண் பாடசாலையில் ஸ்ரீமான் K. V. பச்சையப்ப உடையார் அவர்கள் தலைமையில் கூடியது. கடவுள் வணக்கத்தின்பின் சங்கமும் பத்திரிகையும், செங்குந்தர் முன்னேற்றம், கல்வி, பெண்கல்வி, கைத் தொழில், ஒற்றுமை, ஜாதிஒற்றுமை காருண்யம் ஆகிய விஷயங்களைப்பற்றி திருவாளர்கள் ச. நா. குமரகுரு முதலியார், வ. சுந்தர நைனர், இராசப்ப உடையார், ஸ்ரீமதி சாலோமி சாலமன், திருவாளர்கள் V. P. குப்புசாமிப் பிள்ளை, N. கிருஷ்ணசாமிப் பிள்ளை, N. நாகப்ப முதலியார், M. நீலகண்ட முதலியார் ஆகியோர் உபந்யசித்தனர். பின்பு (1) ஊர்ப்பொதுவிலிருந்து செங்குந்த மித்திரனுக்கு ரூபா 30 செலுத்தி பரம்பரைச் சந்தாவாக சேரவேண்டுமெனத் தீர்மானித்து கிராமப் பெரியதனக்காரருக்கு அனுப்பப்பட்டது. (2) கிளைச் சங்கம் ஒன்று ஸ்தாபிக்க வேண்டுமெனவும், (3) அனைவரும் உடனே மித்திரனுக்குச் சந்தாதாரராய்ச் சேரவேண்டுமெனவும், (4) கல்யாண முதலிய விசேடங்களில் தலைச் சங்கத்திற்கு நான்கணா நன்கொடை வழங்க வேண்டுமென்றும், (5) சிறுவர், சிறுமிகளைத் தவறாமல் பாடசாலைக்கனுப்பி கல்வி பயிற்ற வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டன. வந்தனோபசாரத்தின் பின் சந்தன தாம்பூலம் வழங்கக் கூட்டம் இனிது நிறைவேறியது.

K.V. பச்சையப்ப உடையார், தலைவர்,
தோப்புளான் முதலியார் உபதலைவர்.

### காஞ்சி கிராமத்திய பொதுக் கூட்டம்

21-3-34 மாலை 2-மணிக்கு போர்டு ஆண்பாடசாலையில் தாலுக்கா போர்டு மெம்பர் ஸ்ரீமான் N. முத்துராம் ரெட்டியார் அவர்கள் ஆதரவில் பஞ்சாயத்துக் கோர்ட்டு தலைவர் ஸ்ரீமான் M. வெங்கடாசல முதலியார் அவர்கள் தலைமையில் ஓர்பொதுக்கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் சமூக முன்னேற்றம், பொதுசேவை, கல்வியின் அவசியம் புதிய உலகம், சடங்கு நீத்தல், ஒற்றுமை, வாசக சாலையின் அவசியம், பொறுமை, கிராம முன்னேற்றம், சிக்கனம், பெண்கல்வி ஆகிய விஷயங்களைப் பற்றி முறையே ஸ்ரீமான்கள் ச. நா. குமரகுரு முதலியார், N. முத்துராம் ரெட்டியார். N. நாகப்ப முதலியார், V. P. குப்புசாமி, P. V. அழகேசன், M. நீலகண்டன், R. நாராயணசாமி, R. கோவிந்தசாமி, P. பாண்டுரங்கம், C. நடேசன், அரங்கசாமி ஆகியோர் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பின்பு கிளைச்சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், வாசகசாலை யொன்று நிறுவ வேண்டுமென்றும், கட்டாயக் கல்வியைப் பரவச் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டு வந்தனோபசாரத்தின் பின் கூட்டம் இனிது நிறைவேறியது.



பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டும், தாலுக்கா போர்டு மெம்பருமான உயர்திரு. N. முத்துராம் ரெட்டியார் அவர்கள் சங்கத்தில் ஒத்துழைத்தமைக்கு மிகவும் நன்றி உரியதாகுக.

P. V. அழகேசன்

## மதுரை ஜில்லா

### செங்குந்தத் தொழிலாளர் அபிவிருத்தி கழகம், தல்லாகுளம்

மேற்படி கழகம் தல்லாகுளத்தில் வசிக்கும் நம்குல தொழிலாளர்களின் தொழில் முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் கருதி, நம் குல இராப் பாடசாலை மானேஜர் திரு. P. V. முத்துக்கருப்ப முதலியாரவர்கள் முயற்சியால் ஷை பாடசாலைக் கட்டிடத்தில் 26-2-34 காலை 10 மணிக்கு ஸ்தாபனம் செய்யப்பட்டது. அவ்வமயம் உயர்திரு S. பாலசுப்பிரமணிய முதலியாரவர்கள் தலைமையின்கீழ் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கடவுள் வணக்கத்திற்குப் பின் பெரியார்கள் பலர் கழக ஸ்தாபிதத்தின் காரணம், கழகத்தின் நோக்கங்கள் முதலியவைகளைப்பற்றி விரிவாக சொற்பொழிவாற்றினார்கள். பிறகு தலைவர் பின்னுரை கூறியதும் சிற்றுண்டி வழங்கப்பட்டு காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது நிறைவேறியது.

### கழக உத்தியோகஸ்தர்கள்

தலைவர் : உயர்திரு. S. பாலசுப்பிரமணிய முதலியார். உபதலைவர்கள்: T. M. திருச்சிற்றம்பல முதலியார். K. V. கேத்திரபால முதலியார். அமைச்சர்கள் : S. V. வீரப்பன். S. M. T. ராஜன். பொக்கிஷதார் : S. V. கனகசபாபதி முதலியார். நிர்வாக அங்கத்தினர்கள் : திருவாளர்கள், P. V. முத்துக்கருப்ப முதலியார், S. செண்பக முதலியார், S. K. குமர முதலியார், S. A. செண்பக முதலியார், S. பழனியப்ப முதலியார், M. மாயாண்டி முதலியார், C வல்லசித்த முதலியார்.

### செங்குந்த மாணவர் கழகம், மதுரை

மதுரையில் வதியும் நம் குல மாணவர்கள் கல்வி, ஒற்றுமை, உபந்யாசித்தல், கைத்தொழில் இவைகளில் முன்னேற்ற மடையும் பொருட்டு தல்லாகுளம் நம் குல இராப் பாடசாலையில் ஓர் கூட்டம் 25-2-34-ல் நடைபெற்றது. திரு. K. V. கேத்திரபால முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். மாணவர்கள் P. சித்தநாதனும், M. பாக்கியமும் மாணவர் கடமை, கொல்லாமை என்பதுபற்றியும், திரு. S. V. வீரப்பன் அவர்கள் கல்வி என்பது பற்றியும், ஷை இராப் பாடசாலை மானேஜர் இராப் பாடசாலையின் அவசியம் என்பதுபற்றியும் சொற்பொழிவுகள் நிகழ்த்தியபின் சங்க உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சிற்றுண்டி வழங்கியபின் கூட்டம் கலைந்தது.

## செங்குந்த இளைஞர் கழகம், மதுரை

நாளது 18-3-34 ஞாயிறன்று காலை 7-30 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் தலைவர் திரு. நா. ப. பழனிக்குமார முதலியார் அவர்கள் தலைமையில் நிருவாகக் கூட்டமொன்று நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட விஷயங்கள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

1. கடந்த 21-1-34-ல் நடந்த கூட்டத்தில் சங்கத்திற்கு சில பத்திரிகைகள் வாங்குவதற்குப் பணம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டவர்களில் பணம் கொடுத்த மூவர் தவிர மற்றையோர்கள் பணம் கொடுக்கும் வரை அவசியமான பத்திரிகைகளை சங்கத்தின் செலவில் வாங்கிக்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

2. தல்லாகுளத்தில் தெருக்களில் மின்சார விளக்குகள் இல்லாதிருப்பதையும் சாக்கடைகள் கட்டாதிருப்பதையும் நகர பரிபாலன சபை அங்கத்தினருக்கும் கமிஷனரவர்களுக்கும் தெரிவித்து வேண்டுவன செய்யுமாறு தீர்மானிக்கப்பட்டது.

3. சங்கத்தின் நோக்கத்தைப்பற்றியும் நம்மவர் கடமையைப் பற்றியும் அறிக்கை தயாரித்து அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு காரியதரிசியைக் கேட்டுக்கொள்ளுகிறது.

இன்னும் சில விஷயங்களும் ஆலோசிக்கப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

க. சண்முகவேலு,
காரியதரிசி

## திருநெல்வேலி ஜில்லா

### சங்கர நயினார் கோவில்

22-2-34-ந்தேதி இரவு 8-மணிக்கு S. பழநியாண்டி முதலியார் தலைமையில் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் பொதுக்கூட்டம் ஒன்று கூடியது. தலைவர் சீர்திருத்தம் என்பது பற்றியும், திரு. S. M. திருவுடையா முதலியார் செங்குந்தரும் கல்வியும் என்பதைப் பற்றியும் உபந்யசித்த பின் (1) வடாற்காடு ஜில்லா மகாநாட்டில் மாதர் மகாநாடும் சேர்த்துக் கூட்டவேண்டுமென்றும் (2) மகாநாட்டு மலரில் காணப்படும் மகாத்மா உபதேசமாகிய 'ஏழைகள் பணம், எரிக்கும் நெருப்பாகும்' என்பதைத் துண்டுப் பிரசுரமாக வெளியிட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது நிறைவேறியது.

S. பிச்சாண்டி முதலியார்

## இராமநாதபுரம் ஜில்லா

### மண்டல மாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

29-3-34ல் இரவு 7-30-மணிக்கு இச்சங்கத்தின் அவசரக்கூட்டம் ஒன்று ம-ா-ா-ஸ்ரீ மு. ஆ. பாதம்பிரியா முதலியார் அவர்கள் தலைமையில் கூடியது. கடவுள் வணக்கத்தின் பின் காரியதரிசியால் முன் கூட்ட நடவடிக்கை படிக்கப்பட்டதும் கீழ்க்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன. (1) சங்கத்திலுள்ள புஸ்தகங்களை வைப்பதற்கு பீரோ ஒன்று வேண்டியதின் நிமித்தம் அதிகமாக சந்தா ரூபாயை



வைத்திருப்பவர்களிடம் வசூல் செய்து டை பீரோ வேலையை முடிக்க வேண்டும். (2) சந்தா வசூலை நாளது ஏப்ரல்மீ 1உயிலிருந்து வசூல் செய்வதற்கு அ. குருசாமியும் கோ. அய்யம்பெருமாளும் நியமிக்கப்பட்டனர். (3) முதுகுளத்தூர் தாலூகா போர்டார் இச்சங்கத்துக்கு மனமுவந்து நன்கொடையாக வழங்கிய 216-புஸ்தகங்களையும் பெற்றுக்கொண்டு அவர்களுக்கு சங்கத்தின் நன்றியறிதலைத் தெரிவிக்கப்பட்டது. இத்துடன் இரவு 10-30-மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைவுற்றது.

சு. வே. துநசாமி முதலியார், அமைச்சர்

### மண்டலமாணிக்கம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத்தின் வாசகசாலை தர்மப் பண்டு லாட்டரிச் சீட்டு

12-3-34ல மாலை 4-மணிக்கு செங்குந்தர் பாவடி பொது மடத்தில் மண்டல மாணிக்கம் கிராம ஹெட் மேன் ம-ா-ா-ஸ்ரீ A. குருசாமி நாய்க்கர், போர்டு பாடசாலை ஹெட்மாஸ்டர் ம-ா-ா-ஸ்ரீ N. K. ராமசாமி அய்யர் முதலியோர் முன்னிலையில் டை சீட்டுக் குலுக்கியதில் கீழ்க்கண்ட நம்பர்களுக்குப் பிரைஸ் விழுந்திருக்கிறது. அந்த நம்பருள்ள டேப்ளிகேட்டு ரசீதுகளை கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பிப் பணத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டியது. பிரைஸ் விழுந்த விபரம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ரூ. 20 | 23 | 1589 | 274 | 583 | 910 | 1907 |
| நெ. 400 | 199 | 1594 | 292 | 607 | 931 | 1912 |
| | 250 | 1911 | 296 | 650 | 993 | 2005 |
| ரூ. 10 | 258 | 1927 | 302 | 652 | 996 | 2088 |
| நெ. 893 | 486 | 2030 | 356 | 668 | 1003 | 2342 |
| | 502 | | 388 | 684 | 1127 | |
| ரூ. 5 | 567 | ரூ. 0-8-0 | 428 | 692 | 1160 | |
| நெ. 902 | 571 | நெ. 9 | 430 | 710 | 1162 | |
| | 593 | 12 | 431 | 721 | 1168 | |
| ரூ. 3 | 658 | 15 | 467 | 786 | 1312 | |
| நெ. 1804 | 659 | 19 | 470 | 787 | 1330 | |
| | 663 | 84 | 473 | 797 | 1393 | |
| ரூ. 2 | 670 | 94 | 474 | 801 | 1396 | |
| நெ. 1917 | 709 | 148 | 494 | 802 | 1615 | |
| | 861 | 165 | 525 | 829 | 1618 | |
| ரூ. 1 | 1242 | 171 | 565 | 850 | 1629 | |
| நெ. 2 | 1310 | 234 | 575 | 881 | 1743 | |
| 17 | 1491 | 243 | 578 | 901 | 1802 | |

14-3-34 }
செ. அ. சங்கம் }

நா. ப. க. ராமசாமி முதலியார்,
மண்டலமாணிக்கம் போஸ்ட்,
இராமநாதபுரம் ஜில்லா

# நன்கொடை

## மணவை, திரு. ச. நா. குமரகுரு முதலியார்

## மூலம், வசூலான நன்கொடை விபரம்

வடாற்காடு ஜில்லா செங்கம் தாலுக்கா காஞ்சி, பிரபல மிராஸ்தார், புதுகுடி. நா. இராமசாமி முதலியார் (14-2-34) சுக்கிலபக்ஷ பிரதமையில் காலமானதின் ஞாபகமாக அன்னார் குமாரர், கோபால் முதலியார், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு மன முவந்தளித்த நன்கொடை ரூ. 0—8—0

போளூர் தாலுக்கா கடலாடி போர்டு ஆண்பாடசாலையில், (23-3-34)-ல் கூடிய பொதுக் கூட்டத்தின் தீர்மானத்தை அவ்வூரார் நடத்திக் காட்ட முன்வரும்படி, சிறந்த குலாபிமானி, ந. சு. முருகானந்த முதலியார் (சிவபத்தர்) அவர்கள் அளித்த நன்கொடை ரூ. 0-4-0

கடலாடியில் வசிக்கும் கல்யாணபுரம், தங்க. கு. வைத்திலிங்க முதலியார் அவர்கள் சங்கத்திற்கு அளித்த நன்கொடை ரூ. 0-4-0

கடலாடி. சிறந்த குலாபிமானிகளும் செங்குந்த சீமான்களும் ஆலய தர்ம பரிபாலனரும் ஆன கிராமப் பிரதிநிதிகள், ஊர்ப்பொதுப் பங்குப் பணத்திலிருந்து மனமகிழ்ந் தளித்த நன்கொடை ரூ. 5-0-0

இதே போல் ஊர்ப் பொதுப்பங்குப் பணத்திலிருந்து, அனைவரும் உதவும்படி ஞாபக மூட்டிய அவ்வூர்வாசிகளுக்கு நமது நன்றி என்றும் உரிமையாகுக.

24-3-34 கடலாடி. உயர் திருவாளர் நா. தெய்வசிகாமணி முதலியார் அவர்கள் நமது சங்கத்திற்கு மனப் பூர்வமாக அளித்த நன்கொடை ரூ. 0-8-0

செங்கம், தாலுக்கா, காஞ்சி கிராமம் பு. மாணிக்க முதலியார் குமாரர், திரு. நீலகண்டன் அவர்கள் போதனுமுறை பாடசாலையில் பயின்று தேர்ச்சியுற்றமையின் ஞாபகமாக வழங்கிய நன்கொடை ரூ. 0-4-0

காஞ்சி கிராமம், செங்குந்த மரபினர்கள். கிராமணி M. வெங்கிடாசல முதலியார் வகையறுக்கள் ஷையூர். கறைகண்டீஸ்வரர் தேவஸ்தானம் பங்குனிமீ பிர்மோர்ச்சவம், எட்டாந் திருவிழா அன்று சங்கத்திற்கு வழங்கிய நன்கொடை ரூ. 0-8-0

27-3-34 காக்கரசம் பாளையம், ந. அப்பாசாமி முதலியார் வழங்கிய நன்கொடை ரூ. 0-4-0

சந்தைப் புதுப்பாளையம் அடுத்த வீரானந்தல், என்னும் வீரனூர் செங்குந்த கனவான்கள் ஊர்ப்பொதுப் பங்குப் பணத்திலிருந்து வழங்கிய நன்கொடை ரூ. 1-0-0



விழுப்புரம், கௌரவ ஜெயில் விசிட்டர் டாக்டர் P. மாணிக்க முதலியார் அவர்கள் நமது சங்கத்திற்கு மனமுவந்து அளித்த நன்கொடை ரூ. 1-0-0

அரக்கோணம், கவால் பேட்டை ஆலை வியாபாரம் தளவா. குப்பண்ண முருகப்ப முதலியார் நமது சங்கத்திற்கு மனமுவந்து அளித்த நன்கொடை ரூ. 0-4-0

## தஞ்சை

### தி. அ. சண்முக முதலியார் மூலம்

கீழப்பெரும்பள்ளம் S. V. முத்துசாமி முதலியார் ஜேஷ்ட குமாரி சௌபாக்கியவதி சண்முக சுந்தரத்தம்மாளுக்கு 18-9-33-ல் ருதுஸ்நானம் நடைபெற்றபோது வழங்கிய நன்கொடை ரூ. 1-0-0

மேலப்பெரும்பள்ளம் ஜவுளி வியாபாரம் கொ. வைத்தியலிங்க முதலியார் கொ. அய்யாசாமி முதலியார் இவர்களது தாயார் வேலாயி ஆச்சியினது ஷருத்திர கிரியையின் ஞாபகமாக சங்கத்திக்கு வழங்கிய நன்கொடை ரூ. 1-0-0

கலியாணம்பூண்டி கிராமத்தில் ஸ்ரீமுகஹு தைமீ 22உ ஆதிவாரம் ஒட்டக்கூத்தர் சீவகாருண்ய செங்குந்த மடாலயம் கடைக்கால் போட்டதின் ஞாபகமாக ஸ்ரீ திருஞான சிவயோக முருகாநந்த சுவாமிகள் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்குக் கொடுத்த நன்கொடை ரூ. 0—8—0

தஞ்சை ஜில்லா மேலப்பாதி கிராமம் ஸ்ரீமுகஹு வைகாசிமீ 15உ வை. மு. சொக்கலிங்க முதலியாருக்கும் கொரநாடு சாமிநாத முதலியார் மகன் ராஜாம்பாளுக்கும் நடந்த திருமண நன்கொடை வரவு ரூ. 1—0—0

கருவேந்த நாதபுரம் எ. அமிர்தலிங்க முதலியார் 18-3-34-ல் சங்கத்திற்கு வழங்கிய நன்கொடை ரூ. 0—8—0

1-4-34-ல் மணக்குடி V. R. கணபதி முதலியார் தமது 18 ஏக்கர் நிலத்துக்கும் 1933, 1934-ம் வருடத்திற்கு மகமை நெல்வரவு ரூ. 1—8—0

திருவிடமருதூர் விநாயக மூர்த்தி முதலியார் மகன் வேலாயுத முதலியாருக்கும், சிக்கல் அ. காளிமுத்து முதலியார் மகளுக்கும் ஸ்ரீமுகஹு ஆனிமீ 26-ல் நடந்த திருமணத்தில் வழங்கிய நன்கொடை ரூ. 1—0—0

## மன்னார்குடி

### நாட்டாண்மை பெரி. ருமு. நடராஜ முதலியார் மூலம் வசூலானவை

ஸ்ரீமுகஹு ஆனிமீ 8-ல் அருணாசல முதலியார் திருமணத்தில் வழங்கப்பட்ட நன்கொடை. ரூ. 1—0—0

ஆடிமீ 15உ சட்டநாத முதலியார் தமையனார் மகள் திருவதி மீனாட்சி வளையல் காப்பின்போது வழங்கப்பட்ட நன்கொடை ரூ. 0—8—0

ஆவணி 28 கீழ்த்தெரு செ. பழநியாண்டி முதலியார் சாவித்திரி பரிசத்தின்போது வழங்கிய நன்கொடை ரூ. 0—8—0

புரட்டாசி 16-ல் காத்தான் முதலியார் மகள் திருமதி கமலம் வளையல் காப்பில் வழங்கியது ரூ. 0—4—0

சோமசுந்தர முதலியார் மகள் உண்ணுமுலை வளையல் காப்பு நன்கொடை ரூ. 0—4—0

மார்கழி 16-ல் வயித்தியலிங்க முதலியார் மனைவியார் வளையல் காப்பு நன்கொடை ரூ. 0—4—0

மாசி 14-ல் பழநியாண்டி முதலியார் மனைவியார் வளையல் காப்பு நன்கொடை ரூ. 0—8—0

பங்குனி 12-ல் செ. பழநியாண்டி முதலியார் மகள் திருமதி சாவித்திரி வளையல் காப்பு நன்கொடை ரூ. 0—4—0

---

## நமது மகிழ்ச்சி

விழுப்புரத்தில், 'நியோ சயன்டிபிக் பார்மஸி' என்ற பெயருடன் வைத்தியசாலை வைத்து நடத்திவருகின்ற சேலம் டாக்டர் P. மாணிக்க முதலியார் அவர்கள் சிறைக்கோட்டத்தின் கௌரவ பார்வையாளராக (ஹானரரி ஜெயில் விசிட்டர்) நியமிக்கப்பெற்றிருப்பதாகக் கேட்டு மிக்க மகிழ்ச்சி யடைகிறோம்.

இவர்கள் விழுப்புரத்தில் நிறைந்த மதிப்பு வாய்க்கப் பெற்றவர். தம்மிடம் வருகின்ற பிணியாளர்களை நன்கு கவனித்துத் தக்கபடி மருந்துகளை வழங்கும் இயல்பினர். இயற்கையில் இனிமையாய்ப் பேசும் தன்மையினர். இத்தகையாளர் ஜெயில் விசிட்டராக நியமிக்கப் பெற்றது மிகவும் பொருத்தமே யாகும்.

---

## முக்கிய அறிவிப்பு

ஏப்ரல் 1-ந் தேதி முதல் புக்போஸ்ட் விகிதம் அரைஅணாவிலிருந்து முக்காலணாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அநேக அன்பர்கள் பழைய விகிதப்படி வியாசங்கள் முதலியவற்றை அனுப்புவதால் நமக்கு அதிக நஷ்ட மேற்படுகின்றது. இனி புக்போஸ்டில் அனுப்பப்படும் வியாசங்கள் முதலியவற்றிற்கு புதிய விகிதப்படி ஸ்டாம்பு ஒட்டப்படவில்லையாயின் அவைகள் திருப்பி அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஆசிரியர்.

---

## மார்ச் மாத சந்தா வசூல

### வடாற்காடு ஜில்லா

தேவிகாபுரம்

அ. முருகப்ப முதலியார் ... 4 8 0
அ. குழந்தைவேல் முதலியார் ... 4 8 0

### கோயமுத்தூர் ஜில்லா

ஊத்துக்குழி

G. பாட்டப்ப முதலியார் ... 1 8 0

ஈரோடு

ராமசாமி முதலியார் ... 1 8 0
E. முத்துசாமி முதலியார் ... 1 8 0
கு. வீரப்ப முதலியார் ... 1 8 0
மு. சின்னப்ப முதலியார் ... 1 8 0

கோதவாடி

P. அங்கப்ப முதலியார் ... 2 0 0

மருளையம்பாளையம்

M. K. கந்தசாமி முதலியார் ... 4 8 0

### தஞ்சாவூர் ஜில்லா

மன்னார்குடி

தா. வெ. கோவிந்த முதலியார் ... 3 0 0

மதுரை

P. V. மூத்துக்கருப்ப முதலியார் ... 1 8 0

ரங்கூன்

S. M. மாசிமுத்து முதலியார் ... 1 8 0
A. பழநியாண்டி முதலியார் ... 1 8 0
ப. சி. தருமலிங்க முதலியார் ... 3 0 0
ராம. அ. சுந்தர முதலியார் ... 3 0 0
பா. கு. வெள்ளைச்சாமி முதலியார் ... 1 8 0
K. N. நாகசுந்தர முதலியார் ... 1 8 0
P. K. M. முத்துராம் முதலியார் ... 3 0 0
K. K. M. K. முத்துராம் முதலியார் ... 3 0 0
S. A. R. M இலட்சமண முதலியார் ... 3 0 0
A. V. பொன்னுசாமி முதலியார் ... 3 0 0
ஜி. முனிசாமி முதலியார் ... 3 0 0
தொ. வ. நாகசுந்தர முதலியார் ... 6 0 0
K. பதினெட்டாம்படி முதலியார் ... 1 8 0
கொ. அ. குற்றால முதலியார் ... 3 0 0

சிலோன்

K. குழந்தைவேலு முதலியார் ... 4 8 <0

Regd. No. M. 1514

## கட்டுரை எழுதுவோருக்கு

1. கட்டுரைகள் வரிக்கு வரி இடம் விட்டு, தெளிவான எழுத்தில், காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

2. வாழ்க்கைக்கு அவசியமான நீதிகளைப் புகட்ட வல்லதும், மன உற்சாகத்தை எழுப்ப வல்லதும், சிரிப்பை ஊட்டத் தக்கதுமாய் மித்திரனில் 2 அல்லது 3 பக்கத்துக்கு மேற்படாமல் இருக்கக்கூடிய கட்டுரைகளுக்கே பிரசுரிப்பதில் முதன்மை தரப்படும்.

3. கட்டுரையோடு தனிக் கடிதங்கள் எழுத வேண்டியதில்லை. எழுதுபவரின் பெயரும் விலாசமு மட்டும் கட்டுரையின் முகப்பில் குறிப்பிடுதல் போதுமானது.

4. கட்டுரைகளெல்லாம் 'ஆசிரியர்' விலாசத்திற்கே அனுப்பவேண்டும்.

## சங்க அறிக்கைகள்

மித்திரனில் பிரசுரிப்பதற்காக அனுப்பப்படும் சங்க நடவடிக்கைகள், பொதுக் கூட்ட நிகழ்ச்சிகள் யாவும் மிகச் சுருக்கமா யிருத்தல் வேண்டும்.

(ப - ர்.)

மிகவும் கொடியது எது?

பெண் மக்களை வாதிக்கும்

அஸ்தி சிராவக நோய்

அதிகச் சூட்டினால் மூத்திரத்துடனும் தனியாகவும், பால்போலும் சளிபோலும் அடிக்கடி போய், சத்துவங் குறைந்து, இடுப்புவலி; தேகவலி, ஓய்ச்சல், முதுகுவலி முதலிய உண்டாகி தேகம் மெலிந்து அநேகர் மடிகிறார்கள். க்ஷயநோ யுண்டாக இதுவுமோர் காரணமாம்.

பத்தியமில்லாத 15 நாள் மருந்து ரூ. 3—8—0

மிஸஸ். டாக்டர் கண்ணுசாமி

திருவாரூர்.

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31 Armenian Street, Madras, and is printed by A. Rangaswamy at The Progressive Printers, 2/17, Coral Merchant Street, Madras.